விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 மாசி 11 வியாழக்கிழமை (23.02.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 066

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்ட்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# மனிதஉரிமை ஆணைக்குழுவுக்கு எதிராக

# தீர்மானம் கொண்டுவர இலங்கை முயற்சி

## சீனா உட்பட நட்பு நாடுகள் ஆதரவு

**ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தும் வகையில் ஜெனிவாவில் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக தெரியவருகிறது.**

அரசாங்கத்தின் அனுசரணையில் கியூபா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் இணைந்து கொண்டுவர ஆலோசிக்கப்படும் இத் தீர்மானத்தில் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் வெளிப்படைத்தன்மை குறித்து கேள்வி எழுப்பப்படவுள்ளதாக தெரியவருகிறது.

இத் தீர்மானத்திற்கு சீனா, ரஷ்யா மற்றும் அல்ஜீரியா போன்ற பல நாடுகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் நிதி மற்றும் பணியாளர்கள் நியமனங்கள் தொடர்பாக வெளிப்படைத்தன்மை பேணப்பட வேண்டும் என இத் தீர்மானம் (24ஆம் பக்கம் பார்க்க)

## ஈரானிலிருந்து எரிபொருள் நிறுத்தியது அரசு

(கொழும்பு)

ஈரானிலிருந்து எரிபொருள் இறக்குமதி செய்வதை இலங்கை நிறுத்தியுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அப்பிராந்தியத்தில் நிலவும் நெருக்கடி காரணமாக ஈரானிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதை அரசாங்கம் நிறுத்தி மாற்று வழிகளை நாடியுள்ளதாக பெற்றோலியத் துறை அமைச்சர் (24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் கண் இழந்த பெண் ஊடகவியலாளர் சிரியாவில் உயிரிழப்பு



இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற போர் தொடர்பான செய்தி சேகரிக்க சென்றபோது கண்ணை இழந்த, களமுனை அனுபவத்தை (24ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை தோற்கடிக்க புதிய காய்நகர்த்தல்

## அமைச்சர் பீரிஸ் ஜெனிவாவில் தெரிவிப்பு

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் அடுத்த வாரம் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள நிலையில், தமக்கெதிராகக் கொண்டு வரப்படக்கூடிய எந்தவொரு தீர்மானத்தையும் தோற்கடிக்கத்தக்க வகையில் உறுப்பு நாடுகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கான பெரியளவிலான காய் நகர்த்தலை அரசாங்கம் ஆரம்பித்திருப்பதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஜெனிவாவில் தெரிவித்திருக்கின்றார்.

அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள இந்தக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு அழுத்தத்தைக் கொடுக்கும் வகையிலான தீர்மானம் ஒன்று கொண்டு வரப்படவிருப்பதாகவும், அதற்கு தமது நாடு ஆதரவளிக்கும் எனவும் அமெரிக்கா ஏற்கெனவே இலங்கைக்கு தெரியப்படுத்தியிருந்தது. இருந்தபோதிலும் இந்தத் தீர்மானம் பாதிப்பற்றதாக அமையும் எனவும் இதையிட்டு கவலை அடைய வேண்டியதில்லை எனவும் அமெரிக்கா இப்போது தெரியப்படுத்தி இருப்பதாகவும் அமைச்சர் பீரிஸ் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.



இந்த விவகாரத்தை பொறுத்தவரையில் அமெரிக்காவின் (24ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை மனித உரிமை பற்றி பிரி. நாடாளுமன்றில் விவாதம்

(லண்டன்)

இலங்கை அரசாங்கத்திற்கு ஒரு தெளிவான சமிக்ஞையை சரியான நேரத்தில் அனுப்புவதாக அமைகின்றது என 'சித்திரவதையிலிருந்து சுதந்திரம்' என்னும் பிரித்தானிய அறக்கட்டளை கூறியுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற சித்திரவதைக்குரிய தண்டனை வழங்கப்படாது இருக்கும் நிலைமையை முடிவுக்கு கொண்டுவர ஐக்கிய இராச்சிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க இதைவிடப் பொருத்தமான நேரம் அமையாது எனக்கூறும் இந்த நிறுவனம், புகலிடம் கோருவோரை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கு எதிராக ஆதரவு திரட்டி வருகின்றது.

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் நடந்ததும், அதன் பின்னர் தொடர்கின்றதுமான மோசமான மனிதவுரிமை மீறல்களுக்கு இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் தொடர்பில் ஒரு தீர்மானத்தை சர்வதேச மட்டத்தில் நிறைவேற்ற ஐக்கிய இராச்சிய அரசாங்கம் பிரதான பாத்திரத்தை வகிக்க வேண்டும் என இந் நிறுவனம் வலியுறுத்தியுள்ளது.

மேற்படி விடயங்களை உள்ளடக்கிய ஒரு மனுவை பிரித்தானிய அரசாங்கத்துக்கு அனுப்புவதற்காக இந் நிறுவனம் தயாரித்துள்ளது. இதுவரையில் இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கையெழுத்திட்டுள்ளனர். (எ-11)

# தவறாகப் பயன்படுத்தப்படும் குற்றவியல் நடைமுறைக்கோவை

## ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தை விமர்சிப்பவர்களை கைது செய்வதற்கு குற்றவியல் நடைமுறைச் சட்டம் நேர்மையற்ற வகையில் பயன்படுத்தப்படுவதாக நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி. நேற்றுக் குற்றம் சுமத்தியது.

இத்தகைய கைதுகள் தொடர்பாக கேள்வி எழுப்பிய ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, கட்டுநாயக்கவிலும், சிலாபத்திலும் வீதி ஆர்ப்பாட்டங்களின்போது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகங்களானவை, அரசாங்கத்தை விமர்சிக்கும் பல நபர்களை குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 120 ஆவது விதியின் கீழ் கைது செய்ய வழி வகுத்ததாகக் கூறினார்.

அச்சட்டத்தின் 120 ஆவது சரத்தானது அரசாங்கத்தை எவரும் எதிர்ப்பதை தடை செய்யவில்லை எனவும் அவர் கூறினார்.

துன்புறும் மக்கள் வீதியில் ஆர்ப்பாட்டத்திற்காக இறங்கினால் அவர்களை கைது செய்வதற்கு பொதுச் சொத்து சட்டத்தையும் அரசாங்கம் பயன்படுத்துவதாகவும் அநுர குமார திஸாநாயக்க கூறினார். (எ-11)

## 100 ஆர்.பி.ஜி. குண்டுகள் பொலிஸாரால் மீட்பு

(புத்தளம்)

புத்தளம் தில்லையடி பிரதேசத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பினையடுத்து, நூற்றுக்கும் மேற்பட்ட ஆர்.பி.ஜி.ரக குண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் புத்தளம், தில்லையடி பகுதியிலுள்ள இரும்புத் தொழில் செய்யும் வியாபாரி ஒருவரது வீட்டின் கூரை மீது மர்மப் பொருள் பறந்து வந்து விழுந்து வெடித்துள்ளது.

இந்த வெடிப்புச் சம்பவத்தை அடுத்து அங்கு சுற்றிவளைப்பில் ஈடுபட்ட பொலிஸார் ஒரு தொகை ஆர்.பி.ஜி. ரக குண்டுகளை மீட்டுள்ளனர்.

மேற்படி (24ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பின் பங்களிப்பின்றி தீர்வினை எட்ட முடியாது!

## அரசுக்கு ஐ.தே.க. அட்வைஸ்



தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பங்களிப்பு இன்றி இறுதித் தீர்வினை எட்ட முடியாது என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

அத்துடன் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் அமர்வுகளுக்கு உரிய முறையில் அரசாங்கம் தயாராகவில்லை என ஐக்கிய தேசிய கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அதனை எதிர்த்துப் போராடக்கூடிய வகையில் அரசாங்கம் தயாராகவில்லை என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

தீர்மானம் நிறைவேற்றும் முயற்சிக்கு எதிராக அரசாங்கம் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. சனல் 4 காணொளி வெளியிடப்பட்ட போதிலும் அதற்கு அரசாங்கம் உரிய முறையில் பதிலளிக்கவில்லை.

கற்றுக் (24ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உணவகங்களுக்கு தரச் சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள உணவகங்களுக்கு தரச்சான்றிதழ் வழங்கும் நடைமுறை எதிர்வரும் மார்ச் மாதம் முதல் அமுலுக்கு வரவுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் உணவகங்களில் சுகாதாரத்தைப் பேணுவதற்கான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு மற்றும் பணிமனைகள் மேற்கொண்டு வருகின்றன.

இதன்படி யாழ். மாவட்டத்திலுள்ள உணவகங்களில் சுகாதாரத்தைப் பேணுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் முகமாக உணவகங்களுக்கு எ தரச்சான்றிதழ், பி தரச் சான்றிதழ், சி தரச்சான்றிதழ் என வழங்கப்படவுள்ளது.

இதன்மூலம் உணவகங்கள் தமது தரத்தை உயர்த்தக் கூடிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும் எனவும் சுகாதாரமும் பேணப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-6)

# பாரிய கொள்ளைகளுடன் தொடர்புடைய இருவர் கைது

(கொழும்பு)

கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள கடைகள், காட்சியறைகள், சுப்பர் மார்க்கெட்டுக்கள் ஆகியவற்றில் 5 மில்லியன் ரூபாய் பெறுமதியான பொருட்களை கொள்ளையிட்ட 22 சம்பவங்களுடன் தேடப்பட்டுவந்த பாரிய கொள்ளை கோஷ்டிகளுடன் தொடர்புடையதாக தெரிவிக்கப்படும் இரண்டு சந்தேக நபர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொஹுவல, வெலிக்கடை, அத்துருகிரிய, தலங்கம, மிரிஹான, கடவத்தை, மஹரகம ஆதிய பகுதியில் சந்தேக நபர் ஒருவர் பொருட்களை கொள்ளையிட்டதாக தெரியவந்துள்ளதாக தெரிவித்த பொலிஸார் மற்றைய சந்தேக நபர் கொஹுவலவிலுள்ள இலத்திரனியல் காட்சியறையொன்றை உடைக்க முற்பட்டபோது கைது செய்யப்பட்டதாகவும் கூறினர்.

இச்சந்தேக நபரின் காரில் 3 கையடக்கத் தொலைபேசிகளும் 40 கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் காணப்பட்டதாகவும் பொலிஸார் கூறினர். கடுவெல பகுதியிலிருந்து கைது செய்யப்பட்ட சந்தேக நபரொருவருடன் இணைந்து இச்சந்தேக நபரும் கொள்ளையில் ஈடுபட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் ஒருவர் கடந்த 2011ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிட்டவர் எனவும் கைது செய்யப்பட்ட இருவரும் கொஹுவல பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். இவர்கள் இலத்திரனியல் உபகரணங்கள், பொருட்கள், நகைகள் பணம், புடைவை வகைகளைக் கொள்ளையிட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இதேவேளை, பாதுக்கை பகுதியில் 1.9 மில்லியன் ரூபாய் பெறுமதியான பொருட்களை கொள்ளையிட்ட கொள்ளைக் கும்பலொன்றுடன் தொடர்புடையதாகத் தெரிவிக்கப்படும் 7 பேர் ஹம்பாந்தோட்டை பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-11)

# தேவையற்ற காரணங்களைக் கூறி தண்டம் அடிக்கும் பொலிஸார்

## தீவக மக்கள் திண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

தேவையற்ற காரணங்களைக் கூறி வாகன உரிமையாளர்களிடம் ஊர்காவற்றுறைப் பொலிஸார் தண்டப்பணம் அடிப்பதாக தீவகமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

திடீர் திடீர் என சந்திகளில் தோன்றும் பொலிஸார் வாகனங்களை நடுவீதியில் மறித்து சோதனை நடவடிக்கையில் ஈடுபடுவதுடன் அவ்வாகனங்களை தாண்டிச் செல்ல முற்படுபவர்களை மறித்து தண்டம் அறவிடுகின்றனர்.

இது குறித்து நியாயம் கேட்க முற்படும் அரச உத்தியோகத்தர்கள் சிலரின் மீது தகாத வார்த்தைப் பிரயோகங்களையும் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

குறிப்பாக பிற்பகல் வேளைகளில் இடம் பெறும் இவ்வாறான சம்பவங்களால் தீவக மக்கள் மட்டுமன்றி தீவகப்பகுதியில் கடமையாற்றும் அரச ஊழியர்களும் பெரும் அவலங்களை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரங்களை பரிசோதிப்பதற்காக பெற்றுக்கொண்டு பின்னர் தண்டம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டை வழங்குவதும் அதன் பின்னரே சம்பந்தம் இல்லாத காரணத்தை கூறுவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டினர்.

இவ்வாறான சம்பவங்கள் குறித்து உரிய அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-1)

# புதிய தலைவர் தெரிவு

(கரவெட்டி)

கட்டைவேலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக செல்லப்பா செல்வராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி கட்டவேலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக்கான தேர்தல் கடந்த ஞாயிறு இடம்பெற்றது.

இதில் 61 விருப்பு வாக்குகள் பெற்று அவர் தெரிவு செய்யப்பட்டார்.

யாழ். மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் கண்காணிப்பில் இத் தேர்தல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11,24)

# ஆலோசனைக் குழுவில் சவேந்திர சில்வா

# ஆசிய நாடுகள் குழுவுக்கு அழுத்தம்!

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிகாக்கும் படைப்பிரிவின் நடவடிக்கைகள் தொடர்பான சிறப்பு ஆலோசனை குழுவிற்கு மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமை தொடர்பில் ஆசிய நாடுகள் குழுவுக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த ஆலோசனைக் குழுவுக்கு இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்ட மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமை தொடர்பில் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அமெரிக்கா தலைமையிலான மேற்கத்தேய நாடுகள், ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்கள் மற்றும் தமிழ் அமைப்புக்கள் மேஜர் ஜெனரல் சுபேந்திர சில்வாவின் இந்த நியமனம் தொடர்பில் ஆசிய நாடுகள் குழுவிடம் அதிருப்தி வெளியிட்டுள்ளதுடன் இவரின் நியமனத்தை மீள பெற்றுக்கொள்ளுமாறும் வலியுறுத்தியுள்ளனர்.



மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவின் இந்த நியமனம் தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை கலந்துரையாடிய இந்திய, பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை விலக்கிக்கொள்ள வேண்டும் என அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தன.

இந்நிலையில் மேஜர்ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கான வசதிகளை அரசாங்கம் அதிகரித்துள்ளது. இவரின் அலுவலகப் பாவனைக்காக வெளிவிவகார அமைச்சின் நிதியுதவியில் அதிநவீன வசதிகளைக் கொண்ட வாகனம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் சவேந்திர சில்வாவின் வீட்டுக்கான கொடுப்பனவை மாதாந்தம் 5 ஆயிரம் டொலரில் இருந்து 11 ஆயிரத்து 500 டொலராக வெளிவிவகார அமைச்சு அதிகரித்துள்ளது.

அதேவேளை ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி பாலித்த கோஹன்னவுக்கு இத்தகைய வசதிகள் வழங்கப்படவில்லை என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (எ-11)

# திருட்டுக் குற்றச்சாட்டு சந்தேக நபருக்கு மறியல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் 20 ஆயிரத்துக்கும் அதிகமான பணத்தினை திருடினார் என்ற குற்றச்சாட்டில் கைதான ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

வீட்டில் யாரும் இல்லாத நேரம்பார்த்து கடந்த இரு வாரத்துக்கு முன்னர் திருடினார் எனக் கருதப்பட்ட நபர் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்று யாழ். நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இவ் வழக்கு விசாரணையின் போது குறித்த நபர் வேறொரு வீட்டில் 10 பவுண் நகைகளை திருடினார் என்ற குற்றச்சாட்டு தொடர்பில் வேறொருவரால் முறைப்பாடு செய்திருந்தமை தெரியவந்தது.

இதைனையடுத்து குறித்த நபரினை எதிர்வரும் 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் மா.கணேசராசா உத்தரவிட்டார். (எ-4)

குரு பட்டாபிஷேக வாழ்த்து

சோ. சுதர்சன் சர்மா

"சிவமது மெனியாக"

இம்மந்திரத்தின் நெறிக்கமைய சிவபணியில் சிறந்து விளங்கும்
சோமசுந்தரக் குருக்கள் தம்பதியினரின் மகன்
சுதர்சன் சர்மாவிற்கு குருப்பட்டாபிஷேகம் இன்று நடைபெறும்
தினத்தில் அவரது இறைபணி மேன்மேலும் சிறந்து விளங்க
புத்தூர் விசாலாட்சி அம்பிகா சமேத விஸ்வநாத பெருமானை வேண்டி



வாழ்த்துவோர்
புத்தூர் மேற்கு மாதர் கிராம சங்க உறுப்பினர்கள்
புத்தூர் மேற்கு சி.க.கூ.சங்கம்
கௌரி மகளிர் சமூக அபிவிருத்தி சேமிப்பு கழகம்

(C-5895)

# போக்குவரத்து விதிகளை மீறிய 36 பேர் பொலிஸாரிடம் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

வீதி போக்குவரத்து சட்டங்களை மீறிய 36 பேர் 60 ஆயிரம் ரூபாய் அபராதம் செலுத்தினர்.

யாழ். மற்றும் கோப்பாய் பொலிஸாரினால் இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களுக்கு எதிராக தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியமை, அசுரவேகம், காப்புறுதி, அனுமதிப்பத்திரமின்மை என பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இவர்கள் நேற்று யாழ். நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது குறித்த 36 பேரும் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றத்திற்கு ஏற்ப அபராத தொகைகளை செலுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார். (எ-4)

EASY ENGLISH
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
புதிய உயர் கல்லூரி
விபரங்களுக்கு :0773212711
(7379)

# இன்று ஒரு தகவல்

## ராணி புகட்டிய ஞானம்

ஓர் ஊரிலே ஒரு ராஜா இருந்தார். அந்த ராஜாவுக்கு ஒரு ராணி. அவர்களின் அரண்மனைக்கு பெரிய பெரிய ஞானிகள் வருவது வழக்கம்.

அந்த ஞானிகளின் உபதேசங்களையெல்லாம் ராணி தொடர்ந்து தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தாள். அதன் விளைவாக அவளும் ஒரு ஞானியாகி விட்டாள்.

அதுமட்டுமன்றி, தன் உருவத்தை மாற்றிக் கொண்டுஆகாயத்தில் பறக்கும் சித்தியும் அவளுக்குக் கிடைத்தது. நினைத்தால் அவளால் பறக்கலாம். அப்படிப்பட்ட சக்தி அவளுக்குக் கிடைத்தது. ராஜா உடனே ராணியிடம் பேச ஆரம்பித்தார்.

இதோபார்! நானும் உன்னைப்போல் ஒரு ஞானியாகவேண்டும். ஆகையால் எனக்கும் உபதேசம் செய் என்று கேட்டார். அதற்கு ராணி, "நீங்கள் ஞானியாக வேண்டுமானால் அனைத்தையும் துறப்பதற்குத் தயாராக இருக்கவேண்டும். எல்லாவற்றையும் விட்டு விடும் அளவுக்கு இன்னும் உங்களுக்கு வைராக்கியம் வரவில்லை" என்று சொல்லி விட்டாள்.

சரி என்று கூறி ராஜா அமைதியாக இருந்து விட்டார். நாட்கள் நகர்ந்து மாதங்களாகின. அந்த ராஜா காட்டுக்குச் சென்று தவம் செய்ய வேண்டும் என்று விரும்பினார். உடனே அங்கே இளம் முனிவரைப் பார்த்து வணங்கினார்.

"நான் நீண்டகாலமாகத் தவம் செய்து வருகின்றேன். ஆனால், மனநிம்மதி எனக்கு இன்னும் கிடைக்கவில்லை. தாங்கள்தான் அருள்புரிய வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

அதற்கு அந்த இளம் முனிவர் "எல்லாவற்றையும் துறக்கவேண்டும் என்று உங்கள் மனைவி ஒருசமயம் உங்களுக்கு உபதேசம் செய்தாளே! அதன்படி அனைத்தையும் விட்டு விட்டீர்களா?" என்று கேட்டார்.

"எல்லாவற்றையும் விட்டுவிட்டேன். இன்னும் இந்த ஆச்சிரமத்தைத்தான் துறக்கவில்லை!" என்று கூறிக்கொண்டே அந்த ராஜா ஆச்சிரமத்தில் இருந்த ஒவ்வொரு பொருளையும் எடுத்து அக்கினியில் போட்டார். இவற்றையெல்லாம் அக்கினியில் போடுகிறீர்கள். ஆனால் இவை அனைத்தும் இயற்கைக்கு அல்லவா சொந்தம்? என்று இளம் முனிவர் வினவினார். "சரி... அப்படியென்றால் எனது உடம்பை நான் துறக்கிறேன்" என்று ராஜா கூறினார்.

அவ்வாறு கூறிக்கொண்டே நெருப்பில் குதிக்கச் சொன்னார். உடனே இளம் முனிவர் ராஜாவைத் தடுத்து நிறுத்தி, "உடம்பும் உங்களுக்குச் சொந்தமில்லை! அவையெல்லாம் பஞ்ச பூதங்களுக்கு சொந்த மானவை!" என்று சொன்னார்.

ராஜா யோசித்தார் "அப்படியென்றால் எனக்கு என்னதான் சொந்தம்?" என்று கேட்டார்.

" உங்களது அகங்காரம் தான் உங்களுக்குச் சொந்தம். நீங்கள் துறக்க வேண்டியதும் அதுதான். முதலில் அதை விட்டுவிடுங்கள். அது உங்களிடம் இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்கள்.

அகங்காரம் இருப்பதால் தான் இந்த உலகப் பொருட்கள் உங்களுக்குச் சொந்தம் என்று உங்களுக்குத் தோன்றுகிறது என்று இளம் முனிவர் உருவில் இருந்த ராணி சொன்னார்.

உடனே ராஜா, " இதோ என்னிடமிருக்கும் அகங்காரத்தை விட்டுவிட்டேன்" என்றார். அதன் பின்புதான் அந்த ராஜாவும் ஞானியானார். ராணிக்கு கிடைத்தது போன்ற சித்தியும் அவருக்குக் கிடைத்தது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தேசிய கைத்தொழில் அதிகாரசபையால் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் ஏற்பாட்டில் தகவல் தொடர்பாடல் கற்கைநெறி, ஹோட்டல் முகாமைத்துவம் ஆகிய கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பயிற்சி அதிகார சபை மாவட்ட முகாமையாளர் கி.கிருஸ்ண பாலன் அறிவித்துள்ளார்.

இதில் ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சி நெறியான ஞாணம்ஸ் ஹோட்டல் நிறுவனத்துடன் இணைந்து நடாத்தப்படவுள்ளது.

இக்கற்கை நெறியினை பயில விரும்புபவர்கள் க.பொ.த.(சா/த) வரை கல்வி கற்றிருக்க வேண்டும். விண்ணப்பமுடிவு திகதியன்று 16 வயது முதல் 35 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தில் தேசிய சான்றிதழ் SLCDL (Srilanka Computer Driving Licence), CAA(Computer Application Assistant) ஆகிய பயிற்சி நெறிகள் யாழ்ப்பாணம், மானிப்பாய் பயிற்சி நிலையங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இத்தகவல் தொடர்பாடல் பயிற்சி நெறிகளை பயிலவுள்ளோர் க.பொ.த சா/த பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன் கூடிய 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது ஏதேனும் 4 பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங் களில் சித்தி அல்லது ஏதேனும் 3 பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியுடன் க. பொ.த (உ/த) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியும் இருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 வயது முதல் 25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். மேற்படி இவ்விரு பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்க தகுதி உடையவர்கள் முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டு சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தவறாது குறிப்பிட்டு மாவட்ட முகாமையாளர், நைற்ரா (NAITA), இல .7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் மார்ச் முதலாம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-7)

# இலவச கண் சிகிச்சை முகாம்

(மல்லாவி)

வவுனியா பகவான் சத்திய சாயிசேவா நிலையம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் கண் சிகிச்சை வைத்தியர்களுடன் இணைந்து நடாத்தும் இலவச கண் சிகிச்சைமுகாம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு மு/ஒலுமடு தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் கல்வி வலய முன்னாள் வலயக் கல்விப்பணிப்பாளர் த.மேகநாதன் தெரிவித்துள்ளார்.

இவ் இலவச கண்சிகிச்சை முகாமானது வன்னிப்போரின் போது இடம்பெயர்ந்து மீள்குடியேறியுள்ள மக்களின் நன்மை கருதி முற்றுமுழுதாக இலவசமாக நடாத்தப்படுகின்றது.

இதில் கண் பரிசோதனைமூலம் பார்வைக்குறைபாடு உடையவர்களுக்கு அன்றைய தினமே மூக்குக்கண்ணாடி வழங்கப்படவுள்ளது. எனவே பொதுமக்கள் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பயன் பெறுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ-3-15)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 60 | 30 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 50 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 45 |
| தக்காளி | 10 | 30 | 25 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 30 | 30 |
| கோவா | 30 | 25 | 25 |
| கரட் | 60 | 60 | 40 |
| பூசணி | 30 | 40 | 35 |
| புடோல் | 20 | 30 | 20 |
| வாழைக்காய் | 35 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 65 | 40 | 70 |
| பெரிய வெங்காயம் | 65 | 50 | 65 |
| பாகற்காய் | 70 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 40 | 60 |
| பயற்றங்காய் | 120 | 120 | 110 |
| லீக்ஸ் | 70 | 70 | 70 |
| பீற்றூட் | 40 | 20 | 20 |
| கறிமிளகாய் | 70 | 80 | 60 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 500 |
| போஞ்சி | 35 | 30 | 30 |
| கத்தரிதம்புள்ள | - | 20 | 25 |
| கீரை - 1 பிடி | 5-6 | 15 | 10 |
| தேசிக்காய் | 30 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 20 | 25 |
| வெங்காயப்பூ | 30 | 60 | 50 |

# இராசி பலன்

*23.02.2012*

*(மாசி 11, புதன்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு*
*துதியை பின்னிரவு 6.22 மணிவரை*
*பூரட்டாதி பின்னிரவு 3.35 மணிவரை*
*இராகுகாலம் 2.00-3.30 மணிவரை*
*சுபநேரம் 8.00-9.30 மணிவரை*

**மேடம்** வருமானம் அதிகரித்து வளம் காணும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும் நாள், போசனசுகமுண்டு.

**இடபம்** அதிக பிரயாசையுடன் செயற்படுவீர்கள், தூரதேசச் செய்திகள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், புதிய சொத்துக்கள் வாங்க எடுத்த முயற்சி வெற்றியளிக்கும்.

**மிதுனம்** பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், திடீர்ப்பயணங்களால் ஏற்றம் பெறுவீர்கள், தந்தை வழி உறவினரால் அனுகூலமுண்டு, விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்துசேரும்.

**கடகம்** ஆரோக்கியக் குறைவான நாள், விலையுயர்ந்த பொருட்களைக் கவனமாக கையாள்வது நல்லது, குடும்பப் பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கூறலாம்.

**சிங்கம்** களஸ்திர சுகமுண்டு, சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், உறவினர் வருகையுண்டு.

**கன்னி** தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறலாம், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**துலாம்** வளர்ச்சி கூடும் நாள், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், பிள்ளைகளால் பெருமை சேரும் நாள், பூர்வ புண்ணிய கருமங்களில் நாட்டம் செல்லும்.

**விருச்சிகம்** தாய் வழிஉறவில் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கப் பெறுவீர்கள், வீட்டுத்தேவைகளை நிறைவு செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** செய் தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், சுவாரஷ்யமான நாள், பொருளாதார நிலைதிருப்திதரும்.

**மகரம்** வாக்கு மேன்மை உண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும், மனச் சந்தோசம் அதிகரிக்கும், தொழிலில் எதிர்பாராத நன்மைகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**கும்பம்** மனக்குழப்பங்கள் அதிகரிக்கும் நாள், புதிய தொடர்புகள் ஏற்படலாம், போசன சுகமுண்டு, ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும்.

**மீனம்** காரிய அலைச்சல்கள் ஏற்பட்டாலும் சிறுசிறு ஆதாயம் பெறுவீர்கள், சுபசெலவுகள் அதிகரிக்கும், மாலை நேரம் மகிழ்ச்சி தரும் பயணமொன்று உருவாகலாம்.

வளவன்

# தெல்லிப்பளை ம.க கட்டட திறப்பு விழா

யா/தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் பார்வையாளர் அரங்கு, அழகியல், விளையாட்டு வகுப்பறைகள் கொண்ட பல்வளாக புதிய கட்டடம் நாளை வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, கௌரவ விருந்தினராக தேசமாண்ய க.பாலேந்திரா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர் என பாடசாலைச் சமூகம் அறிவித்துள்ளது. (அ-7)

# விசேட அ.அட்டை வழங்கல்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பொலிஸார் ஆட்டோ சாரதிகளுக்கு விசேட அடையாள அட்டை வழங்கவுள்ளனர்.பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆட்டோ சாரதிகளுக்கு இவ் அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது.ஆட்டோ வாகனங்களை அடையாளம் கண்டுகொள்ளக்கூடிய வகையில் இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆட்டோ என்றும் அவ்ஆட்டோக்களில் பொறிக் கப்பட்டுள்ளது. (அ-3-10)

# மாகாணமட்ட விஞ்ஞான ஒலிம்பியாட் தெரிவுப்பரீட்சை

மாகாண கல்வித் திணைக்களத்தினால் மாகாணமட்ட விஞ்ஞான ஒலிம்பியாட் தெரிவுப்பரீட்சைகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட மாணவர்களுக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் வவுனியா, முல்லைத்தீவு,மன்னார் மாவட்ட மாணவர்களுக்கு வவுனியா சி.சி.த.க. பாடசாலையிலும் நடைபெறவுள்ளது என வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இவ் ஒலிம்பியாட் தெரிவுப் பரீட்சையானது கடந்த 2010 ஆம் ஆண்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து ஒலிம்பியாட் போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கே பரீட்சை இடம்பெறவுள்ளது.

இதில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரம் வருமாறு,

ஜெயானந்தராசா கிருஷிகன் (யாழ்/இந்துக்கல்லூரி), சந்திரராஜ் கோபிகா (யாழ்/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), இளங்கோ இளங்கீதன் (யாழ்/இந்துக் கல்லூரி),குகநேசன் சங்கவி (வ/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), சத்தியலிங்கம் சின்மயி (வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), அருளானந்தம் அபினந்தன் ( யாழ்.இந்துக் கல்லூரி),ஜீனிஸ் பிகறாடோ ஜூட் மிதுசன் (மன்/சென்.சேவியர் மத்திய மகா வித்தியாலயம்), பானுஜன் ரவிசங்கர் (யாழ். இந்துக் கல்லூரி),காந்தரூபன் யுகேஸ் (மன்/சித்திவிநாயகர்மத்தியமகாவித்தியாலயம்), தியோஜனாஸ் ஹிலாரின்ந்நைனாஸ் (யா/இளவாலை ஹென்றீஸ் கல்லூரி), அருணகிரிநாதர் ஆதித்யா (யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), நகுலகுமார் அபிராமி (கிளி/திருவையாறு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), தேவகுமார் ஜூபிதரன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி) (அ-7)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் ஸ்ரீரதி முருகசோதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா, சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம், வல்லை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி லெப். டபிள்யூ. எம்.பி. வீரசூரிய, அச்சுவேலி பொலிஸ் பரிசோதகர் ஐ.பி. தியாகராசா, கௌரவிருந்தினர்களாக அச்சுவேலி உலவிக்குளம் சித்தி விநாயகர் தேவஸ்தானப் பிரதமகுரு கு.வை. விருத்த கிரீஸ்வரக்குருக்கள், அச்சுவேலி மத்திய கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் திருமதி ச. கனகராசா, யாழ். கல்வி வலய உடற் கல்வி ஆசிரியா ஆலோசகர் ஸ்ரீ.முருகதாஸ் காந்தன், பாடசாலை அபிவிருத்திக்குழுச் செயலாளர் கி. வரதராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-6)

* * * * * *

(யாழ்ப்பாணம்)

யா/இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிட்னி பல்கலைக்கழக பட்டதாரியும் யாழ்ப்பாண இந்துக்கல்லூரி விளையாட்டுத் துறை தலைவருமான சிவகுமாரன் மதியாபரணம் மற்றும் சிட்னி பொது நிறுவன நிர்வாகத்துறை அலுவலர் திருமதி ஜெயா சிவகுமாரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் பிரதம விருந்தினரின் பாரியார் பரிசில் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (அ)

# கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

(சாவகச்சேரி)

லன்கெம் நிறுவனத்தின் அனுசரணையுடன் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் தென்மராட்சியை சேர்ந்த 800 முன்பள்ளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் கே. பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராடசி பிரதேச செயலாளர் திருமதி அஞ்சலி தேவி சாந்தசீலன், சிறப்பு விருந்தினர்களாக லயன்ஸ் கழக பிரதி மாவட்ட செயலாளர் லயன் கே. எம். பத்மநாதன், லயன்ஸ் கழக மாவட்ட தலைவர் லயன் வி. ஸ்ரீபிரகாஸ், தென்மராட்சி கலாசார சபை செயலாளர் வை. இராஜரட்னம், கௌரவ விருந்தினர்களக தென்மராடசி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு. பாக்கியராஜா, லன்கெம் நிறுவன வட கிழக்கு முகாமையாளர் சி. ஜெயச்சந்திரன், தேசிய சேமிப்பு வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் கி.நி. ஜெனநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்வுள்ளனர். (அ-3-29)

# உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் ஒன்பது ஓட்டங்களால் வெற்றி

(கரவெட்டி)

வடமராட்சி கல்வி வலய கிரிக்கெட் வெற்றிக்கிண்ணத்தை இமையாணன் அ.த.க. அணிஸ்யத் தோற்கடித்து உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி அணி சம்பியனாகியது.

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான அணிக்கு 10 ஓவர் கொண்ட கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.10 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் நிலக்ஷன் 28, தயாபரன் 12, நிறோஜன், லவன் தலா 8 ஓட்டங்களைப் பெற்றனர்.

இமையாணன் அ.த.க. அணி பந்து வீச்சின் சார்பில் மாதுலன் 3, அருண் 2, பிரவிந்தன், வசீகரன் தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இமையாணன் அ.த.க. அணி 10 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 56 ஓட்டங்களை பெற்றது. இதில் மாதுலன் 23, நிதர்சன் 18 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சின் சார்பில் தயாபரன் 3, நிலக்ஷன் ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இறுதியில் உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி அணி 9 ஓட்டங்களால் வெற்றி பெற்று வடமராட்சி கல்வி வலயம் சம்பியனாகியது. (அ-3-24)




# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சித்தங்கேணி வட்டு கிழக்கு அந்திரான் கிராம ஜனசக்தி சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நிலையத் தலைவர் வெ. தேவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வலி.மேற்கு சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர், ஜே/157 கிராம சேவையாளர் க.சிறிதரன், வலி.மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் ரு.சி. பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

எனவே அனைத்து அந்திரான் கிராம மக்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.


அத்தோடு இக்கிராமத்தின் 2012 ஆம் ஆண்டு அபிவிருத்தியும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வடபகுதிக்கு வழங்கப்பட்டிருக்கும் இரண்டாயிரம் கோடி ரூபாவில் அபிவிருத்தி பற்றி ஆராயப்படும் என ஜனசக்தி சனசமூக நிலைய நிர்வாகம் அறிவித்துள்ளது. (அ)


# சாவ.ஆதார வைத்தியசாலைக்கு இரத்தப்பரிசோதனை இயந்திரம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்கு வருவோர் இரத்தப்பரிசோதனை மேற்கொள்வதற்காக நிக்கொட் நிறுவனத்தினால் இரத்தப் பரிசோதனை இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இவ் இயந்திரம் பொருத்தும் பணிகள் முடிவுற்றதும் இதுவரை காலமும் தனியார் ஆய்வுகூடத்தில் பணம் கொடுத்து இரத்தப் பரிசோதனை மேற்கொண்ட வெளிநோயாளர்களும் விடுதியில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்களும் இரத்தப் பரிசோதனை செய்து பயன்பெற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)





உடுவில் வடக்கு ஜே/ 186 பிரிவின் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிராம அபிவிருத்திச் சங்க உப தலைவர் சி. சந்தானகுமார சர்மா உரையாற்றுவதையும் மாதர் சங்க தலைவி மாணவி ஒருவருக்கு பரிசு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# இலங்கை- இந்திய கடற்றொழிலாளர்கள் கச்சதீவில் சந்திக்க அமைச்சர் டக்ளஸ் ஏற்பாடு

இலங்கை- இந்திய கடற்றொழிலாளர்கள் மத்தியில் நிலவி வரும் கடல் எல்லை பிரச்சினைகள் குறித்து நிரந்தர தீர்வு காணும் பொருட்டு இரு தரப்பு கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகளும் கச்சதீவில் சந்தித்து கலந்துரையாடுவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளார்.

இதன் பிரகாரம் கச்சதீவு பெருநாள் நிகழவிருக்கும் தினங்களில் ஒன்றான எதிர்வரும் மார்ச் 4ஆம் திகதி இரு தரப்பு கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகளும் இணக்கப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவிப்பு விடுத்துள்ளார்.

இதை ஏற்றுக்கொண்டுள்ள இரு தரப்பு கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளும் கச்சதீவில் நேரில் சந்தித்து இணக்கமாகவும் சுமுகமாகவும் தமது பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு விருப்பம் தெரி வித்துள்ளனர்.

இதேவேளை, இச்சந்திப்பிற்கான ஏற்பாடு குறித்து இரு தரப்பு கடற்றொழிலாளர்களும் தமது மகிழ்ச்சியை தெரிவிப்பதோடு அமைச்சர்களின் இந்த நடவடிக்கையை பாராட்டியும் உள்ளனர்.

குறிப்பாக தொழில் ரீதியாக தமது கடல் வளங்களை உரிய முறையில் அனுபவிக்க முடியாமல் பல்வேறு இடர்களையும் சுமந்து வடபகுதி கடற்றொழிலாளர்கள் இச்சந்திப்பின் மூலம் தமது வாழ்வாதார. உரிமைகளுக்கு நிரந்தர தீர்வு காணப்படும் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (அ-6)

# வடக்கில் குடும்ப சுகாதார உத்தியோகத்தர் நியமனம்

வடமாகாணத்தில் நிலவும் குடும்ப சுகாதார உத்தியோகத்தர் பதவிக்கான வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வாய்மூலமான பதிலுக்காக பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாசவால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் போதே பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக 953 குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர். அவர்களுக்கான பயிற்சிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்மொழிமூலம் கடமையாற்றக் கூடியவர்களே இந்த சேவையில் அமர்த்தப்படவுள்ளனர்.

வடமாகாணத்தில் 508 சுகாதார சேவைப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. இவற்றில் நிலவும் வெற்றிடங்களை கூடிய விரைவில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

2011ஆம் ஆண்டு மனித உரிமை ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான செயற்றிட்டத்தின் கீழ் மனித உரிமை பாதுகாவலர்களாக பயிற்சியளிக்கப்பட்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ்.பிராந்திய மனித உரிமை காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இச்சான்றிதழ் 43 பேருக்கு வழங்கப்படவுள்ளது.

அத்துடன் கடந்த 2011ஆம் ஆண்டு சர்வதேச மனித உரிமை தினத்தை முன்னிட்ட தேசிய ரீதியில் நடத்தப்பட்ட பதாகைப்போட்டியில் யாழ்.மாவட்டத்திலிருந்து இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மனித உரிமைகள் தொடர்பான சமகால விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்படவுள்ளதாகவும் யாழ்.பிராந்திய மனித உரிமைக் காரியாலயம் அறிவித்துள்ளது. (அ-2- 4)

# கைதியை கடத்திய வெள்ளை வான் குறித்து விசாரணை நடைபெறுகிறது

கொழும்பு மேல் நீதிமன்ற வளாகத்தில் வைத்து சிறைக்கைதி ஒருவர் கடத்திச் செல்லப்பட்ட சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட வெள்ளை வான் தொடர்பில் பூரண விசாரணை இடம்பெற்று வருவதாக வாழைத்தோட்டம் பொலிஸார் கொழும்பு பிரதான நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிதாரிகளால் கடந்த 13ஆம் திகதி குறித்த கடத்தல் சம்பவம் இடம்பெற்றது. கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வானின் இலக்கத்தை தற்போது இனங்கண்டுள்ளதாக வாழைத்தோட்டப் பொலிஸார் நீதிமன்றில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த வான் தொடர்பில் தகவல் அறிய மோட்டார் போக்குவரத்து ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்படுவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பில் நான்கு பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாகவும் அதில் நீதிமன்ற காவல் பொலிஸார் இருவரும் அடங்குவதாக வாழைத்தோட்டம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

# யௌவன அபிமான வேலைத்திட்டம் ஆரம்பிக்கும் நிகழ்வு

ஹற்றன் நஷனல் வங்கியினால் யு.என்.டி.பி.நிறுவன பயனாளிகளுக்கு எச்.என்.வி யௌவன அபிமானம் என்னும் வேலைத் திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சில்லாலை எமிரேட் யூத் பவுண்டேசன் மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வினை ஹற்றன் நஷனல் வங்கி தலைமைக்காரியாலய பிரதிப் பொதுமுகாமையாளர் சி.பி. அபேவிக்கிரம ஆரம்பித்து வைக்கவுள்ளார் என சங்கானை வங்கிகிளை முகாமையாளர் தயாகரன் அறிவித்துள்ளார்.

மேற்படி யௌவன அபிமான நிகழ்வானது இளைஞர், யுவதிகளுக்கு பலம்சேர்ப்பதாக அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)


## பதவி வெற்றிடங்கள்

One World In Innovage சர்வதேச கொம்பனிக்கு முகாமைத்துவ பயிற்சியாளர்கள் தேவை. (A.S.Manager, Supervisor) ஆகிய பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன. ஆறுமாத கால பயிற்சி. பயிற்சியின் போது 12,000 - 18,000 வரை பெற முடியும். தங்குமிடம் இலவசம். முல்லைத்தீவு, கிளிநொச்சி பயிற்சியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (தகைமை G.C.E O/L சாதாரணதர அறிவு அவசியம்.)

தொடர்புக்கு: 077 1363797, 077 6219536 (7555)





# வடமாகாண உதவிகளுக்காக ஐ.நா.கூட்டுத்திட்டம் கைச்சாத்து

(கொழும்பு)

வட மாகாண உதவிக்கான ஐ.நா.கூட்டுத் திட்டத்திற்கான ஒப்பந்தம் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

கொழும்பிலுள்ள பொருளாதார் அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்ற நிகழ்வின் போது அமைச்சர் பசில் ராஜபக்ஷ முன்னிலையில்அரசாங்கத்திற்கும் ஐ.நா.வுக்கும் இடையில் இந்த ஒப்பந்தம் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

அரசாங்கத்தின் சார்பில் வட மாகாண அபிவிருத்திக்கான ஜனாதிபதி விசேட செயலணியின் செயலாளர் எஸ்.பி. திவாரட்ண, ஐ.நா. சார்பில் அதன் பிரதிநிதி சுய்னே நண்டி ஆகியோரும் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

எதிர்வரும் 2013 தொடக்கம் 2018 வரையான காலத்திற்கு வடமாகாணத்திற்கு உதவி வழங்கும் வகையிலேயே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து மீளக் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கே இந்த நிதியுதவி பயன்படுத்தப்படவுள்ளது.

மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கான அடிப்படை வசதிகளை பெற்றுக் கொடுத்தல், வாழ்வாதாரத்தை மேம்படுத்தல்,அபிவிருத்தி திட்டங்கள் இந்த நிதியுதவி மூலம் முன்னெடுக்கப்படவுள்ளதாக வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி தெரிவித்தார்.

இதேவேளை, வடமாகாண மக்களின் நலன் கருதி மேலும் பல்வேறு திட்டங்கள் வடமாகாண சபையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விவசாயம், கால்நடை, மீன்பிடி, மின்சாரம், சுகாதாரம் உள்ளிட்ட பலதுறைகள் இந்த ஒப்பந்த மூலம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. உலக உணவுத்திட்டத்திற்கு இலங்கை ஐந்நூறு மெற்றிக் தொன் நெல்லை வழங்கும் எனவும் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு இவ் வைபவத்தில் தெரிவித்தார்.

(அ-2)

## வாகன விபத்தில் எட்டுப்பேர் காயம்

ஹினிதும பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் எட்டுப்பேர் காயமடைந்துள்ளனர். சிறியரக லொறியொன்று வீதியைவிட்டு விலகி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

ஹினிதும கல்விட்டிகல பகுதியை சேர்ந்தவர்களே நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. விபத்தில் காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக ஹினிதும வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கி ன்றனர்.

(அ-2)

# அரசாங்கம் நெல் கொள்வனவுக்காக ஒரு பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது

### வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு



பெரும்போக நெல் கொள்வனவு நடவடிக்கைகள் நேற்று முன்தினம் முதல் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன்படி அம்பாறை, மட்டக்களப்பு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நெல் கொள்வனவு இடம்பெற்றதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பெரும்போக நெல் கொள்வனவுக்காக அரசாங்கம் ஒரு பில்லியன் ரூபாவினை ஒதுக்கியிருப்பதாக கூறிய அமைச்சர் சம்பா கிலோவொன்றுக்கு 30 ரூபாவும் நாடு கிலோவொன்றுக்கு 28 ரூபாவும் நிர்ணய விலையாக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நெற்கொள்வனவுக்கு நிர்ணய விலை தீர்மானிக்கப்பட்டிருக்கும் அதேவேளை நெல்லின் தரத்தை அடிப்படையாகக் கொண்டு அவை கொள்வனவு செய்யப்பட வேண்டுமென நெற் சந்தைப்படுத்தும் சபைக்கு தான் பணிப்புரை விடுத்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

குறிப்பாக நெல்லின் ஈரப்பதனில் கூடுதல் கவனம் செலுத்துமாறு நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. நெல்லின் ஈரத்தன்மை 14 சதவிதத்திலும் குறைவாக காணப்படும் பட்சத்திலேயே அவற்றை நிர்ணய விலையடிப்படையில் கொள்வனவு செய்யுமாறு அமைச்சர் மேற்படி சபையிடம் கோரியுள்ளார்.

நெல்லின் ஈரப்பதன் 14 சதவீதத்திலும் அதிகரிக்கும் பட்சத்தில் அவற்றை களஞ்சியப்படுத்துவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியேற்படுவதனால் அவை முளைவிடுதல்,பூஞ்சணம் ஏற்படுதல் என்பவற்றுக்குள்ளாவதால் வீண்விரயம் ஏற்படுவதனை தவிர்க்கும் பொருட்டு அவ்வாறான நெல் கொள்வனவினை முற்றாக தவிர்த்து கொள்ளவேண்டும். இல்லையேல் நெல்லின் தரமடிப்படையில் நிர்ணய விலையிலும் குறைந்த விலைக்கு அவற்றை கொள்வனவு செய்யுமாறும் அமைச்சர் நெற் சந்தைப்படுத்தும் சபையினை கேட்டுக் கொண்டுள்ளார்.

நாட்டின் எந்தவொரு விவசாயியும் பாதிப்படையாத வகையில் பெரும்போக நெல் கொள்வனவு நடைபெற வேண்டுமென்பதிலும் அமைச்சர் ஜோன்ஸ்டன் உறுதியாகவுள்ளார். நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் நெல் அறுவடைக்கேற்ப நெல் களஞ்சியசாலைகளை திறக்குமாறும் அமைச்சர் பணித்துள்ளார்.

இதனடிப்படையில் அநுராதபுரம், பொலநறுவை, பதுளை, மொனறாகலை, குருநாகல், அம்பாந்தோட்டை, வவுனியா, முல்லைத்தீவு, மாத்தறை, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் நெல் களஞ்சியசாலைகள் திறக்கப்படவுள்ளன. (அ-2)

## திருக்கேதீஸ்வரத்தில் வியாபாரி மரணம்

(மன்னார்)

மகாசிவராத்திரியை முன்னிட்டு மன்னார் திருக்கேதீஸ்வர கோவிலுக்கு வியாபாரப் பொருட்களை விற்பனை செய்வதற்காக வந்த குடும்பஸ்தர் ஒருவர் திடீரென்று மரணமடைந்துள்ளார்.

அம்பாறை மருதமுனையைச் சேர்ந்த முகம்மது சலீம் (வயது49) என்பவரே இவ்வாறு மரணமடைந்ததாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவரது சடலம் மன்னார் பொதுவைத்தியசாலையில் நேற்று முன்தினம் காலை ஒப்படைக்கப்பட்டது.

(அ-2)

# தமிழர்களும் முஸ்லிம்களும் அரசியல்தீர்வு விடயத்தில் குரல் கொடுக்க வேண்டும்

### யோகேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழர்களும் முஸ்லிம்களும் தமது அரசியல் அபிலாஷை விடயத்தில் ஒருமித்து குரல் எழுப்ப வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு செம்மண்ணோடை அல்-ஹம்றா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், கடந்த காலங்களில் இரண்டு சமூகங்களுக்குமிடையில் ஏற்பட்ட சில கசப்பான உணர்வுகளினால் தனித்தனியாக அரசியல் அபிலாஷைகளுக்காகக் குரல் எழுப்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் சிறுபான்மை இனமான தமிழர்களுக்கோ முஸ்லிம்களுக்கோ எந்த விமோசனமும் கிடைக்கவில்லை. பேரினவாத சக்திகளே பயன்பெற்றார்கள். இதிலிருந்து நாம் விடுபட வேண்டும்.

குறிப்பாக எமது கட்சி இனப்பிரச்சினைக்கான தீர்வொன்று காணப்படும்போது முஸ்லிம்களுக்கான அதிகாரப் பகிர்வும் இடம்பெற வேண்டுமென உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளன.

35 வருடங்களுக்கு முன்பு எமது அரசியல் வரலாற்றை நோக்கினால் கிழக்கில் பல முஸ்லிம் அரசியல் தலைமைகளை உருவாக்கிய பெருமை தமிழரசுக்கட்சிக்கு உரியது.

முஸ்லிம்களின் ஏகோபித்த தலைவரான மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் தந்தை செல்வாவின் அரசியல் பாசறையில் வளர்ந்தவர் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

1977 இற்கு மேற்பட்ட அரசியலை நோக்கினால் கல்குடா தொகுதியில் முஸ்லிம்கள் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் தேவநாயகம், தமிழரசுக் கட்சியில் போட்டியிட்ட மாணிக்கவாசகம் மற்றும் சம்பந்தமூர்த்தி போன்றோரை ஆதரித்தார்கள். இது இனங்களுக்கிடையிலான ஒற்றுமைக்கும் அடித்தளமாக அமைந்தது. இப்போது அப்படியான அரசியல் இல்லை. தேர்தல் காலங்களில் சில தரப்பினரால் இனவாதமே முன்னிலைப்படுத்தப்படுகிறது. இந்தநிலை மாற வேண்டும் என்றும் அவர் கூறினார்.

(அ-2)

## ஆன்மீக வகுப்பு

யாழ்.சின்மயாமிஷனின் ஆன்மீக வகுப்பு நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிமுதல் 5.30 மணிவரை கொக்குவில் கிழக்கு கோணாவளை ஒழுங்கை சின்மயாமிஷனில் நடைபெறவுள்ளது.

இவ் ஆன்மீக வகுப்புகளை சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா நடத்தவுள்ளார். மேற்படி வகுப்புகள் இளையவர்களுக்கு அன்பின் ஆழங்கள் கருப்பொருளில் பிற்பகல் 3.30 மணிமுதல் 4.30 மணிவரையும் வாழ்க்கை முறை பற்றிய கருப்பொருளில் பிற்பகல் 4.30 மணிமுதல் 5.30 மணிவரையும் பிரதி சனிக்கிழமைதோறும் நடைபெறவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

## பயிற்சிநெறியை பூர்த்தி செய்தோருக்கு இன்று சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கிளிநொச்சி மாவட்டத்தில் மனிதவுரிமை ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான தேசிய பாதுகாப்புக்கும் நிரந்தர தீர்வுக்குமான விசேட செயற்றிட்டத்தின் மூலம் கடந்த 2011 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மனிதவுரிமை பாதுகாவலர்களுக்கான பயிற்சி நெறி நடைபெற்றது.



இப்பயிற்சி நெறியினை பூர்த்தி செய்த 47 மனிதவுரிமை பாதுகாவலர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி கருணா நிலையத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளதாக இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழுவின் விசேட செயற்றிட்டத்திற்கான பிராந்திய செயற்றிட்ட இணைப்பாளர் கமலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மனிதவுரிமை ஆணைக்குழுவினால் உள்நாட்டில் இடம் பெயர்ந்தோருக்கான செயற்றிட்டத்தின் மூலம் இப்பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அத்தோடு மனிதவுரிமை ஆணைக்குழுவினால் நடமாடும் சேவை மற்றும் சிறுவர்கள், பெண்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் அவர்களின் உரிமைகள் தொடர்பாகவும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி,முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் இந்த நடைமுறைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் யுத்தத்திற்கு பின்னர் கிளிநொச்சி, முல்லைத்தீவுமாவட்டங்களில் 2011ஆம்ஆண்டிலேயே இந்த மனிதவுரிமை பாதுகாவலர்களுக்கான பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# விளையாட்டு நிகழ்வுகள்...


கிளிநொச்சி இராமநாதபுரம் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப் படுவதையும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வி. ஆனந்தசங்கரி மங்கலவிளக்கேற்றுவதையும் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் வெற்றிபெற்ற வீராங்கனைகளுக்கான சான்றிதழ்களை வழங்குவதையும் படங்களில் காணலாம்.






யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் அதிபர் சி சிவகணேசசுந்தரன் ஒலிம்பிக்தீபம் ஏற்றுவதையும் வெற்றி பெற்ற இல்லத்திற்கான வெற்றிக்கிண்ணத்தை திருமதி சத்தியசீலன் வழங்குவதையும் படங்களில் காணலாம்.




நவாலி மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் விநோத உடைப் போட்டி நிகழ்வினையும் வெற்றியீட்டிய இலத்திற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் எஸ். முரளிதரன் கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.





மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதனையும் மாணவர்களின் இடைவேளை நிகழ்வான இசையும் அசைவும் நிகழ்வினையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட ஆங்கில உதவிக்கல்விப்பணிப்பாளர் சு.கணேசலிங்கம் வெற்றிபெற்ற இல்லத்திற்கு வெற்றிக்கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.





யா/ வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வருவதையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட எஸ்.குகதாசன் மங்கள விளக்கேற்றுவதையும் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட எம். நடராஜா வீராங்கனைகளுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

# சுயநிர்ணய உரிமை கேட்பது தனிநாட்டு கோரிக்கை ஆகுமா?



## சம்பந்தன் கேட்கிறார்

(கிளிநொச்சி)

13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் பொருத்தமற்றதாகும். அது தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஒருபோதும் தீர்க்காது. இதனை நாம் ஆரம்பத்திலிருந்தே கூறி வருகின்றோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருமலை. மாவட்ட எம்.பி. யுமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஏற்பாட்டில் கிளிநொச்சி நகரில் அண்மையில் நடத்தப்பட்ட ஜனநாயக அடிப்படையில் அரசியல், சமூக உரிமைகளை வென்றெடுப்பதற்கான விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் பிரதம விருந்தினர் இரா. சம்பந்தன் உரையாற்றுகையில், இந்த நாட்டில் தமிழர்களுக்கு உரித்தான இறைமை மறுக்கப்பட்டதனாலேயே அனைத்துப் பிரச்சினைகளும் இடம்பெற்றிருந்தன. இதனை கடந்த 1956 ஆம் ஆண்டு முதல் நடந்த அனைத்து தேர்தல்களிலும் கூறிவருகின்றனர். அதாவது, இந்த நாட்டிலுள்ள ஒற்றையாட்சி முறையில் நாம் சம பிரஜைகளாக வாழ முடியாது. எனவே, அது நீக்கப்பட்டு சமஷ்டி முறை உருவாக்கப்பட்டு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். அல்லது ஆட்சி அதிகாரங்களை பயன்படுத்துவதற்கு அரசியல் சாசன ரீதியாக ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்.

பெரும்பான்மை இனம் தாம் பெரும்பான்மையாக உள்ள காரணத்திற்காக சிறுபான்மை இனத்தை ஆட்சி செய்ய முடியாது. அவ்வாறு புரிந்தால் அந்த சிறுபான்மை இனத்தின் இறைமை மறுக்கப்படுகின்றது. இதுவே இங்கு நடந்தது. அதனாலேயே இங்கு பேராட்டங்களும் சகல பிரச்சினைகளும் ஏற்பட்டன.

ஒரு நாட்டில் வெவ்வேறு இன மக்கள் வாழவதாக இருந்தால் அவ்வகையான மக்களுக்கு இயைவாக இருக்க வேண்டும். அவ்விதமான தீர்வொன்று ஏற்படாமையினால்தான் யுத்தம் வெடித்தது. காரணமில்லாமல் ஒரு யுத்தம் ஆரம்பிக்கவில்லை.

ஒரு அரசியல் தீர்வு இந்த நாட்டில் ஏற்பட வேண்டும். ஜனநாயக உரிமைகள், மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். இலங்கை அரசினால் என்ற காரணம் ஒருபக்கம், விசாரணைக்குற்றங்கள், மறுபுறம் இந்த சிபார்சுகளை நடைமுறைப்படுத்த இலங்கை அரசு என்ன செய்யப் போகின்றதென்ற கேள்வி. அதை எவ்வாறு செய்யப்போகின்றோம் என்ற கேள்வி. சர்வதேசத்தின் முன்னால் இன்றுள்ளது.

நாம் தமிழ் மக்கள் சார்பாக சர்வதேசத்திடம் கேட்பது இந்த நாட்டில் நாம் வாழ்ந்துள்ளோம். மற்றவர்களைப் போல அவர்களை விடவும் உரிமைகளை கேட்டதற்காக பாரிய அழிவுகளை சந்தித்திருக்கின்றோம்.

இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் மீண்டும் இனப்படுகொலை நடைபெறும். வன்முறை நடைபெறும். அதற்கு சர்வதேசம் இடமளிக்கக் கூடாது.

சுயநிர்ணய உரிமை என்றவுடன் தனிநாடு என தப்பான அர்த்தம் பிரித்து கூறப்படுகின்றது. இதைக்கேட்டு பதறி துடிக்கின்றனர். ஒரு நாட்டின் இறைமை அங்கு வாழும் மக்களிடமே தங்கியுள்ளது.

ஒன்றுபட்ட இலங்கையில் இறைமையின் அடிப்படையில் ஏனைய சமூகங்களை போல் சுய கௌரவத்துடனும் சுய நிர்ணய உரிமையுடனும் அடிப்படை மனித உரிமைகளுடனும் வாழக்கூடிய நீடித்து நிலைக்கக்கூடிய தீர்வின் மூலம் மீண்டும் இனப்படுகொலைகளும் வன்முறைகளும் இடம்பெறாது தடுக்க முடியும் என்றார். (அ-2)

## விபத்தில் காயமடைந்த பெண்ணுக்கு 20 இலட்சம் ரூபா வழங்க தீர்ப்பு

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபையின் அநுராதபுரம் டிப்போவுக்கு சொந்தமான இரண்டு பேருந்துகளை நீதிமன்றத்தின் பொறுப்பில் கொண்டு வருமாறு மாவட்ட நீதிபதியும் மேலதிக நீதவானுமாகிய லக்மாலி ஹேவாவசம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

அநுராதபுரம் டிப்போவுக்கு சொந்தமான பேருந்து ஒன்றில் பயணித்த போது விபத்துக்குள்ளாகி பலத்த காயமடைந்த பெண்ணொருவருக்கு 20 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்குமாறு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை மீறியமைக்காகவே நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இதன்படி 14 நாட்களுக்கு இழப்பீட்டு தொகையை செலுத்துவதற்கு பிரதிவாதி தரப்பான இலங்கை போக்குவரத்து சபையின் அநுராதபுரம் டிப்போ தவறும் பட்சத்தில் இரண்டு பேருந்துகளையும் ஏலத்தில் விற்று உரிய இழப்பீட்டுத் தொகையை மனுதாரருக்கு செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (அ-2)



மாணவர் மீதான அடக்குமுறை மற்றும் பல்கலைக்கழக கல்வி முறையிலுள்ள நெருக்கடிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக் குழுவிற்கு முன்னால் நேற்று செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதை படத்தில் காணலாம்.

## இவ்வருடத்தில் 86 இலங்கையர்கள் வெளிநாடுகளில் உயிரிழப்பு

(கொழும்பு)

இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் பெப்ரவரி 21 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் மாத்திரம் 86 இலங்கையர்கள் வெளிநாடுகளில் உயிரிழந்துள்ளனரென வெளிவிவகார அமைச்சின் கொன்சுயுலர் பிரிவைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

வழமையிலும் பார்க்க இவ்வருடம் முதல் இரண்டு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்பாகவே வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களின் மரணவீதம் பாரிய அதிகரிப்பை எட்டியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். சாதாரணமாக வருடத்திற்கு 60 தொடக்கம் 65 வரையான இலங்கையர்களே வெளிநாடுகளில் உயிரிழப்பது வழமை. இதற்கு முன்னர் குறுகிய காலப் பகுதிக்குள் ஆகக் கூடியது சுமார் 25 வரையிலான இலங்கையர்கள் வெவ்வேறு நாடுகளில் உயிரிழந்திருந்தனர். அந்த வகையில் கடந்த 52 நாட்களுக்குள் 86 இலங்கையர்களின் மரணவீதம் பாரிய அதிகரிப்பை காட்டுவதாகவும் அவர் கூறினார்.

மத்திய கிழக்கு நர்டுகளிலுள்ள இலங்கையர்களே அதிகளவில் உயிரிழந்துள்ளனர். இவர்கள் விபத்து, சுகயீனம் மற்றும் தற்கொலை ஆகிய காரணங்களினாலேயே கூடுதலாக மரணமடைந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். அதேவேளை இன்னமும் 26 பேரினது சடலங்களை இலங்கைக்கு எடுத்து வருவதற்காக வெளிவிவகார அமைச்சு குறித்த நாடுகளின் தூதரகங்களுடன் தொடர்பு கொண்டு வருவதாகவும் மரண விசாரணைகள் முடிவடையும் வரையில் காத்திருக்க வேண்டி ஏற்பட்டிருப்பதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார். (அ-2)

## அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அத்துமீறுவதை தவிருங்கள்

### போராட்டக்காரர்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

கொழும்பிலுள்ள எந்தவொரு பிரதேசங்களில் எவ்வாறான ஆர்ப்பாட்டங்களை செய்தாலும் பரவாயில்லை. ஆனால், அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் நுழைவதையோ அதற்குள் ஆர்ப்பாட்டங்களை செய்வதையோ தவிர்த்துக் கொள்ளுமாறு கொழும்பு பிராந்தியத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க வேண்டுகோள் விடுக்கின்றார்.

மாளிகாவத்தையில் 15 ஆம் திகதி ஜே.வி.பியும் கொழும்பு கோட்டையில் 17 ஆம் திகதி ஐ.தே.கவும் செய்த ஆர்ப்பாட்டத்தின் உண்மை நிலைவரம் தொடர்பாக ஊடகங்களுக்கு தெரியப்படுத்தும் விசேட செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் நுழைவதையோ ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதையோ பொறுப்பு வாய்ந்தவர்கள் என்ற அடிப்படையில் பொலிஸார் ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பொலிஸார் அநீதியான முறையில் தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானது என்றும் அவற்றை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ-2)

## ஈராக்கில் மீண்டும் இலங்கை தூதரகம்

(கொழும்பு)

ஈராக்கில் இலங்கைத் தூதரகத்தை மீண்டும் நிறுவுவதற்கான நடவடிக்கைகளை வெளிவிவகார அமைச்சு முன்னெடுத்துள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்காக வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் டபிள்யூ.எம்.செனவிரத்ன ஈராக் சென்றுள்ளதாக அமைச்சின் பொதுத் தெர்டர்பாடல் பிரிவின் பணிப்பாளர் சரத் திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

ஈராக்கில் தூதரகத்தை நிறுவுவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நோக்கில் அந்த நாட்டிற்கு அவர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் கூறியுள்ளார்.

ஈராக்கில் தூதரகத்கை நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அண்மையில் ஜனாதிபதியின் வெளிவிவகார அமைச்சிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சின் பொதுத் தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் சரத் திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 49


சோவியத் மார்சல் ஜீக்கவ்

மாஸ்கோ அருகில் செஞ்சேனை மிகப்பெரும் இராணுவ அரசியல் வெற்றியைப் பெற்றது. இது மாபெரும் தேசபக்த யுத்தத்தின் போக்கின் மீது, மொத்தமாக,இரண்டாம் உலக யுத்தப் போக்கின் மீது தீர்மானகரமான தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த வெற்றி சோவியத் சமூக மற்றும் அரசு அமைப்பின் மேம்பாட்டையும் சோவியத் சமுதாயத்தின் தார்மீக- அரசியல் ஒருமைப்பாட்டையும் உலகம் முழுவதுக்கும் நம்பத்தக்க முறையில் காட்டியது. தலைநகர வாயில்களின் அருகே நடந்த சமரில் யுத்தத்தின் ஆறுமாதங்களில் செஞ்சேனை முதன்முதலாக ஹிட்லர் துருப்புகளின் முக்கியப்படைத் திரட்டுக்குப் பெரும் தோல்வியை ஏற்படுத்தியது. பிளிட்ஸ்கிரிக் (மின்னல் வேகயுத்தம்) பாசிசதிட்டம் முழுத் தோல்வி அடைந்தது. ஜேர்மனிய இராணுவத்தை வெல்லமுடியாது என்ற மாயையை உலகின் முன், செஞ்சேனை உடைத்தெறிந்தது. இரண்டாம் உலகயுத்தத்தில் பாசிஷ்டுகள் முதல்பெரும் தோல்வியை தழுவினர்.

பாசிச ஜேர்மனியத் துருப்புகளின் தோல்வி ஹிட்லர் இராணுவத் தலைமையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. ஜேர்மனியின் தரைப் படைகளின் தலைமைத் தளபதி பீல்ட்மார்சல் ஜெனரல் வான் பிராவுகீர் நோயின் காரணமாய்


ஜேர்மன் பீல்ட்மார்சல் வால்ரர் மாடெல்

டிசம்பர் 19 ஆம் திகதி விடுவிக்கப் பட்டான்.

தரைப்படைகளின் தலைமையை ஹிட்லர் தானே மேற்கொண்டான். சென்டர் படைத்தொகுதியின் தலைமைத் தளபதி பீல்ட்மார்சல் ஜெனரல் வான் போக் டிசம்பர் 18 ஆம்திகதி தன் பொறுப்பிலிருந்து அகற்றப்பட்டான். டிசம்பர் 26 ஆம் திகதி கர்னல் ஜெனரல் குடேரியான் பதவி நீக்கம் செய்யப்பட்டான். 3-வது டாங்கிப்பிரிவின் தளபதி கர்னல் ஜெனரல் ஹெப்னர் பதவி நீக்கம் செய்யப்பட்டான். எல்லாப் பட்டங்களும் விருதுகளும் அவனிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டன. 9-வது படையின் தளபதி கர்னல் ஜெனரல் ஷ்டிராவுகன் அவசர அவசரமாகத்தான் நோய்வாய்ப்பட்டிருப்பதாக அறிவித்தான். வடக்கு மற்றும் தெற்கு படைத் தொகுதிகளின் தலைமைத் தளபதிகள் 20-வது லப்லான்ட் படை மற்றும் 17-வது படையின் தளபதிகள் இன்னும் பல கோர்பஸ்கள், டிவிசன்களும் கமாண்டர்கள் ஆகியோருக்கும் இதே கதிதான் ஏற்பட்டது. 1941 டிசம்பர் முதல் 1942


சோவியத் மார்சல் அலெக்சாண்டர் வசிலிவ்ஸ்கி

ஏப்ரல் வரை 35 நாஜி ஜெனரல்கள் தம் பதவிகளிலிருந்து அகற்றப் பட்டனர். மார்னாவில் நடந்த சமருக்குப்பின் இந்த அளவுக்கு ஜெனரல்கள் தூக்கியெறியப்பட்ட தில்லை என்று பிரிட்டிஷ் இராணுவ வரலாற்றாசிரியர் ஃபூல்லர் எழுதினார். ஜெனரல்களை மாற்றியதோடுகூட, இராணுவத்தில், அடக்குமுறை கட்ட விழ்த்து விடப்படுவதும் நடந்தது. மாஸ்கோ அருகே சமர் நடந்த காலகட்டத்தில் ஜேர்மனிய இராணுவ போர்க்களட்ரிப்யூனல்க ளின் 62 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போர்வீரர்கள், படைத் துறைப்பதவி வகிக்காத அதிகாரிகளும் இராணுவ அதிகாரிகளும் கடுந்தண்டனைகளுக்கு ஆளாக்கப்பட்டனர்.

## 'ஜேர்மனி, ஜப்பான் ஆக்கிரமிப்பின் விஸ்தரிப்பு 'மின்னல் வேக யுத்தம்' என்ற ஹிட்லர் போர்த்தந்திரத்தின் தோல்வி

மாஸ்கோ அருகே சோவியத் துருப்புகள் அடைந்த வெற்றிக்கு பெரும் சர்வதேச முக்கியத்துவம் இருந்தது. உலகம் பூராவும் இது பாசிசத்தின்மீது முற்போக்குச்சக்தி


பொறுப்பிலிருந்து அகற்றப்பட்ட ஜேர்மன் பீல்ட்மார்சல் ஜெனரல் ஃபெடர் வொன் போக்

கள் அடைந்த பொதுவெற்றியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. விடுதலை விரும்பும் மக்களின் மனநிலையைப் பலப்படுத்தியது. பாசிசத்தால், ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நாடுகளில் எதிர்ப்பு இயக்கத்தை வலுப்படுத்தியது, ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணி வலுவடைவதில் கணிசமான பங்காற்றியது.

சோவியத் யூனியனின் முதல் இராணுவவெற்றி, அட்லாண்டிக் சமுத்திரத்தின் இருபுறங்களிலும் நீண்டகாலமாக நிலவிவந்த உறுதியின்மை மற்றும் குழப்பத்திற்கு முதன்முதலாக முடிவுகட்டியது என்று முற்போக்கு இத்தாலியப் பிரமுகர் பட்டாலியா கோடிட்டுக் காட்டினார். சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மிகப் பிரபலமான பிரமுகர்களில் ஒருவராகிய வி.ஃபோஸ்டர் இவ்வெற்றியின் முக்கியத்துவத்தை இன்னமும் அழகாக அடையாளச் சிறப்போடு குறிப்பிட்டார். மாஸ்கோ அருகே சோவியத் இராணுவம் தொடுத்த எதிர்த் தாக்குதல் பாசிசத்திற்கு எதிரான மாபெரும் மக்கள் தாக்குததலுக்கு மாறியதைக் குறித்தது என்று அவர் எழுதினார்.

அந்நாடுகளில் பாசிசத்திற்கு எதிரான மக்களின் போராட்டத்தில் சோவியத்யூனியன் ஆற்றிய மிகப்


சோவியத் ஜெனரல் நிக்கோலின் வாற்றிரின்

பெரும்பங்கை ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணியில் இருந்த அரசுகளின் பல அரசியல், இராணுவப் பிரமுகர்கள் குறிப்பிட்டனர். ரூஸ்வெல்ட், ஸ்டாலின் பெயருக்கு அனுப்பிய செய்தியில் செஞ்சேனையின் வெற்றிகளைக் கண்டு அமெரிக்க ஐக்கியநாட்டில் நிலவும் சர்வபொது உற்சாகத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். 1941 ஆம் ஆண்டு டிசம்பர் நடுவில் பிரிட்டிஷ் இராணுவம், தென்கிழக்கு ஆசியாவில் தோல்வியுற்றபோது வி.சர்ச்சில் படைத் தலைமையகத்தின் தலைவர்களுக்கான நினைவுக்குறிப்பில் பின்வருமாறு எழுதினார். "இன்று யுத்தத்தின் போக்கில் முக்கியக்காரணி ருஷ்யாவில் ஹிட்லர் அடைந்த தோல்விகளும் அவனுக்கு ஏற்பட்ட இழப்புகளுமாகும். மாஸ்கோ அருகே அடையப்பட்ட வெற்றியானது, சொந்த ஆயுதங்களின் துணைகொண்டு செஞ்சேனையால் அடையப்பட்ட சோவியத் வெற்றி மட்டுமல்ல. இது எல்லா பாசிச எதிர்ப்பு நாடுகளுக்கும் முதல் பழிவாங்குதலாகவும் விளங்கியது" என்று பிரபல பிரெஞ்சு இராணுவ

**வி.அ.மத்சுலேன்கோ**

பிரமுகரும் வர்லாற்றாசிரியருமான காயோம் குறிப்பிட்டார். பிரெஞ்சு பிரதான படைத்தலைமையகத்தின்


ஜோசெப் ஸ்ராலின், சோவியத்யூனியனின் தலைவர் (19,யூலை,1941-1953மார்ச்,5) உயர்இராணுவக் கட்டளைத் தளபதி (1943-1953)

முன்னாள் துணைத் தலைவராகிய ஜெனரல் ஷாஸ்ஸேன் "மாஸ்கோ அருகே நடந்த சமர், சுதந்திர உலகைக் காப்பாற்றியது" என்று அறிவித்தார்.

மாஸ்கோ அருகே அடைந்த வெற்றியானது, சோவியத் நாட்டை நோக்கி நிற்கும் 10 இலட்சம் பேரடங்கிய குவாண்டுங் இராணுவத்தோடு ஜப்பான், சோவியத் யூனியனுக்கு எதிராக யுத்தத்தில் இறங்கும் அபாயத்தைக் கணிசமாகக் குறைத்தது. மாஸ்கோ அருகே நடந்த சம்பவங்கள் துருக்கிய ஆக்கிரமிப்பு வட்டாரங்களின் நிலையில் ஊசலாட்டத்தை ஏற்படுத்தின.


மாஸ்கோ யுத்தத்தில் பங்குகொண்ட சோவியத் மார்சல் கொன்ஸ்ரான்ரின் சொகோலொவ்ஸ்கி

பெரும் தற்காப்பு மற்றும் தாக்குதல் நடவடிக்கைகளை நடத்துவதில் செஞ்சேனைக்கு மிகச்சிறந்த அனுபவம் கிட்டியது. செஞ்சேனை

பதவி நீக்கப்பட்ட ஜேர்மன் ஜெனரல் குடேரியன்



இன்னமும் வீரம் மிகுந்தாகியது. புடம்போட்டு எடுக்கப்பட்டது.

(தொடரும்)

# வடக்குக்கிழக்கு பிரதேச இளைஞர், யுவதிகள் விழிப்புடன் இருக்க கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்ல விரும்பும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் விழிப்புடன் இருக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மோசடி தடுப்புப்பிரிவின் புலனாய்வு மற்றும் விசேட நடவடிக்கைகளுக்கான பொறுப்பாளர் உதவி பொலிஸ் பரிசோதகர் ஜனக சமிந்த இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

வெளிநாடுகளில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி பணமோசடியில் ஈடுபட்டு வருபவர்களிடம் ஏமாற வேண்டாம் எனவும் மோசடி தடுப்புப்பிரிவு பொலிஸார் பொதுமக்களிம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இலங்கையிலிருந்து கனடாவுக்கு அனுப்புவதாக கூறி 269 பேரிடமிருந்து பலகோடி ரூபாவை பெற்றுக் கொண்டு ஆபிரிக்க நாடான டோகா மற்றும் மாலிக்கு கொண்டு சென்று கைவிட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பிரதான சந்தேக நபர் ஒருவரை மோசடி தடுப்புபிரிவு பொலிஸார் வெள்ளவத்தையில் வைத்து கைது செய்துள்ளனர்.

இந்தச் சந்தேக நபரால் வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்ட 269 பேரில் 267 பேர் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பதனாலேயே இந்த வேண்டுகோளை விடுவிப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

தமிழ் இளைஞர், யுவதிகள் என்று தெரிவித்த புலனாய்வு மற்றும் விசேட நடவடிக்கைகளுக்கான பொறுப்பதிகாரி இவற்றில் அதிகமானவர்கள் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பதனாலேயே இந்த வேண்டுகோளை விடுப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

வெளிநாட்டில் அதிகூடிய சம்பளங்களுக்கு தொழில் வாய்ப்பை பெற்றுத் தருவதாக கூறியே மிகவும் சூட்சுமமான முறையில் இந்த மோசடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வெள்ளவத்தை, கொள்ளுப்பிட்டி, கொம்பனித்தெரு பகுதிகளிலுள்ள ஹோட்டல்களில் தங்கியிருந்தே இந்த மோசடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபர் மூலம் தெரிவந்துள்ளது.

இதுபோன்ற மோசடி, கும்பலின் மோசடி நடவடிக்கைகளுக்கு சில முன்னணி பயணமுகவர் நிலையங்களின் ஒத்துழைப்பும் பெறப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது. நூறு வீதம் அசலானது போன்றே போலி ஆவணங்கள் மற்றும் விசாக்கள் தயாரிக்கப்பட்டு இவர்கள் விமான நிலையத்திலுள்ள சில அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## தற்காலிக ஊடக அமைச்சராக லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன



(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபே வர்த்தன வெகுஜன ஊடகம் மற்றும் தகவல்துறை பதில் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக வெகுஜன ஊடகம் மற்றும் தகவல்துறை அமைச்சின் செயலாளர் டபிள்யூ.பீ.கனேகல குறிப்பிட்டுள்ளார். தகவல் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நாடு திரும்பும் வரை லக்ஸ்மன் யாப்பா அபே வர்த்தன அந்தப் பதவியில் இருப்பார் என அவர் தெரிவித்தார். (அ-2)

## எரிபொருள் விலையேற்ற காரணங்களை அரசாங்கம் வெளியிட வேண்டும்

### எதிர்க்கட்சி தலைவர் வலியுறுத்து



(கொழும்பு)

எரிபொருள் விலையேற்றத்திற்கான காரணங்களை அரசாங்கம் இதுவரையில் வெளியிடவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலையேற்றம் தொடர்பில் நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் விசேட உரையாற்றியபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

உலக சந்தையில் எரிபொருள் விலை உயர்த்தப்படாத நேரத்தில் அரசாங்கம் எரிபொருளுக்கான விலையை உயர்த்தியுள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பேருந்து உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணங்களை போன்றே மீனவர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளார். எரிபொருள் விலையை குறைப்பதற்கு அல்லது சம்பளத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஈரானுக்கு தடைகள் விதிக்கப்பட்ட காரணத்தினால் உலக சந்தையில் எரிபொருள் விலை உயர்வடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். ரூபாவின் பெறுமதி இறக்கமும் எரிபொருள்விலை விலையேற்றத்திற்கு மற்றுமொரு காரணம் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## ஐ.தே.க. உள்ளூரா. உறுப்பினரிடையே விசேட மாநாடு நடத்த தீர்மானம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் அனைத்து உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் விசேட மாநாடு ஒன்றை நடத்த கட்சி தீர்மானித்துள்ளது.

இதில் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களினது ஐக்கிய தேசியக்கட்சியின் பிரிதிநிதிகள் கலந்து கொள்ள வேண்டியது கட்டாயப் படுத்தப்பட்டுள்ளதாக இதன் ஏற்பாட்டாளர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்று தொடக்கம் எதிர்வரும் மூன்று தினங்களிலும் எதிர்வரும் மார்ச் மாதத்தில் இரண்டு தினங்களாகவும் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் நாட்டின் அரசியல் பொருளாதார வல்லுநர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாநாட்டின் போது தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலை மற்றும் அரசாங்கத்தின் மோசடிகளால் நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள தாக்கம் குறித்த விடயங்களை மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்லும் பொருட்டு உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளை தெளிவுபடுத்தும் நோக்கில் இந்த மாநாடு நடத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டார். (அ-2)

## சட்டத்தரணிகள் சங்க நிர்வாகக்குழு தெரிவு

(கொழும்பு)

இலங்கை சட்டத்தரணிகள் சங்க நிர்வாகக்குழு தெரிவு இன்று நடைபெறவுள்ளது. இன்று காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை 71 நிலையங்களில் இதற்கான வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் சட்டத்தரணி மஹிந்த லொக்குகே குறிப்பிட்டார்.

ஜனாதிபதி சட்டத்தரணிகளான ரிரந்த வலலியத்த, விஜேதாஸ ராஜபக்ஷ மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி ஆர்.ஆர்.தங்கராஜா ஆகியோர் தலைவர் பதவிக்காக போட்டியிடுகின்றனர் என அவர் கூறினார். நாடு முழுவதும் சுமார் பத்தாயித்து 800 சட்டத்தரணிகள் இன்றைய தினம் நடைபெறவுள்ள நிர்வாகக்குழு தெரிவில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களில் சுமார் ஆறாயிரத்து 700 இற்கும் அதிகமானோர் கொழும்பில் வாக்களிக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஈரான் மீதான அமெரிக்காவின் தடை இலங்கையின் தலையில் விழுந்த இடி

## அல்ஜசீரா தொலைக்காட்சி தெரிவிப்பு

இலங்கையின் மொத்த எரிபொருள் இறக்குமதியில் 93% ஈரானில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. பீப்பாய்களில் வரும் மசகு எண்ணெய் இலங்கையில் உள்ள சில வடிகட்டும் நிலையங்கள் வடிகட்டி மண்ணெண்ணெய், பெற்றோல் மற்றும் டீசல் எனப் பிரித்தெடுக்கின்றனர். தற்போது அமெரிக்கா, ஈரான் மேல் விதித்திருக்கும் தடையால் ஈரான் கப்பல்கள் அந்நாட்டை விட்டு வெளியே வரமுடியாத நிலை தோன்றியுள்ளது என அல்ஜசீரா தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசு பெரும் நெருக்கடிக்குள் சிக்கித் தவிப்பதோடு பிற நாடுகளில் இருந்து மசகுஎண்ணெயையும் ஏனைய எரிபொருட்களையும் இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. ஈரான்- இலங்கை எரிபொருள் இறக்குமதி ஒப்பந்தம் மூலமாக எரிபொருட்களை சற்றுக் குறைந்த விலையில் இலங்கை இதுவரை காலமும் பெற்று வந்தது.

இலங்கையில் இருந்து பாரியளவில் தேயிலை ஈரானுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது வழக்கம். அதேபோல ஈரான் மசகுஎண்ணெயை சுமார் 3 வார வட்டியில்லாத கடனாக கொடுக்க அதனை விற்றுப்பணம் சம்பாதித்தது இலங்கை அரசு.

ஆனால், தற்போது நிலை தலைகீழாக மாறியுள்ளது. அமெரிக்க போர்க்கப்பல் எப்போது ஈரான் நாட்டிற்கு அருகே சென்றதோ அதேநேரம் ஈரானியர்கள் விழித்துக் கொண்டார்கள்.

அவர்கள் கடனாக பல நாடுகளுக்கு கொடுத்த எரிபொருளின் பணத்தை அவர்கள் உடனே வசூலித்து விட்டார்கள். இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால் இலங்கை அரசானது சுமார் 25 மில்லியன் டொலர் பெறுமதியான தேயிலையை ஈரானுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

இப்பணத்தை உடனே பெற்றுக் கொள்ளாமல் அதற்கு பதிலாக எரிபொருட்களை அனுப்பும் படி கூறியுள்ளது. ஆனால், தற்சமயம் ஈரானில் இருந்து எந்த ஏற்றுமதியும் மேற்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளதால் இந்த 25 மில்லியன் டொலர் பணமும் ஊசலாடுகிறது. இப்பணத்துக்கு சமமான எரிபொருட்களை இதுவரை ஈரானால் அனுப்பி வைக்க முடியவில்லை. இலங்கையானது இறக்குமதியிலும் பாதிப்படைந்து தேயிலை ஏற்றுமதியிலும் பாதிப்படைந்துள்ளதாக ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

ஆனால், இலங்கை அரசோ இது குறித்து எவ்வித கருத்துக்களையும் இதுவரை வெளியிடவே இல்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். ஈரான் ஒரு சிறிய நகர்வை மேற்கொண்டால் கூட அந்நாடு மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா காத்துக் கொண்டு இருக்கிறது.

அதேபோல பல உலக நாடுகளில் ஈரான் அரசின் சொத்துக்களும் வங்கிக் கணக்குகளும் முடக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் இந்த 25 மில்லியன் டொலரை இலங்கைக்கு ஈரான் எவ்வாறு கொடுக்கப்போகிறது என்பது பெரும் கேள்விக்குறியாக உள்ளது. (அ-2)

## கொள்ளையிட்ட இருவருக்கு 9 வருட சிறைத்தண்டனை

(கொழும்பு)

வைத்தியர் ஒருவரின் வீட்டிற்குள் நுழைந்து துப்பாக்கியை காட்டி மரண அச்சுறுத்தல் விடுத்ததுடன் பின்னர் அங்கிருந்த தங்க நகைகளை கொள்ளையிட்டதாக கூறப்படும் இரண்டு சந்தேக நபர்களுக்கு பொலநறுவை மேல்நீதிமன்றம் 9 வருட சிறைத்தண்டனை விதித்துள்ளது.

சந்தேக நபர்கள் இருவரும் பொலநறுவை மேல்நீதிமன்ற நீதவான் அமேந்திர ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று முன் தினம் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்களை குற்றவாளிகளாக கண்டதை அடுத்தே நீதி மன்றம் சிறைத் தண்டனையை விதித்துள்ளது.

இது தவிர சந்தேக நபர்களுக்கு 20 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்த நீதிமன்றம் அதனை செலுத்த தவறுகின்ற பட்சத்தில் மேலும் 7 வருட கடூழிய சிறைத்தண்டனைக்கு உட்படுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தின் முதலாவது சந்தேக நபர் வைத்தியரின் மனைவியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக நிருபணமானதை அடுத்து அதற்காக அவருக்கு மேலும் 7 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

மெரிகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பேருக்கே நீதிமன்றம் சிறைத்தண்டனை வழங்கியது. (அ-2)




# சிறுவர் அரங்கம்

19

# அம்புலி மாமா கதைகள்

## குறையைப் பார்!



பிரம்மதத்தன் காசியை ஆண்டகாலத்தில் போதிசத்வர் இந்திரப் பிரஸ்தத்தில் குருவம்ச மன்னராகப் பிறந்து தனஞ்ஜெயன் என்ற பெயரில் இருந்து வந்தார். நீதி தவறாமலும் தான தர்மங்களைச் செய்வதிலும் தனஞ்ஜெயனுக்கு நிகராக யாரும் இல்லை என்ற பெயர் ஏற்பட்டு அவரது புகழ் எங்கும் பரவியது.

அதேசமயம் கலிங்க நாட்டின் தலைநகரான தந்தபுரத்தை காளிங்கன் என்ற மன்னன் ஆண்டுவந்தான். ஒருமுறை அவனது நாட்டில் மழை இல்லாமல்போய் பஞ்சம் வந்துவிட்டது. மக்கள் உணவில்லாமல் திண்டாடினார்கள். பலர் பட்டினியால் துடிதுடித்து இறந்தும் போயினர். இதைக்கண்ட காளிங்கன் தன் மந்திரிகளிடம் இவ்வாறு பஞ்சம் வரக்காரணம் என்ன என்றும் அதை எப்படிப்போக்குவது என்றும் யோசனை கேட்டான். அவர்களும் "தர்மம் நிலை தவறி கெடும்போது இம்மாதிரி பஞ்சம் ஏற்படும். நீங்களே பாருங்கள்! இந்திரப்பிரஸ்த மன்னர் தனஞ்ஜெயன் நீதி தவறாமல் தர்ம நியாயமாக ஆட்சி புரிவதால் அங்கு மாதம் மும்மாரி மழை பெய்கிறது" என்றார்கள்.

அப்போது காளிங்கன் அப்படியானால் நீங்கள் இப்போதே இந்திரப்பிரஸ்தம் போய் மன்னரைக் கண்டு அவர் கடைப்பிடிக்கும் முறைகளைக் கேட்டும் தெரிந்து தங்கத் தகடுகளில் எழுதிக்கொண்டு வாருங்கள். நாமும் அவற்றைக் கடைப்பிடிக்கலாம் என்றான். மந்திரிகளும் அவ்வாறே செய்வதாகக்கூறிச் சென்றார்கள்.

அவர்கள் அங்கு தனஞ்ஜெய மன்னனைக் கண்டு "அரசே நாங்கள் கலிங்கத்திலிருந்து வருகிறோம். எங்கள் நாட்டில் கடும் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் தவியாய்த் தவிக்கிறார்கள். தாங்கள் நீதி நெறி தவறாமல் ஆட்சி புரிவதால் தங்களது நாட்டு மக்கள் சுகமாக வாழ்ந்து வருகிறார்கள். தாங்கள் கடைப்பிடிக்கும் முறைகளை நாங்கள் கொண்டுவந்திருக்கும் தங்கத்தகடுகளில் எழுதிக்கொடுத்தால் அவற்றை எம் மன்னர் கடைப்பிடித்து மக்களை சுகப்படுத்தி வாழவைப்பார்" எனக்கூறி தாம் கொண்டுவந்த தங்கத்தகடுகளை




தனஞ்ஜெயனின் முன் வைத்து நின்றான்.

தனஞ்ஜெயன் அந்த மந்திரிகளுக்கு வணக்கம் செலுத்தி "அமைச்சர்களே! இந்தத் தங்கத் தகடுகளில் தர்மநெறிகளை எழுதிக் கொடுக்கும் தகுதி எனக்கில்லை. ஏனெனில் நானே ஒருமுறை நீதி நெறி தவறிவிட்டேன். எங்கள் நாட்டில் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை கார்த்திகை விழா நடப்பதுண்டு. அப்போது மன்னர் ஒரு குளக்கரையில் யாகம் நடத்தி நான்கு திசைகளிலும் நான்கு அம்புகளை எய்யவேண்டும். ஒருமுறை நான் எய்த அம்புகளில் மூன்று திரும்பக் கிடைத்தன. நான்காவது அம்பு குளத்தினுள் சென்றுவிட்டது. அந்த அம்பால் சில மீன்களும் சில தவளைகளும் இறந்தேயிருக்கவேண்டும். இப்படியாக நான் தவறுசெய்துவிட்டேன். என்னைவிட நீதி தவறாமல் உள்ள வேறு யாராவது இருக்கலாம். நீங்களே விசாரித்துப் பாருங்கள்" என்றான். அது கேட்டு கலிங்க நாட்டு மந்திரிகள் ஆச்சரியம் அடைந்தார்கள். உடனே அமைச்சர்கள் தனஞ்ஜெய மன்னனின் சகோதரனான நந்தனிடம் சென்று நீதி முறைகளை எழுதித் தருமாறு வேண்டினார்கள். அவனோ "நான் தினமும் மாலை வேளைகளில் அந்தப்புரத்துக்குச் செல்வது வழக்கம். சில நாட்களில் இரவு வேளைகளில் அங்கேயே தங்கியும் விடுவேன். அப்போது தேரோட்டி எனக்காக நான் வரும்வரை காத்துக் கொண்டிருப்பான். சாட்டையை நான் எடுத்துக்கொண்டு போகும் போது தேரோட்டி தேரை விட்டுவிட்டு வீட்டிற்குப் போய் விடுவான். ஒருநாள் சாட்டையை நான் தேரிலேயே விட்டுவிட்டு அந்தப்புரத்திற்குப் போய்விட்டேன். அன்று நல்ல மழை பிடித்துக்கொண்டது. நான் அந்தப்புரத்தில் நனையாமல் இருந்துவிட்டேன். ஆனால் என் தேரோட்டியோ மழையில் நனைந்து துன்பப்பட்டான். எனவே நீதி முறைகளை எழுதும் தகுதி எனக்கு இல்லை" என்றான்.

அப்போது கலிங்க மந்திரிகள் அரசாங்கப் புரோகிதரிடம் சென்று கேட்டனர். அவரோ "நான் ஒருமுறை நெறி தவறிவிட்டேன்.

ஒருநாள் அரண்மனைக்குச் செல்கையில் ஒரு தங்கத்தேரை அங்கு கண்டேன். அதைப்பார்த்ததும் 'இந்தமாதிரித்தேரை மன்னர் எனக்கு தானமாகக் கொடுத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்' என எண்ணினேன். நான்



அரண்மனைக்குள் சென்றபோது மன்னர் என்முகம் வாடியிருப்பதுகண்டு "நீங்கள் அந்தத்தேரை ஓட்டிச் செல்லுங்கள். அது உங்களுடையதே" என்றார். அப்போதுதான் 'நான் ஏன் பேராசை கொண்டேன்' என எண்ணி வருந்தினேன். தேரையும் நான் வேண்டாம் எனக்கூறி விட்டேன். இப்படி நான் ஆசைப்பட்டு நெறி தவறியவன்" என்றார்.

கலிங்க நாட்டு மந்திரிகளுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. முடிவாக அந்நாட்டு அமைச்சரிடம் சென்றனர். அவரும் "நானும் ஒருமுறை நியாயம் தவறிவிட்டேன். ஒருநாள் ஒரு விவசாயியின் வயலை அளந்து பார்க்கப்போனேன். அங்கு ஓரிடத்தில் கோலை நடவேண்டியிருந்தது. அங்கு ஒரு சிறிய வளை இருந்ததால் அதில் கோலை ஊன்றினேன். அப்போது அதிலிருந்து வெளியே வந்த நண்டு சுருண்டு விழுந்து இறந்தது. இப்படியொரு பிராணியை கொன்ற நான் எப்படி நீதி நெறிகளை எழுதிக்கொடுக்க முடியும்?" என்றார். கலிங்க நாட்டு மந்திரிகளுக்கு ஒரு யோசனை தோன்றியது. அதுவரை தாம் கேட்டவற்றை எல்லாம் தங்கத் தகடுகளில் எழுதினார்கள். பின் அதனை எடுத்துக்கொண்டு கலிங்கத்துக்குப்போய் தம் மன்னனிடம் அவற்றைப் படித்துக் காட்டினார்கள். நீதி நெறிகளை நன்கு தெரிந்துகொண்டு அதன்படி நடப்பதும் தம் குற்றங்களுக்கு வருந்தி திருந்துவதுமே சிறந்தவழி எனக்கண்டு அவன் தன் ஆட்சியின் குறைபாடுகளைத் தானே கண்டு அவற்றைக் களைந்தான். அதன்பின் காளிங்க மன்னனின் நாட்டில் தர்மம் தழைக்க மழை பெய்தது. மக்கள் சுகமாக வாழலாயினர்.

## சிலாபம் மீனவர் மரணத்துடன் பாதாள குழுவுக்கும் தொடர்பாம்

### அமைச்சர் ராஜித கூறுகின்றார்

(கொழும்பு)

சிலாபம் மீனவர் மரணத்துடன் பாதாள உலக குழுக்களுக்கு தொடர்பு இருப்பதாக மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

சிலாபத்தில் இடம் பெற்ற மீனவர் ஆர்ப்பாட்டத்தில் பாதாள உலகக் குழுக்களும் குற்றவாளிகளும் கலந்து கொண்டனர். இதன்காரணமாகவே மீனவர் ஒருவர் உயிரிழந்தார்.

மீனவர் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தியதனை ஏற்றுக் கொள்ள முடியாது. வேறு வழியின்றியே பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களின் பின்னணியில் யார் செயற்படுகின்றனர் என்பது எனக்குத் தெரியும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற ஊடவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## எரிபொருள் விலையேற்றம்; ஆளும் கட்சிக்குள் உட்பூசல்

(கொழும்பு)

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விலையேற்றம் ஆளும் கட்சிக்குள் முரண்பாட்டை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் பிரதிநிதிகளுக்கு அறிவிக்காமல் எரிபொருளுக்கான விலையை உயர்த்தியமை அதிருப்தி அளிப்பதாக ஆளும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு தெளிவுபடுத்தாது திடீரென எரிபொருட்களுக்கான விலை உயர்த்தப்பட்டமை குறித்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

பிரதிநிதித்துவப்படுத்தும் தேர்தல் தொகுதிகளை சேர்ந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தெளிவுபடுத்த சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் எரிபொருள் விலையேற்றத்தின் அடிப்படையில் நாட்டில் அடிக்கடி விலையை அதிகரிக்கக்கூடாது என மின்வலு எரிசக்தி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் விலையேற்றத்தை காரணம் காட்டி சகல பொருட்களின் விலைகளையும் அதிகரிப்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது என பிரதி அமைச்சர் நிர்மல கொதலாவல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற ஆளும் கட்சி நாடாளுமன்ற குழுக்கூட்டத்தில் இந்த எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.(அ-2)

## எரிபொருள் விலையேற்றத்தை கண்டித்து மன்னாரில் விவசாயிகள் மௌன ஊர்வலம்

(கொழும்பு)

எரிபொருட்களின் விலையேற்றத்தினைக் கண்டித்தும் தமக்கு எரிபொருள் மானியம் வழங்கக் கோரி மன்னார் மாவட்ட விவசாயிகள் அனைவரும் இன்று வியாழக்கிழமை காலை மௌன ஊர்வலத்தை மேற்கொள்ளவுள்ளதாக மன்னார் மாவட்ட விவசாய அமைப்புக்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

எரிபொருட்களுக்கான விலையேற்றம் காரணமாக மேட்டு நில பயிர்ச்செய்கை முழுமையாக பாதிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதுடன் நெல் அறுவடைக்காலமான இக்காலத்தில் எரிபொருட்களின் விலை அதிகரிப்பால் அரிவி வெட்டும் இயந்திரத்தின் கூலியும் அதிகரித்துள்ளது.

ஆனால் நெல்லின் விலையோ வீழ்ச்சியடைந்த நிலையில் உள்ளது.

விவசாயிகளுக்கு எரிபொருள் மானியமாக மண்ணெண்ணெய், டீசல் ஆகியவற்றை வழங்கக்கோரி மன்னார் நகரில் இன்று மாபெரும் மௌன ஊர்வலத்தை நடத்தவுள்ளதுடன் ஜனாதிபதி மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்குமான மகஜர்களும் கையளிக்கப்படவுள்ளதாக மன்னார் மாவட்ட விவசாய அமைப்புக்களின் சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

## மட்டக்களப்பு சிறைக்கைதி வவுனியா சிறையில் மரணம்

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதியொருவர் நேற்றுமுன்தினம் மரணமடைந்துள்ளதாக வவுனியா சிறைச்சாலையின் பிரதான சிறைக் காவலர் டி.ராஜகருணாரட்ன தெரிவித்துள்ளார்.

களுவாஞ்சிக்குடியை சேர்ந்த 30 வயதான அமான் என்ற கைதியே மரணமடைந்துள்ளதாகவும் சடலத்தை வவுனியா பொது வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதாகவும் டி.ராஜகருணாரட்ன தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் சடலத்தினை பார்வையிட்ட வவுனியா மாவட்ட நீதவான் குறித்த சடலத்தை பிரேத பரிசோதனை செய்யுமாறும் ஸ்வைத்தியசாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். சிறைச்சாலையில் சடலமாக மீட்கப்பட்டவர் வவுனியா நகர் பகுதியில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## சிலாபம் மீனவர் கொலைகுறித்து பொலிஸார் வாக்குமூலம் பதிவு

சிலாபத்தில் கடந்த 15 ஆம் திகதி மீனவர் ஒருவர் கொல்லப்பட்டமை தொடர்பாக பொலிஸ் உத்தியோகத்தர்களிடமிருந்து மற்றொரு தொகுதி வாக்குமூலங்களை குற்றப் புலனாய்வுப் பணியகம் பதிவு செய்துள்ளது.

அப்பகுதியில் கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள், சிலாபம் பொலிஸ் நிலையம் மற்றும் சிலாபம் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் கடமையிலிருந்த உத்தியோகத்தர்களிடமிருந்து வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனினும் மேற்படி சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் பொலிஸாரினால் கைது செய்யப்படவில்லை.

எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின் போது 28 வயது மீனவரான அன்டனி பெர்னாண்டோ துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்து உயிரிழந்தார். அதன்பின் வாள்கள், பொல்லுகள், கண்ணாடிப் போத்தல்கள், பெற்றோல் குண்டுகள் என்பனவற்றை பொலிஸார் கண்டுபிடித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மீனவரின் இறுதிச்சடங்கின் பின்னர் மேற்படி ஆர்ப்பாட்டத்தில் சம்பந்தப்பட்ட மீனவர்கள் அப்பகுதி குடியிருப்பாளர்களிடமிருந்து குறைந்தபட்சம் 25 வாக்கு மூலங்களை சி.ஐ.டி.பதிவு செய்தது. (அ-2)

## நெடுந்தீவில் பெண்ணின் எலும்புக்கூடு மீட்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவிலுள்ள நீர் நிலையொன்றிற்கு அருகிலிருந்து பெண்ணொருவருடைய எலும்புக் கூடு நேற்று முன்தினம் காலை அப்பகுதி பொது மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் பொலிஸாரினூல் இவை மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வெலும்புக்கூடு கடந்த வருட இறுதியில் காணாமல் போன அப்பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய திருமதி சின்னத்தம்பி என்னும் பெண்ணுடையது என பொலிஸ் விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

எலும்புக்கூடுகள் மீட்கப்பட்ட நபர் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் முதல் காணாமல் போயிருந்தார்.

இவரது எலும்புக்கூடுகள் மீட்கப்பட்ட இடத்திலிருந்து இவர் அணிந்திருந்த ஆடைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ந-8-11)

## நபிகளார் கட்டுரைப்போட்டியில் பௌத்த தேரருக்கு முதலிடம்

(கொழும்பு)

மனித நேயத்தால் உலகை வென்ற நபிகள் நாயகம் என்ற தலைப்பிலான கட்டுரை போட்டியில் பௌத்த தேரரொருவர் முதலிடத்தை பெற்றுள்ளார்.

சமய, கலாசார, கல்விக்கான மன்றம் மனித நேயத்தால் உலகை வென்ற நபிகள் நாயகம் என்ற தலைப்பில் சிங்கள மொழி பேசும் முஸ்லிம் அல்லாதவர்கள் மத்தியில் கட்டுரைப் போட்டியொன்றை நடத்தியது.

இப்போட்டியில் வண கசிமதேரர் முதலிடத்தை பெற்றுக் கொண்டார். இதன் பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் இலங்கை பத்திரிகை ஸ்தாபன கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கட்டுரைப் போட்டியில் முதலிடத்தை பெற்றுக் கொண்ட வண கசிம தேரர் உள்ளிட்ட நாடளாவிய ரீதியிலான வெற்றியாளர்களுக்கு இதன் போது பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் உரையாற்றிய வண கசிம தேரர், ஒவ்வொரு மாணவனும் ஏனைய மதங்களை பற்றி அறிந்து கொள்ளும் வகையில் பாடசாலை புத்தகங்களில் ஏனைய மதங்கள் தொடர்பான விபரங்கள் சேர்க்கப்பட வேண்டும். அப்போது தான் நாட்டில் நிரந்தர சமாதானம் உருவாக முடியும். இது காலம் கடத்தாது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றார். (அ-2)

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

### கவலையை மறப்போம்; இறைவனை நினைப்போம்



"அவர் உன்னை விட்டு விலக மாட்டார்; உன்னை கைவிடவும் மாட்டார்'' (இ.ச.31:6) மனித வாழ்வைப் பாழாக்கிக் கொண்ருடிக்கும் கொடிய நோய்களில் கவலையும் ஒன்றாகும். கவலையானது ஒவ்வொரு மனிதனது வாழ்விலும் பல்வேறுபட்ட காரணங்களினால் உட்புகுந்து அவனது ஆற்றல்களை அடக்கி அவனது திறமைகளை மழுங்கச் செய்து வாழ்வை உருக்குலைப்பது எமது வாழ்வியல் அனுபவமாகும்.

நாம் நாளும் உறவுகளுடன் உறவு கொண்டு வளருகின்றோம். உறவுகள் கலக்கும் போது எழுகின்ற புரிந்துணர் வின்மை, நம்பிக்கையீனம், சந்தேகம் போன்ற பிரச்சினைகளால் நாம் வாழ்வில் வெறுப்படையும் போது மனம் சோர்ந்து போய் கவலையடைகின்றோம். நவீன கால மாற்றங்களுக்கேற்ப எமது எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாத பட்சத்திலும் நாம் கவலையடைவது இயல்பாகும்.கவலையானது பொதுவாக கோபத்தை உண்டாக்குகின்றது. அதனால் எம்மில் பல எதிர்மறை விளைவுகள் உருவெடுத்து எம் வாழ்வை அழிவுப்பாதைக்கு நகர்த்திச் செல்லுகின்ற தன்மையைக் காண முடியும்.

**அருட் சகோதரர் றமேஸ் அ.ம.தி**

எமது வாழ்வில் மனக்குமுறல்கள் நீண்டு சென்றாலும் எல்லாவற்றிற்கும் ஓர் முடிவைக் காட்டி எமக்கு வாழ்வளிக்க கூடியவர் ஒருவர் இருக்கின்றார். அவர் தாம் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. அவரே எமது நம்பிக்கை. இறைவன் அன்று வாழ்ந்த மனிதனுக்கு காலத்துக்கு காலம் பல நிகழ்வுகள் மூலமாக விடுதலை வாழ்வைப் பெற்றுக்கொடுத்து ஆசீர் அளித்தது போல எமது துன்பம் நிறைந்த வாழ்வையும் இன்பமாக மாற்றுவார்.

பல குழப்பங்களுக்கு மத்தியிலும் நிரந்தரமான அமைதியை இயேசு கிறிஸ்து வழியாகத் த்ருவார் என்ற நம்பிக்கையை எங்களில் ஏற்படுத்திக் கொள்ளுவோம்.இயேசுவின் பாடுகளோடு இணைந்து எமது துன்பங்களையும் மனக்கவலைகளையும் இறைவனுக்கு ஒப்புக் கொடுப்போம்

தேவையற்ற கனவுகளை மனதினில் சுமந்து அவற்றுக்காக கலங்குவதை நிறுத்திவிட்டு எம்மில் இறைவனின் திட்டம் எதுவென அறிய ஆவலோடு காத்திருந்து எம்மைத் தயார்ப்படுத்துவோம்.

# இலங்கைக்கு ஆதரவளிக்க ஐந்து நாடுகள் உறுதியளிப்பு

எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமை பேரவை அமர்வுகளின் போது இதுவரை ஐந்து நாடுகள் மட்டுமே இலங்கைக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ள‑ சீனா, ரஷ்யா, கியூபா, பாகிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகளே இவ்வாறு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளன.

26 அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுளை முன்வைக்க தயாராகி வருவதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை மனித உரிமைகள் பேரவை அமர்வுகளில் சமர்ப்பிக்குமாறு சில நாடுகள் விடுத்த கோரிக்கையை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# வவுனியாவில் 100 ஏக்கரில் மரமுந்திரிகைச் செய்கை

வவுனியாவில் மரமுந்திரிகை செய்கையினை ஊக்குவிக்கும் முகமாக கடந்த வருடம் நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் நூறு ஏக்கரில் மர முந்ததிரிகை செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மரமுந்திரிகை பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இதேவேளை, திவிநெகும திட்டத்தின் கீழ் நான்கு பிரதேச செயலக பிரிவுகளிலும் 11 ஆயிரத்து 500 மர முந்திரிகை கன்றுகள் தெரிவு செய்யப்பட்ஸி பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக் கப்பட்டு வருவதாகவும் இதன் மூலம் செட்டிகுளம் மற்றும் நெடுங்கேணி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பயனாளிகளுக்கு மரமுந்திரிகை கன்றுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# வெட்டுக்காயங்களுடன் ஆணின் சடலம் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு -காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புதுக்குடியிருப்பு பகுதீயில் வெட்டுக்காயங்களுடன் ஆணின் சடலமொன்று நேற்று காலை மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.புதுக்குடியிருப்பு புலியடி வீதியி லேயே குறித்த சடலம் மீட்கப்பட்டதாகவும் சடலமாக மீட்கப்பட்டவர் 63 வயதுடையசின்னத்தம்பி இளையதம்பி என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவல் ஒன்றை அடுத்து குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

# கற்பை சூறையாடி பொருட்களை களவாடிய மூவர் கைதாகினர்

## இலங்கைப் பெண்ணுக்கு பிரித்தானியாவில் பரிதாபம்

பிரித்தானியாவில் இலங்கையைச் சேர்ந்த பணிப்பெண் ஒருவரின் கற்பை சூறையாடி அவர் பணிபுரிந்த வீட்டில் இருந்த பெறுமதியான பொருட்களை திருடிச்சென்ற மூன்று சந்தேக நபர்ளை சார்ஜா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, பிரித்தானியாவில் இலங்கைப் பெண் பணிபுரியும் வீட்டில் தனியாக இருந்தவேளை 19 மற்றும் 21 வயதிற்கு இடைப்பட்ட மூன்று இளைஞர்கள் குறித்த வீட்டில் திடீரென நுழைந்துள்ளனர்.

இவர்களில் ஒருவர் வீட்டில் இருந்த பெறுமதியான பொருட்களை கொள்ளையிட்டுள்ளதோடு மேலும் இருவர் தனிமையில் இருந்த பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து வீட்டு உரிமையாளர் சம்பவம் தொடர்பில் உடனடியாக பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்துள்ளார். சார்ஜா பொலிஸ் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விரைந்து செயற்பட்டு மூன்று சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் பல வீட்டுக் கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் களவாடப்பட்ட பொருட்கள் பலவற்றையும் பொலிஸார் அவர்களிடம் இருந்து பறிமுதல் செய்துள்ளனர். (அ-2)

# தியவன்னா ஓயாவிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்திற்கு அருகில் தியவன்னா ஓயாவிலிருந்து நேற்று முன்தினம் காலை ஆணொருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

இச்சடலம் குறித்து பிரதேசவாசிகள் பலர் பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண கூறினார். வெலிக்கடை பொலிஸார் இச்சடலத்தை மீட்டனர்.

இச்சடலம் நீரில் உப்பிய நிலையில் காணப்படுவதால் சடலத்துக்குரியவரின் வயது அடையாளங்களை பொலிஸார் இன்னும் உறுதிப்படுத்தவில்லை.

இச்சடலம் 3 நாட்கள் பழையதாகும். சடலம் கண்டெடுக்கப்பட்ட இடத்திற்கு வந்த கடுவெல பதில் நீதவான் சடலத்தை பார்வையிட்டார். அதன்பின் பிரேத பரிசோதனைக்கு சடலம் அனுப்பப்பட்டது. (அ-2)

# 2012.02 23 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1847- மெக்சிக்கோ- அமெரிக்கப் போர்: மெக்சிக்கோவின் புவெனா விஸ்டா நகரில் அமெரிக்கப் படைகள் மெக்சிக்கோ படைகளைத் தோற்கடித்தன.

★ 1870- அமெரிக்க உள்நாட்டுப் போர் : மிசிசிப்பியில் இராணுவ ஆட்சி முடிவடைந்து அமெரிக்க கூட்டணியில் மீண்டும் இணைக்கப்பட்டது.

★ 1887- பிரெஞ்சு ரிவியேராவில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 2ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்தனர்.

★ 1893- ருடொல்ஃப் டீசல் இயந்திரத்துக்கான காப்புரிமம் பெற்றார்.

★ 1903- கியூபா குவாண்டானமோ விரிகுடாவை ஐக்கிய அமெரிக்காவுக்கு முடிவற்ற குத்தகைக்கு கொடுத்தது.

★ 1904- 10 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு ஐக்கி அமெரிக்கா, பானாமா கால்வாயின் உரிமையைப் பெற்றுக் கொண்டது.

★ 1905- ரோட்டரி அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

★ 1917- சென் பீட்டர்ஸ்பேர்க்கில் முதலாவது மக்கள் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதன் மூலம் பெப்ரவரி புரட்சி ஆரம்பமானது.

★ 1919- இத்தாலியில் பெனிட்டோ முசோலினி பாசிசக் கட்சியை ஆரம்பித்தார்.

★ 1941- புளூட்டோனியம் முதற்தடவையாக உருவாக்கப்பட்டது.

★ 1944- செச்னிய மற்றும் இங்குஷ் மக்கள் கட்டாயமாக மத்திய ஆசியாவுக்கு நாடு கடத்தப்பட்டனர்.

★ 1945- இரண்டாம் உலகப் போர் பிலிப்பைன்சின் தலைநகர் மணிலா அமெரிக்கப்படைகளினால் விடுவிக்கப்பட்டது.

★ 1947- அனைத்துலக தரநிர்ணய தாபனம் (ISO) ஆரம்பிக்கப்பட்டது.

★ 1966- சிரியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அரசு கவிழ்க்கப்பட்டது.

★ 1991- தாய்லாந்தில் இராணுவத் தலைவர் சுந்தொங் கொம்சொம்பொங் தலைமையில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் பிரதமர் சட்டிச்சாய் சூன்ஹாவென் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

★ 1997- ரஷ்யாவின் மீர் விண்வெளி நிலையத்தில் தீவிபத்து ஏற்பட்டது.

★ 1998- மத்திய புளோரிடாவில் இடம்பெற்ற சுழற்காற்றில் 42 பேர் உயிரிழந்தனர்.

★ 2007- இங்கிலாந்தில் கிறேரிக் என்ற இடத்தில் தொடரூந்து ஒன்று விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் உயிரிழப்பு; 22 பேர் காயமடைந்தனர்.

### பிறப்புக்கள்

★ 1633-சாமுவேல் பெப்பீசு, பிரித்தானியக் கடற்படைத் தளபதி (இ.1703)

★ 1868- டபிள்யூ இ.பி.டுபோய்ஸ், ஆபிரிக்க, அமெரிக்க சமூக உரிமையாளர் (இ.1963)

★ 1924- அலன் கோர்மாக், நோபல் பரிசு பெற்ற இயற்பியலாளர் (இ.1998)

★ 1965-மைக்கேல் டெல்,டெல் நிறுவனத்தை ஆரம்பித்தவர்

★ 1983-ஆசீஸ் அன்சாரி, அமெரிக்க நடிகர்

### இறப்புக்கள்

★ 1503- அன்னமாச்சாரியார், கருநாடக இசைக் கலைஞர் (பி.1408)

★ 1719- சீகன் பால்க், ஜேர்மனிய மதகுரு (பி.1682)

★ 1821- ஜோன் கீற்ஸ், ஆங்கிலக் கவிஞர் (பி.1795)

★ 1848- ஜான் குவின்சி ஆடம்ஸ், ஐக்கிய அமெரிக்காவின் 6 ஆவது குடியரசு தலைவர் (பி.1767)

★ 1855-கார்ல் ஃப்ரெடெரிக்காஸ் , கணிதவியலாளர் (பி-1777)

★ 1973- டிக்கின்சன் ரிச்சாட்ஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1895)

### சிறப்பு நாட்கள்

★ புருணை சுதந்திர தினம்(1984)

★ கயானா சுதந்திர தினம் (1970)



★ 1954-ராஜினி திராணகம இலங்கையின் மனித உரிமை செயற்பாட்டாளரும் பெண் உரிமை செயற்பாட்டாளரும் ஆவார் (இ.1989)

# அதிசய உலகம்...

## எலிகளை விழுங்கும் தாவரம்



உயிருடன் உள்ள எலி போன்ற உயிரினங்களை அப்படியே சாகடிக்கும் வல்லமை கொண்ட தாவரம் ஒன்று தொடர்பான அதிர்ச்சித் தகவலை விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளனர். மனிதர்கள் மீது அப்படியே படர்ந்து கசக்கி கொன்று விடும் செடி கொடிகளைப் பற்றி கதைகளில் படித்திருப்பீர்கள். ஆனால் உண்மையில் அப்படி ஒரு செடி இருப்பதை விஞ்ஞானிகள் இப்போது கண்டுபிடித்துள்ளனர். இந்தச் செடியின் இலைகள் உயிருடன் உள்ள எலிபோன்ற உயிரினங்களை அப்படியே சாகடிப்பதை பார்த்த விஞ்ஞானிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். பிரபல தாவரவியல் விஞ்ஞானிகள் ஸ்டுவர்ட் மெக்பெர்சன், அலாஸ்டியர் ரொபின்சன் தலைமையிலான விஞ்ஞானிகள் குழு பிலிப்பைன்ஸ் நாட்டில் விக்டோரியா மலைப்பகுதியில் செடி கொடிகள் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொண்டிருந்தனர்.

அப்போது தான் இந்த மாமிசம் உண்ணும் தாவரம் பற்றி தெரிந்து கொண்டனர். இந்த மலைப்பகுதியில் கிறிஸ்தவ மத பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த மிஷனரிகள் இந்த அபூர்வ தாவரம் பற்றி கேள்விப்பட்டனர். அவர்கள் கொடுத்த தகவலை ஆராய்ச்சி செய்தபோதுதான் இந்த தாவரம் பற்றி தெரிந்து கொண்டனர்.

இது குறித்து மெக்பெர்சன் கூறியதாவது, இந்த கண்டுபிடிப்பு மிக மிக முக்கியமானது. 21 ஆம் நூற்றாண்டு வரை இப்படி ஒரு தாவரம் இருப்பதை கண்டுபிடிக்காமல் இருந்ததே மிகவும் அதிசயம் தான் எனவும் கூறியுள்ளனர். இத் தகவலை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக தாவரவியல் முன்னாள் பேராசிரியர். இவர் 2007 முதல் இந்த தாவரம்பற்றி ஆராய்ச் சிகளை மேற்கொண்டுள்ளார். தன் ஆராய்ச்சியில் மாமிச தாவரம் பற்றிய உண்மைகளை முழுமையாக கண்டுபிடித்த பின்னர் சமீபத்தில் இந்த அதிசயத்தை உலகிற்கு அறிவித்தார்.

## கால், கைகள் இல்லாது வாழ்வில் முன்னேறிவரும் அபூர்வ மனிதன்



கைகள் மற்றும் கால்கள் இல்லாமல் பிறந்து உலகின் மிகச் சிறந்த தன்னம்பிக்கைப் பேச்சாளனாக வலம் வரும் nick Vujicic உங்களில் பலருக்கு ஞாபகமாக இருக்கலாம். ஆம், உண்மையில் ஒரு ஹுரோ ரோல் மொடல் இவர் தான். இவர் திருமணத்தின் பின்னர் ஹவாய் தீவில் தனது மனைவியுடன் சந்தோசமாக பொழுதை களித்துவந்தார்.


Tetra-amelia என்ற அரிய வகை நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் பிறந்த nick Vujicic தற்போது தனது காதல் மனைவியுடன் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் வசித்து வருகின்றார்.சிறுவனாக இருக்கும் போது மாபெரும் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட nick Vujicicஇன்று உலகெங்கும் அதிகம் விற்கப்படும் புத்தக எழுத்தாளர்.

கைகள், கால்கள் இருக்கும் மனிதர்கள் செய்யும் எல்லாக் காரியங்களையும் இவரும் செய்கின்றார்.

எழுதுதல், ரைப் பண்ணுதல், ரம்ஸ் வாசித்தல், பல் துலக்குதல் என்று எல்லா அன்றாட வேலைகளையும் தானே செய்கின்றார்.

## 750 கிலோ எடையுள்ள பூசணிக்காய்



1652 இறாத்தல் (சுமார் 750 கிலோ) நிறையுடைய பெரிய பூசணிக்காய் யொன்று பிரிட்டனில் விளைந்துள்ளது.

க்டந்த 6 வாரங்களாக தினமும் 36 கிலோவினால் அதன்எடை அதிகரித்து வருகிறது.

இப்பூசணிக்காயானது இவ்வாரம் ஏற்கனவே இரண்டு சாதனைகளை முறியடித்துள்ளது.

17 அடி அங்குலமும் 1652 இறாத்தல் நிறையுடைய இப்பூசணிக்காய் பிரித்தானியர் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் சாதனைகளை முறியடித்துள்ளது. விரைவில் இது உலகின் மிகப்பெரிய பூசணிக்காயாக பதிவு செய்யப்படும் அளவுக்கு அதன் எடை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. தற்போது உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்ற பூசணிக்காயின் நிறை 1725 இறாத்தலாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இரட்டை சகோதரர்களான இயன் பட்டன் மற்றும் ஸ்டுவர்ட் பட்டன் (வயது-49) என்பவர்களே இப் பிரமாண்ட பூசணிக்காயினை வளர்த்துள்ளனர். இவர்கள் கடந்த 30 வருடங்களாக பூசணிக்காய் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

## உறைபனிக்குள் சிக்கியவர் 2 மாதத்தின் பின் உயிருடன்



சுவீடன் நாட்டில் காருடன் உறை பனிக்குள் சிக்கி உயிருக்கு போராடிய நபர் 2 மாதங்களுக்குப் பின் பத்திரமாக உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி வடக்கு சுவீடன் பகுதியில் 45 வயதுடைய நபர் ஒருவர் காரில் சென்றார்.

அப்போது வீதியில் இருந்து பாதை மாறி சென்ற கார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள காட்டுப் பகுதிக்குள் சிக்கியது.

அங்கு கடும் பனி கொட்டியதால் கார் முழுவதும் பனியால் மூடப்பட்டது. காருக்குள் சிக்கிய அவர் உணவு கூட இல்லாமல் பனிக்கட்டியையும் உருகும் ஐஸ் தண்ணீரையும் பருகியே 2 மாதங்கள் உயிர் பிழைத்துள்ளார்.

இந்நிலையில் தீவிர தேடுதல் வேட்டைக்குப் பின் இவரை மீட்பு படையினர் மீட்டுள்ளனர்.


## பனியின் மேல் மிக வேகமாக ஸ்கூட்டர் செலுத்தி சாதனை



ஒவ்வொருவருக்கும் விதவிதமான பொழுது போக்கு காணப்படும். அதில் ஒன்றுதான் பனிபடர்ந்த பிரதேசத்தில் ஸ்கூட்டர் செலுத்துவதாகும்.

இவ்வாறு ஸ்கூட்டர் செலுத்தும் போது சாதாரண வேகத்திலேயே அவை இயங்கும். ஆனால், 33 வயதுடைய கோலின் பியூர்ஸ் என்ற இயந்திர தொழில்நுட்பவியலாளர் ஒருவர் மணிக்கு 51 மைல் என்ற வேகத்தில் ஸ்கூட்டர் செலுத்தி சாதனை படைத்துள்ளார். இதற்காக ஸ்கூட்டரில் காணப்படும் பெற்றோல் இன்ஜினை ஐந்து கியர் கொண்ட 125CC உந்துருளி ஒன்றின் இன்ஜினால் பிரதியீடு செய்திருக்கின்றார்.

## உடலை பதறவைக்கும் சாகசம்



உடலில் மீள்தன்மையுடைய கயிற்றை கட்டிக் கொண்டு உயரமான இடங்களிலிருந்து குதிப்பது பலரால் விரும்பப்படும் ஒரு விநோத விளையாட்டு ஆகும். எனினும் சில சந்தர்ப்பங்களில் இவ்விளையாட்டு விபரீதங்களில் முடிவதுண்டு. இதற்கு துணிவு, பதற்றமின்மை ஆகியவை மிக முக்கியமாகும். இந்த விளையாட்டை 150 அடிகள் நீளமான கயிற்றை பயன்படுத்தி அதற்கு சமனான உயரத்தில் இருந்து குதித்து சாதனை புரிந்திருக்கின்றார். டிவைன் கிரகாம் என்ற மனிதர் அவர் குதிப்பதற்கு தெரிவு செய்த அந்த உயரமான இடத்தின் தோற்றமும் மிகப் பயங்கரமாக காணப்படுவதுடன் இப்பிரதேசம் ஊட்டா என்ற இடத்தில் அமைந்துள்ளது.

# ஹஜ் செய்யவுள்ளோரை பதிவு செய்யகோரிக்கை

(கொழும்பு)

முஸ்லிம்களின் இறுதிக் கடமையான ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்ற 2012 ஆம் ஆண்டு தயாராகவுள்ள அனைவரும் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் முஸ்லிம் கலாசார திணைக்களத்தின் மூலம் தங்கள் பதிவுகளை செய்து கொள்ள வேண்டும்.

பதிவு செய்யாதவர்களுக்கு ஹஜ் கடமையை நிறைவேற்ற செல்வது கஷ்டமாகும் என்று நகர விவகார சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை கோறளைப்பற்று மத்தி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாக காரியாலயத் திறப்பு விழா நிகழ்வு இயக்குநர் சபைத் தலைவர் எம்.ஏ. சலாம் தலைமையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற போதே சிரேஷ்ட அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஹஜ் கடமையை நிறைவேற்ற செல்வதற்கு இவ்வருடம் தயாராகவுள்ள அனைவரும் முஸ்லிம் கலாசாரத் திணைக்களத்தில் 25 ஆயிரம் செலுத்தி தங்களை பதிவு செய்து கொள்ளவும் ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்லும் போது செலுத்த வேண்டிய மொத்தத் தொகையில் இருந்து தாங்கள் செலுத்திய பதிவுக்கட்டணம் கழித்தே பெறப்படும்.

முதன் முறையாக ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்வோருக்கே இம்முறை முன்னுரிமை வழங்கப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஹஜ் கடமையை நிறைவேற்றியவர்களுக்கு அதற்குப் பின்னர் தான் வழங்கப்படும் என்றும் கூறினார். (அ-2)

# மேலதிக பாதுகாப்பை கோருகிறது ஐ.நாவுக்கான இலங்கை தூதரகம்

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான குழுக்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக குற்றம் சாட்டியுள்ள ஜெனீவாவிலுள்ள ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர தூதரகம் தமக்கு மேலதிக பாதுகாப்பு வழங்குமாறு சுவிட்சர்லாந்து அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜெனீவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அலுவலகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்துவதாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் தலைவரான விஸ்வநாதன் ருத்ரகுமார் தலைமையிலான தமிழீழ விடுதலைப்புலிகளின் செயற்பட்டாளர்கள் குழுவொன்று எதிர்வரும் 27 ஆம் திகதி லண்டனிலிருந்து ஜெனீவாவுக்கு வரவுள்ளதாக இலங்கைத் தூதரகத்திற்கு தகவல் கிடைத்துள்ளதாக ஜெனீவாவிலுள்ள ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் நெடியவன் தலைமையிலான மற்றொரு குழு எதிர்வரும் மார்ச் 7 ஆம் திகதி பெல்ஜியத்திலிருந்து ஜெனீவாவுக்கு செல்லவுள்ளதாகவும் தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு இலங்கையின் நிரந்தர தூதரகம் கோரியுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# தமிழருக்காக நீதிகேட்டு தமிழ்நாட்டில் கையெழுத்து வேட்டை ஆரம்பம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையிடம் எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி ஈழத்தமிழர்களுக்கு நீதி கேட்பதற்காக பெல்ஜியத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட நீதிக்கான நடைபயணம் 17 ஆவது நாளாகவும் தொடர்கின்றது.

ஈழத்தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு மேற்கொண்ட போர்க்குற்றம் தொடர்பான சுயாதீன விசாரணையை சர்வதேச சமூகம் ஆரம்பிக்க வேண்டும் என்று தமிழ்நாட்டில் உள்ள உறவுகள் கையெழுத்து வேட்டையில் இறங்கியுள்ளன.

ஈழத்தமிழர்களுக்கு நீதி கேட்டு தமிழக உறவுகள் குறிப்பாக அரசியல் தலைவர்களான வைகோ, நெடுமாறன், சீமான் ஆகியோர் உட்பட பலரும் உணர்வெழுச்சியுடன் கையெழுத்து அஞ்சல் அட்டைகளை ஏற்பாடு செய்து வருகின்றனர்.

எனவே, எம் உறவுகளுக்காக புலம் பெயர்ந்து வாழுகின்ற அனைத்து தமிழர்களும் இந்த வரலாற்று கடமையில் தம்மையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

அதன் மூலம் உலகத் தமிழர் அனைவரினதும் ஒருமித்த குரல் ஒலிக்கட்டும். அது சர்வதேசத்தின் மனச்சாட்சியை தட்டியெழுப்பி எமக்கான நீதியை பெற்றுத்தரட்டும் என்று நீதிக்கான நடைபயணத்தினை மேற்கொள்ளுபவர்கள் வேண்டி நிற்கின்றனர்.

தயவு செய்து காலம் தாழ்த்தாது கையொப்பமிட்டு ஐ.நாவிற்கு அனுப்பி வையுங்கள். இது எமது கடமை. இதை நாம் ஒவ்வொருவரும் செய்ய வேண்டும். எமக்கான நீதியை நாமே கேட்போம் என்று அறைகூவல் விடுகின்றனர் நீதிக்கான நடைபயணத்தை மேற்கொள்ளும் உணர்வாளர்கள். (அ-2)

# கைதான பெண்கள் விடுதலை

மகாசிவராத்திரி தினத்தன்று மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வளாகத்தினுள் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட 4 பெண்களும் விசாரணையின் பின் மன்னார் மாவட்ட மேலதிக நீதவானினால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் பொலிஸாரினால் ஆஜர்படுத்தப்பட்ட இந்த 4 பெண்களிடமும் விசாரணையை மேற்கொண்ட மன்னார் மாவட்ட மேலதிக நீதவான் ஏ.யூட்சன் அவர்களை விடுதலை செய்தார். (அ-2)

# சரத்தின் வழக்கு அடுத்த மாதத்திற்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தை கவிழ்க்க சூழ்ச்சி மேற்கொண்டமை தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா, அவரின் செயலாளர் சேனக டி சில்வா ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தொடர்ந்து மூன்று தினங்களுக்கு விசாரணைகள் இடம்பெறவுள்ளதாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் அறிவித்தார்.

எதிர்வரும் மார்ச் 13,15 மற்றும் 16 ஆம் திகதிகளில் பிரதிவாதிகளுக்கெதிரான வழக்கு விசாரணைகளை முன்னெடுக்க தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது இராணுவத்திலிருந்து தப்பி வந்த சிப்பாய்கள் 10 பேரை தம்வசம் வைத்துக் கொண்டு வேதனமும் இருப்பிட வசதிகளை வழங்கி அரசாங்கத்தை கவிழ்க்கும் முயற்சிகளை மேற்கொண்டதாக அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (அ-2)

# கிணற்றில் வீழ்ந்து யுவதி மரணம்

வவுனியா நாகர் இலுப்பை குளத்தினை சேர்ந்த இளம் பெண் ஒருவர் நேற்று முன்தினம் கிணற்றில் விழுந்து மரணமடைந்துள்ளார். தனது வீட்டிற்கு அருகாமையிலுள்ள காணியொன்றில் மாடுகளை மேய்ச்சலுக்காக கட்ட சென்றபோதே அவர் கிணற்றில் தவறி விழுந்து இறந்திருக்கலாம் என உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பெண்ணின் சடலத்தினை மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் நேரில் சென்று பார்வையிட்டு சடலத்தினை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தார். வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலத்தினை வவுனியா மாவட்ட நீதவான் அலேக்ஸ்ரொஜா பார்வையிட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# நீர்த்தாங்கியில் விஷம் கலந்தது உறுதி

செவனகல பிரதேச வைத்தியசாலைக்கு பொறுப்பான வைத்தியரின் வீட்டிலுள்ள நீர்த்தாங்கியில் விஷம் கலக்கப்பட்டமை இரசாயன பரிசோதனை அறிக்கையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் இரசாயன பரிசோதனை அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகன தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் குறித்த வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் அண்மையில் அம்பிலிப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

சந்தேக நபரான குறித்த வைத்தியர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ-2)

# ஆளும் கட்சியின் எம்.பிக்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலமர்வு

## காரணம் என்ன? ஆளும்கட்சி எம்.பிக்கள் கேள்வி

(கொழும்பு)

அமைச்சர்கள் மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு அமைச்சினால் தியத்தலாவ பாதுகாப்பு கல்லூரியில் இரண்டு நாட்கள் செயலமர்வு ஒன்றினை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கேள்வியெழுப்பியுள்ளதாக சிரேஷ்ட அமைச்சரொருவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் 3 ஆம் மற்றும் 4 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இந்த செயலமர்வினை நுவரெலியாவில் நடத்த முன்னர் தீர்மானிக்கப்பட்ட போதும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கிணங்க பாதுகாப்பு காரணங்களுக்காகவே தியத்தலாவ பாதுகாப்பு கல்லூரி தெரிவு செய்யப்பட்டதாக அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த இரண்டு நாட்கள் செயலமர்வில் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ, பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த செயலமர்வின் ஆரம்ப நிகழ்வில் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பிரதான உரையாற்றவுள்ளதுடன் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் பலரும் உரையாற்ற வுள்ளனர்.

இந்த செயலமர்வின் பிரதான நோக்கம் இதுவரை தெரியாதுள்ளது என சிரேஷ்ட அமைச்சரொருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுபோன்றசெயலமர்வுகளை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடு செய்வது தொடர்பில் நாடாளுமன்ற நிலையியல் கட்டளை சட்டத்திலோ அல்லது பொது சட்டத்திலோ தேட முடியாதுள்ளதாக குறித்த சிரேஷ்ட அமைச்சர் தெரிவித்துள்ளார்.


இந்த இரண்டு நாட்கள் செயலமர் வுக்காக தியத்தலாவ பிரதேச பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. (அ-2)

# ஈரான் மீதான தடையும் இலங்கையில் ஏற்படும் பாதிப்புகளும்

ஈரானிற்கும் அமெரிக்காவுக்குமிடையே தீவிரமடையும் இராஜதந்திரப்போர், இலங்கையின் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தப்போகிறது.

சர்வதேச அளவில் இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணைக்கான அழுத்தங்கள் அதிகரிக்கும் அதேவேளை, மத்திய கிழக்கு நெருக்கடியும் ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள பொருளாதார சரிவும் இலங்கையின் திறைசேரியை ஆட்டம் காணவைக்கிறது.

சென்றவாரம் அனைத்துலக குற்றவியல் நீதித்துறை மற்றும் போர்க் குற்றறங்கள் தொடர்பான அமெரிக்காவின் சிறப்புப் பிரதிநிதி ஸ்டீபன் ராப் இலங்கைக்கு வருகை தந்துள்ளார். அத்தோடு மத்திய மற்றும்


ஸ்ரீஃபென் ராப்

தெற்காசிய பிராந்தியத்திற்கான அமெரிக்க இராஜாங்க திணைக்களத் தின் உதவிச்செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக்கும், அமெரிக்க மக்கள் பாதுகாப்பு மற்றும் ஜனநாயக உரிமைகள் தொடர்பான உதவிச் செயலர் மேரி ஒட்டேரோ அவர்களும் வருகைதந்துள்ளனர்.

பெப்ரவரி 27 ஆம் திகதியிலிருந்து மார்ச் 23 ஆம் திகதிவரை நடைபெறும் ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 19வது கூட்டத்தொடரில் இலங்கை குறித்த விவகாரம் எழுப்பப்படலாமென்று எதிர்வு கூறப்படும் நிலையில், இம்மூவரின் வருகையும் முக்கியத்துவமடைகிறது. மானுடத்திற்கெதிரான குற்றங்கள் தொடர்பான விவகாரங்களைக் கையாளும் ஸ்டீபன்ராப்பினதும், மரிஒட்டேரோவினதும் பயணமானது, மனிதஉரிமைப் பேரவை கூட்டத்தொடர் பற்றி பேசுவதற்கானதென ஊகிக்கப்படுகிறது.

அதாவது, இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிசிற்கு அமெ

**நன்றி : இணையம்**

ரிக்க இராஜாங்க திணைக்கள செயலாளர் ஹிலாரி கிளின்டன் வரவேற்புக்கடிதம் அனுப்பிய பின்னரே இம் மூவரின் தொடர் விஜயங்கள் மேற்கொள்ளப்படுவதை அவதானிக்கலாம்.

அனேகமாக மனித உரிமைப் பேரவையில் இலங்கை குறித்து மேற்கொள்ளப்படும் விவாதங்கள் அல்லது பிரேரணைக்ள் என்பன, நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில் அமையுமென எதிர் பார்க்கலாம்.

சுயாதீன சர்வதேச போர்க்குற்ற விசாரணையொன்று நடத்தப்பட வேண்டும்மென்கிற முடிவினை மேற்குலகம் ஏற்கனவே தீர்மானித்திருந்தால், இத்தகைய இணக்கப்பாட்டு விஜயங்கள் தேவையற்றது. ஆகவே, இறுதியறிக்கையை மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்க மாட்டோமென அரசு உறுதிப்படக் கூறியுள்ள நிலையில், அதிலுள்ள பரிந்துரைகளை யாவது நிறைவேற்றுங்கள் என்கிற அழுத் தத்தை முதற்கட்டமாக பிரயோகிக்க மேற்குலகம் விரும்புகிறது.

சுயாதீன விசாரணைப் பொறிமுறை என்கிற ஆயுதத்தை, இறுதியாகப் பயன்படுத்தவே மேற்குலகம் முனையும் என எதிர்பார்க்கப்படுகிறது.


அடுத்ததாக இலங்கை எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகள் குறித்து நோக்க வேண்டும். வாங்கிய கடனை அடைப்பதற்கு, மேலதிக கடனை வாங்கும் வழிமுறைகள் பற்றியே மத்திய வங்கி ஆளுநரும் திறைசேரிச் செயலாளர்களும் மூளையைப் பிசைந்து கொண்டிருக்கிறார்கள். போல் தெரிகிறது.

பாதுகாப்பு அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட நிதி, மொத்த உள்ளூர் உற்பத்தியின் 4 சதவீதத்தை தொடுவதால், அரசிறை ஒருங்கிணைப்பு கடினமாகவுள்ளதாகக் கூறப்படுகிறது. அதேவேளை, உட்கட்டுமானத் திட்டங்களுக்கு கூடுதல் முதலீடுகளை செல விட்டாலும், அதிலிருந்து பெறும் வருவாய் குறைவாக உள்ளது.

முதிர்ச்சியடையும் அரச முறிகளுக்கு நிதி தேவைப்படுகிறது. அதாவது பத்திரங்களைக் கொடுத்து காசு வாங்கலாம். அதற்கான வட்டியையும் செலுத்தலாம். ஆனால், அதற்கான கால எல்லை அல்லது முதிர்ச்சிநிலை அண்மிக்கும் போது, வாங்கிய கடனைத் திரும்பவும் கொடுக்க வேண்டும். ஆகவே மறுபடியும் புதிய அரச முறிகளை விற்று அதிலிருந்து பெறப்படும் நிதியை கொண்டு பழைய முதிர்ச்சியுறும் முறிகளுக்கு செலுத்தலாம்.

ஒருபில்லியன் டொலர் பெறுமதியான புதிய அரச முறிகள் விற்பனை செய்யப்படுமென மத்திய வங்கி அண்மையில் வெளியிட்ட செய்தி இதனை உறுதி செய்கிறது. மூலதனச் சந்தையில் இத்தகைய முறி வியாபாரத்தில் தவிர்க்க முடியாமல் ஈடுபடும் அரசு, சர்வதேச நாணய நிதியத்தோடு வேறுவகையான பேரம் பேசலில் ஈடுபடுவதைக் காணலாம்.

எனவே, 18 பில்லியன் அமெ ரிக்க டொலர்களை 1.1 சத்வீத வட்டிக்கு சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கியுள்ளது. தவணைக் கொடுப்பனவான 800 மில்லியன் கடன் தொகை 3.1 சதவீத வட்டிக்கு வழங்கப்படும். அந்நிதியம் கூறியதால், மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட்கப்ரால் குழப்பமடைந்துள்ளார்.



ஹிலாரி கிளின்ரன்

ஒட்டுமொத்த கடனிற்கும் 3.1 சதவீத வட்டி அறவிடப்படுமென்று அவர் நினைத்ததால் வந்த குழப்பம் இது. 3.1 சதவீத வட்டி, இனிமேல் வழங்கப் போகும் 800 மில்லியன் டொலர்களுக்கு மட்டுமே என்று மின்னஞ்சல் ஊடாக உறுதிப்படுத்தியவுடன் சிக்கல் தீர்ந்துவிட்டது.

இவை தவிர இலங்கை நாணயத்தின் மதிப்பிறக்கம் தொடர்பான புதிய சிக்கலொன்று உருவாகிக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம்.

உண்மையான பெறுமதியை விட, இலங்கை நாணயத்தின் மதிப்பு 20 சதவீதத்தால அதிகரித்துக் காணப்படுவதால், அதனை இயல்பான முதிர்வுக்கு அனுமதிக்க வேண்டுமென சர்வதேச நாணய நிதியம் அழுத்தம் கொடுக்க ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சீனா தனது நாணயத்தின் பெறுமதியை குறைத்துவைத்து ஏற்றுமதியை அதிகரிக்கிறது என்பதோடு, அதன் யுவானை இயல்பான முதிர்ச்சிக்கு அனுமதிக்க வேண்டு மென்கிற அமெரிக்காவின் நீண்டகால குற்றச்சாட்டை நினைவிற்கொள்வது பொருத்தமானது.


மேரி ஒட்டேரோ

கடந்தவருடம் நவம்பரில் 3 சதவீதத்தால் இலங்கை ரூபாய் மதிப்பிறக்கம் செய்யப்பட்டது. நினைவிருக்கலாம். மறுபடியும் இம்மாதம் 2ஆம் திகதி, நாணயத்தின் பெறுமதியை 20 சதத்தால் குறைத்து அமெரிக்க டொலர் ஒன்றிற்கு 114.10 ஆக நிர்ணயித்தது. இலங்கை மத்திய வங்கி.

ஆனாலும், நிர்ணயம் அல்லது மாற்றத்தை தடுப்பது என்பதைப் பிரயோகிக்காமல் நெகிழ்வான நாணயமாற்று விகிதக் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டு மென்பதைத் தொடர்ந்தும் வலியுறுத்துகிறது நாணயநிதியம்.

அதேவேளை இம்மாதம் 3ஆம் திகதியன்று, அரச வட்டிவீதத்தை 0.5 வீதத்தால் அதிகரித்துள்ளது மத்திய வங்கி. நாணயமாற்று விகிதத்தை நிர்ணயிப்பது மற்றும் வட்டி வீதத்தை உயர்த்துவது போன்ற நகர்வுகள், அதிகரிக்கும் இறக்குமதியை மட்டுப்படுத்து வதோடு, மெரிக்க டொலருக்கான தேவையையும் குறைத்துவிடுமென மத்தியவங்கி எண்ணுவது போலுள்ளது.

இலங்கையின் தற்போதைய நடப்பு கணக்கு பற்றாக்குறையா னது மொதத்த உள்ளூர் உற்பத்தியின் 20 சதவீதத்தை எட்டியுள்ளது. ஆகவே வளர்ச்சியடையும் வர்த்தக பற்றாக் குறையை எவ்வாறு குறைப்பது என்கிற சிக்கலில் திணறுகிறது இலங்கையின் திறைசேரி.

இறக்குமதியின் தேவை அதிகரிக்கும் போது, சேமிப்பிலுள்ள டொலரைப் பயன்படுத்தி, ரூபாவின் பெறுமதி மதிப்பிறக்கமடையாமல் எவ்வாறு தடுப்பது என்கிற பிறதொரு நெருக்கடிக்குள்ளும் மத்திய வங்கி தள்ளப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

ஏற்கனவே, கடந்த வருடத்தில் மட்டும், மத்தியவங்கியின் ஒரு பில்லியன் டொலருக்கு மேற்பட்ட நிதியினை சர்வதேச நாணயச் சந்தை விழுங்கிய நிலை ஏற்பட்டது. 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டில், 8 பில்லியன் டொலர்களாக இருந்த வெளிநாட்டு நாணயக்கையிருப்பு, அதேவருடம் டிசெம்பரில் 5.9 பில்லியனாக வீழ்சியடைந்தது. அதேவேளை இக்கையிருப்பு இன்னமும் குறைவடையக் கூடியநிலை காணப்படு வதாக கலாநிதி அர்ச்சுனா சிவானந்தன் போன்ற பொருளியலாளர்கள் எச்சரிக்கின்றார்கள்.

அத்தோடு விலையுயர்ந்த நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியும் திறைசேரிக் கையிருப்பை வற்றச் செய்கிறது. உதாரணமாக 2010 ஆம் ஆண்டைவிட 2011 இல் பதிவு செய்யப்பட்ட கார்கள், 60.14 சதவீதமாகவும், முச்சக்கர வண்டி


ரோபேர்ட் ஓ பிளேக்

39.96 சதவீதமாகவும், மோட்டார் சைக்கிள்கள் 11.72 சதவீதமாகவும் உயர்வடைந்துள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவித்திருக்கின்றன.

(தொடரும்)

## கடத்தப்பட்ட மரக்குற்றிகளை பொலிஸார் கைப்பற்றினர்.

வாகரை ஊரியங்கட்டு பிரதேசத்தில் அனுமதிப்பத்திரம் இன்றி வெட்டப்பட்ட ஒரு தொகை மரக்குற்றிகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையதாக கருதப்படும் மூவருக்கு எதிர்வரும் மாச் மாதம் 27 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு வாழைச்சேனை நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் அனுமதி பெறாமல் மரங்களை வெட்டியதாக குறித்த சந்தேக நபர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதாக வாகரை பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலொன்றுக்கமைய இந்த மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். (அ-2)

# மண்வளங்களை பாதுகாப்பதில் நாம் முனைப்புடன் செயற்பட வேண்டும்

## அத்துரலிய தேரர் எம்.பி. தெரிவிப்பு

வடக்கில் பயங்கரவாதிகளினால் பாதுகாக்கப்பட்ட மண்ணை நாம் இன்று நாசப்படுத்திக் கொண்டிருக்கின்றோம். நிறுவனங்கள் இலாபநோக்குடனேயே செயற்படுகின்றன. கிருமிநாசினிகள் பிரபாகரனை விடவும் மோசமானது என்று ஆளும் கட்சியின் எம்.பியான அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பீடை கொல்லிகளை கட்டுப்படுத்தும் சட்ட மூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பிரபாகரனை விடவும் நிறுவனங்களின் செயற்பாடுகள் அபாயகரமானவை. இயற்கை பசளைகளால் பயங்கரவாதிகளினால் வடக்கில் பாதுகாக்கப்பட்ட மண்ணை நாம் நாசமாக்குகின்றோம். நிறுவனங்களின் செயற்பாடு, கிருமி நாசினிகளின் பயன்பாடு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவதானத்தை செலுத்த வேண்டும். கிருமி நாசினிகள் ஆபத்தானவையாகும்.

இரசாயனம் மனிதனுக்கு கேடு விளைவிக்கக்கூடியது. அபாயகரமானது. இதனால் நீரிழிவு உள்ளிட்ட நோய்கள் ஏற்படுகின்றன.

அநுராதரபுரம், பொலநறுவையில் உணவு பாதுகாப்பு முக்கியமானதாகும். அங்கு உணவு பயன்பாட்டினால் தாய், சிறுவர்கள், குடும்பத்தலைவன் உட்பட குடும்பத்தினரே பாதிக்கப்பட்டுகின்றனர்.

இரசாயன பயன்பாட்டை பல நாடுகள் தவிர்த்து விட்டன. இதற்காக பசளையை நாம் பயன்படுத்த வேண்டும்.

சுவீடன், சுவிட்சர்லாந்து மற்றும் கியூபா போன்ற நாடுகள் கையாளும் புதிய தொழில் நுட்ப முறையைப் பின்பற்ற வேண்டும். இதன் மூலமே மண்ணைப் பாதுகாக்க முடியும் என்றார். (அ)

# சடலங்களை விரைவாக உறவினர்களிடம் ஒப்படைப்பது குறித்து ஹக்கீம் ஆராய்வு

(கொழும்பு)

கொழும்பு மாநகரத்திலும் மற்றும் தேசிய வைத்தியசாலைகளிலும் சம்பவிக்கும் மரணங்களை துரிதமாக விசாரித்து சடலங்களை உறவினர்களிடம் தாமதமின்றி கையளிப்பது தொடர்பிலும் ஏனைய குறைபாடுகளைப் பற்றியும் நீதி அமைச்சில் முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இக்கலந்துரையாடல் நீதி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், கொழும்பு மரண விசாரணை அதிகாரி சட்டத்தரணி எட்வேட் அஹங்கம ஆகியோருக்கிடையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த சந்திப்பு தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மரணங்கள் தொடர்பில் துரித விசாரணைகளை மேற்கொண்டு சடலங்களை காலதாமதமின்றி இயன்றவரை விரைவில் உறவினர்களிடம் ஒப்படைப்பது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

குறைபாடுகள் இனங்காணப்பட்டு அவை பற்றி சுமுகமாக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேசித் தீர்வு காண்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

சுகாதார அமைச்சர், பொது நிர்வாக அமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதோடு அவ்வமைச்சுக்கள் தொடர்பான பாராளுமன்ற ஆலோசனைக் குழுக்கூட்டங்களின் போதும் நீதி அமைச்சர் ஹக்கீம் இவ்வாறான விடயங்களை அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளை காண்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மரணப் பதிவுகள் வைத்தியசாலைகளில் இரவு வேளைகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியத்தை அமைச்சர் ஹக்கீம் குறிப்பிட்டதோடு அது தொடர்பாக பொது நிர்வாக அமைச்சருடன் கலந்துரையாடி தீர்வு காணவுள்ளதாகவும் கூறினார்.

மரணங்கள் சம்பவிக்கும் பொழுது இறந்தவர்கள் தூர இடங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தால் அப்பிரதேசத்திற்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரிகள் வரும் வரை காத்திருக்காமல் வைத்தியசாலைக்கு அருகில் உள்ள பொலிஸ் நிலைய அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் விசாரித்து சடலங்களை விரைவாக ஒப்படைப்பது தொடர்பில் பொலிஸ் மா அதிபருடனும் கலந்துரையாட உள்ளதாகவும் அமைச்சர் ஹக்கீம் கூறினார்.

சவச்சாலைகளில் உள்ள குளிரூட்டிகள் பழுதடைந்துள்ளமை பற்றியும் சிற்றூழியர் பற்றாக்குறை பற்றியும் ஏனைய குறைபாடுகள் பற்றியும் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுடனும் செயலாளருடனும் தாம் பேச இருப்பதாகவும் அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எம். நைசர், அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் எம். நயிமுல்லாஹ், இணைப்பாளர் எஸ்.எம். எம். பளீஸ் மற்றும் அகில இலங்கை ஜனாஸா நலன்புரிச் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோரும் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (அ-2)

## ஆற்றில் தவறி வீழ்ந்து மாணவன் உயிரிழப்பு

அட்டாளைச்சேனை கோணாவத்தை ஆற்றில் தோணி ஓட்டிய பாடசாலை மாணவன் தவறி விழுந்து உயிரிழந்து பரிதாபகரச் சம்பவமொன்று கடந்த 20 ஆம் திகதி மாலை இடம்பெற்றுள்ளது.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை வடக்கு வீதி, அட்டாளைச்சேனை-13 ஆம் பிரிவின் அஷ்ரப் அப்லால் (வயது 15) க.பொ.த. சாதாரண தரம் படிக்கும் மாணவனே இச்சம்பவத்தில் உயிரிழந்தவராவார். (அ-2)

# அமைச்சர்களான ஹக்கீம் மற்றும் றிசாத் நேற்று ஜெனீவா பயணம்

சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை அமர்வில் கலந்து கொள்ளவதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவரும் கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் நேற்று புதன்கிழமை ஜெனீவா பயணமாகினர்.

இவர்கள் இருவரும் எமிரேட்ஸ் 651 எனும் இலக்க விமானத்தில் நேற்று காலை 9.50 மணியளவில் ஜெனீவா நோக்கிப் பயணமாகியுள்ளனர்.

இக்குழுவினர் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி இலங்கை திரும்பவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் இருந்து ஜெனீவாவிற்கு புறப்படும் முன்னர் விமான நிலையத்தில் வைத்து ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த அமைச்சர் றிசாத் பதியுதீன்,

பயங்கரவாதத்திற்கு எதிரான செயற்பாடுகளில் அரசாங்கம் மனிதாபிமானத்துடன் நடந்தமையினாலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திற்கு பெரும்பான்மையான மக்கள் ஆதரவு வழங்கியுள்ளனர்.

ஐ.நா. மனித உரிமை அமர்வில் இலங்கையின் பக்கம் நியாயத்தை ஏற்றுக் கொள்ளத்தக்க போதுமான ஆவணங்கள் இருக்கின்றன என்றார். (அ-2)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 25.01.2012 அன்று எமையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எமது குடும்ப குலவிளக்கு

### திருமதி.ஜெயப்பிரபா (பிரபா) கமல்ராஜ்

எண்ணம் திகைத்தோட ஏங்கி விழி மூடுகின்றோம்
கண்ணில் உனைக்காண இறை அன்பை நாடுகின்றோம்
இன்னும் நீ சிரித்த சிரிப்பு எம்கண்ணில் தெரிகிறதே
என்று வருவாய் எமைக் காண?

அன்னாரது வீட்டுக்கிருத்தியக் கிரியை அவர்களின் இல்லத்தில் 24.02.2012 வெள்ளிக்கிழமை அன்று நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(7554)

T.P:-0212224678

# கிளிநொச்சியில் ஓர் மனிதநேயம்...



இல்லத்தின் தலைவர் தி.இராசநாயகம் (நடுவில்) அருகில் (நிற்பவர்) நிர்வாக இயக்குநர் து.இரத்தினசிங்கம்

### நேற்றைய தொடர்ச்சி...

'நன்நெறி நின்று பல்வேறு நடைமுறைக்கு சாத்தியமான பயிற்சிகள் தேர்ச்சிகளினூடாக நவீன தொழில்நுட்பத்துடனான புதிய ஆக்கங்களை அறிமுகப்படுத்தி எமது தாய் மொழியையும் தாய் தேசத்தையும் தெளிந்த அன்புடன் நேசிக்கும் ஒழுக்கமும் பண்பாடும் மிளிரும் இளைய தலைமுறையை உருவாக்குதல்' என்பது இந்த இல்லத்தின் பணிக் கூற்றாகக் காணப்படுகிறது.

இதேபோல் வருகால உலகின் சவால்களை வெற்றிகொள்ளும் உயரிய சிந்தனை கொண்ட உத்தமர்களை சமூகத்திற்கு பெற்றுக் கொடுத்தல் என்பது இந்த இல்லத்தின் இலக்காகக் காணப்படுகிறது.

இந்த இலக்கை நோக்கியே அவர்கள் பயணித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பது ஆச்சிரமத்தைப் ஒரு தடவை சென்று பார்க்கும் எவரும் புரிந்துகொள்ள முடியும்.

யார் சென்றாலும் அவர்கள் வணக்கம் சொல்லி வரவேற்கும்அழகேதனியானது.

மகாதேவ ஆச்சிரம சிறுவர் இல்லத்துக்குள் சென்றதும் முதலில் பணிமனை. அளவான ஊழியர்கள்; சிறப்பான பணிமனை.

பணிமனை வாசலிலேயே ஐயா இருக்கிறார். (இல்லத்தின் தலைவர் திரு.தி.இராசநாய என்று... அவரே தொடர்ந்தார்.

மாதாந்தம் மனித நேய நிறுவனத்தினால் ரூ.2 இலட்சத்து 80 ஆயிரத்து 500 ரூபாய் வழங்கப்படுகிறது.

மாதாந்தம் ஒரு பிள்ளைக்கு ரூ.500 வீதம் நன்னடத்தை சிறுவர் இல்லத்தினால் வழங்கப்படுகின்றது.

ஒவ்வொரு மாதமும் 5-ம் திகதி இல்ல பிள்ளைகளுக்கு மூன்று நேரமும் சிறப்பு உணவு கிளிநொச்சி மக்கள் நிறுவனம், லண்டனால் வழங்கப்படுகிறது.

நான் சென்றிருந்த அன்றும் (12.02.2012) சிறப்பு உணவு இல்ல சிறார்களுக்கு வழங்கப்பட்டது.

பாலசுப்பிரமணியம் குணபாலன் என்பவர் தனது குடும்ப உறுப்பினர்கள் 13 பேரை இறுதி யுத்தத்தில் பறிகொடுத்தவர். தற்போது வெளிநாடொன்றில் வசிக்கிறார்.

அவரால் அன்றைய தினம் சிறப்பு உணவு வழங்கப்பட்டது. அதில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. அவ்விருந்து ஒரு விசேட வைபவங்களுக்கு வழங்கப்படுவதை விடச் சிறப்பாக இருந்தது.

இவ்வாறும் சிலர் தமது பங்களிப்புகளை வழங்கிவருகின்றனர்.

இப்படி எல்லோரும் சேர்ந்து வடம் பிடிப்பதால்தான் இந்த இல்லம் சிறப்பாக நகர்ந்து கொண்டிருக்கிறது போலும்.

கடந்த கால யுத்தம் இந்த இல்லத்தின் பௌதிக வளங்களை முழுமையாகவே அழித்தது. அதிலிருந்து படிப்படியாக இப்போது மீண்டு வருகிறார்கள்.

இன்னும் திருத்தப்பட வேண்டியவையாக கலாசார மண்டபம், இதற்கு 10 மில்லியன் ரூபாய்நிதிதேவைப்படும்எனமதிப்பிடப்பட்டுள்ளது.

இம் மண்டபம் இயங்கினால் கிளிநொச்சியின் பல நிகழ்வுகளை இங்கேயே நடத்தலாம். இல்லத்திற்கும் ஒரு வருமான மார்க்கமாக இது அமைந்துவிடும்.

அவர்களுக்கு ஆச்சிரம சிறுவர் இல்லத்திற்குள்ளேயே மேலதிக வகுப்புகளுக்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கும் பிரத்தியேகமாக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

ஏன் யாழ்ப்பாணத்தில் இருந்துகூட வந்து உதவி அடிப்படையில் கற்பிக்கிறார்கள்.

சிறார்கள் மாலை நேரம் விளையாட்டிலே ஈடுபடுகிறார்கள். குழுக்குழுவாக கிரிக்கெட் விளையாடுவதை ஆங்காங்கே காண முடிகிறது.

அந்நேரத்தில் நூலகத்தில் படிப்பில் ஈடுபட்டுக்கும் மாணவர்களையும் காணலாம்.

நூலகம் குறைகூறமுடியாத அளவில் காணப்பட்டாலும் அங்கும் தேவைகள் காணப்படுகின்றன.

அத்துடன் மாணவர்களுக்கான மாதிரி பண்ணையும் அமைக்கப்பட்டிருக்கிறது.

இதைவிட இல்லத்தின் தேவைக்காக பண்ணையில் 10 இற்கும் மேற்பட்ட பசுக்கள் காணப்படுவதுடன் அது இல்லத் தேவையின் ஒரு பகுதியை ஈடுகட்டுகிறது.

மகாதேவ ஆச்சிரம சிறுவர் இல்லம் ஒரு பரந்த பகுதியில் அமைந்திருக்கிறது அருகில் 50 ஏக்கருக்கும் மேற்பட்ட வயல் நிலம் சிறுவர் இல்லத்திற்குத் தேவையான உணவு உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகிறது.




விநோகுமார் சுட்டித்தனமான சிறுவனாகவே காணப்படுகிறார். உடற்பயிற்சியின்

இவை எல்லாவற்றுக்கும் மேலாக உதவிகள் தொடர்ந்து தேவைப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. கருணை உள்ளங்களிடம் உதவிகளை எதிர்பார்க்கிறோம். உங்கள் சிறு உதவியும் பெரும் பயனைக் கொடுக்கும் என்கிறது நிர்வாகம்.

இவ்வளவு சிறுவர்கள் காணப்படும் இந்த சிறுவர் இல்லத்திற்கு ஒரு அம்புலன்ஸ் வசதி கிடையாது. அவசர நிலைமைகள் ஏற்படும் இடத்து இல்ல வாகனங்களிலேயே வைத்திய சாலை கொண்டு செல்லும் நிலைமையே உள்ளது. இன்னும் பற்பல தேவைகளை கொண்டிருந்தாலும் நாளைய பொழுதை நம்பிக்கையுடனேயே இல்லம் எதிர்கொள்ளப் போகிறது.

மகாதேவ ஆச்சிரம சிறுவர் இல்லம்
புதுமுறிப்பு, கிளிநொச்சி .
தொலைபேசி இலக்கம்: 021 492 3118
தலைவரின் இலக்கம் 021 320 2571
இணையத்தள முகவரி: mahadevahome.org
இலங்கை வங்கிகிளிநொச்சிகணக்கு இலக்கம்: 9991351 (Swift Code No. BCEY 8ALX.)



# மகாதேவ ஆச்சிரம சிறுவர் இல்லம்



கத்தை அவ்வாறு தான் இல்லத்தில் எல்லோரும் அழைக்கிறார்கள்)

இல்லத் தேவைகளுக்காக ஏன் சிலர் தமது தனிப்பட்ட அலுவல்களுக்காகவும் ஐயாவைக் காண வந்து கொண்டே இருக்கிறார்கள். எல்லோருடனும் அன்பான உரையாடல், தெளிவான கருத்துக்கள் அவரிடம் இருந்து வருகின்றன.

இல்லத்தின் தேவைகளை அவரிடம் கேட்டபோது உடனடியாகவே தகவல்களைத் தந்தார்.

ஒரு குழந்தைக்கு நாளாந்த உணவு பராமரிப்புச் செலவு 150 ரூபாய்.

314 குழந்தைகளுக்குமான நாளாந்த செலவு 47ஆயிரத்து 100 ரூபாய்.

ஒரு பிள்ளையின் மாதச் செலவு 4ஆயிரத்து 500, ஒரு பிள்ளையின் ஒரு வருடச் செலவு 54 ஆயிரம்.

அப்படியானால் நீங்களே சிந்தித்துப் பாருங்கள் எவ்வளவு செலவு ஏற்படுகிறது

அதேபோல் சிறுவர் பூங்கா -5 இலட்சம் ரூபாய்,

பாலர் பாடசாலை 3 லட்சம் ரூபாய்,

கழிப்பறைகள் 5 லட்சம் ரூபாய்,

கிணறுகள் 5 லட்சம் ரூபாய் என தேவைகள் மதிப்பிடப்பட்டுள்ளன.

இல்லம் இன்னும் நிறைய தேவைகளை கொண்டிருக்கிறது.

குழந்தைகள் தங்குமிடத்திற்கு கட்டிடம் உள்ளது. ஆனால் யுத்த அழிவால் மேற்கூரை இல்லாமல் காணப்படுகிறது.

இதேபோல் பெண்கள் இல்லத்தில் இட நெருக்கடி காணப்படுவதால் 2 மாடிக் கட்டிடம் ஒன்றுக்கான அடிக்கல் நாட்டப்பட்டும் பணிகளை தொடரமுடியாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

வழிபாட்டு ஆலயம் ஒன்று புனரமைக்கப்பட வேண்டியுள்ளது.

மகாதேவ ஆச்சிரம சிறுவர் இல்லத்தை தொடர்பு கொண்டு கேட்டால் அவர்கள் தமது தேவைகளை விபரமாக அளிக்கக் காத்திருக்கிறார்கள்.

ஆச்சிரம சிறுவர் இல்லத்திலே ஒழுக்கம் மிக நேர்த்தியாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இல்லச் சிறுவர்கள் காணும் பெரியோர் எல்லோரையும் கனம் பண்ணுகிறார்.

இல்லச் சிறுவர்கள் பெரும்பாலும் அருகில் உள்ள கிளிநொச்சி இந்துக் கல்லூரிக்கே செல்கிறார்கள்.

அவர்கள் பாடசாலை செல்லும் ஒழுங்கே போதும் அவர்களை மதிப்பிட்டுக்கொள்வதற்கு.

பாடசாலை நேரம் முடிய பிற்பகலில்

போது அவருடைய கை முறிந்துவிட்டது.

ஒழுங்காக கவனிக்கப்படுகிறதா எனக் கேட்டபோது? முறைப்படி மருத்துவர் தன்னைக் கவனித்துக் கொள்வதாகவும் தெரிவிக்கின்றான்.

தரம் 6 இல் கல்வி கற்கும் விநோகுமார் பூநகரியைச் சேர்ந்தவர். தாயை யுத்தத்தில் இழந்துவிட்டார். தந்தை வயதானவர். 8 சகோதரர்கள். இப்போது இவர் தஞ்சம் அடைந்திருப்பது இங்கு. இவருடன் இவரின் 2 தம்பிகளும் அக்கா ஒருவருமாக 4 பேர் இங்கு இருக்கிறார்கள்.


தாயை இழந்த கவலையை மறக்க முடியவில்லை எனத் தெரிவிக்கும் விநோகுமார், தான் ஒரு டாக்டராக வரவேண்டும் என்றான்.


மற்றொரு மாணவன் நாகதர்ஷன், தரம் 8இல் கல்வி கற்கிறார். மட்டக்களப்பைச் சேர்ந்த இவர். தந்தையை பறிகொடுத்தவர். தாய் வெளிநாடு சென்றுவிட்டார்.

6 சகோதரர்கள். ஒரு அண்ணன் திருமணமாகிவிட்டது. ஒருவர் காணாமல்போய்விட்டார். 2 அக்காமாரும் ஒரு அண்ணனுமாக மிகுதி 4 பேர் இந்த ஆச்சிரம சிறுவர் இல்லத்தில் தஞ்சமடைந்திருக்கிறார்கள்.


விநோகுமாரிடம் என்னவேண்டும் என்றபோது, விளையாட்டு உபகரணங்கள் வேண்டும், பூட்ஸ் வேண்டும். எமது விளையாட்டு ஆர்வத்தை வளர்க்க இவையெல்லாம் வேண்டும். அத்துடன் எதிர்காலத்தில் தான் ஐயா போல் (இராசநாயகம் ஐயா) வரவேண்டும் என்றான் நம்பிக்கையுடன்...

தொகுப்பு: முருகதாஸ்






யுத்த அழிவில் சிறுவர் இல்லம்




### நேற்றைய தொடர்ச்சி...

அந்த வகையில் இராசநாயகத்தின் பாதுகாப்பில், அநாதையாக இருக்கின்ற பெண் பிள்ளையும் கூட தனது நம்பிக்கையை ஒருநாளும் இழந்துவிடாது. அந்தக் குழந்தையும் ஒரு நாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நுழையும். அதன் தொடர்ச்சியாக கனடாவிலோ அல்லது அமெரிக்காவிலோ வாழும் இலங்கைத் தமிழர்களைப்போல் ஆராய்ச்சி கூடங்களைச் சென்றடையும்.

இலங்கை அதிபர் ராஜபக்ஷ ஈழத்திற்கு எதிரான போரில் வெற்றி கண்டிருக்கிறார். அவருக்கு பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருக்கிறது.

பெரும்பான்மயினரான சிங்கள மக்கள் மத்தியில் அவருக்கு ஈடிணையில்லதா ஆதரவு இருக்கிறது. கொழும்பில் உள்ள அவரது அரசியல் எதிரிகளே கூட, அவரை 'ராஜா மஹிந்தா' என்று பெருமையுடன் குறிப்பிடுகிறார்கள்.

'ராஜா மஹிந்தா' இலங்கையை ஆண்ட அரசர் துட்டகைமுனுவுடன் ஒப்பிட்டுக் கூறப்படும் பெயராகும்.

இலங்கையின் வட பகுதியில் தமிழ் ஆட்சியாளர்களின் மேலாதிக்கத்தை முடிவுக்கு கொண்டு வந்த துட்டகைமுனு, இலங்கையின் தேசிய நாயகன். அந்த அரசனுடன் ஒப்பிடும் அளவிற்கு இப்போது ராஜபக்ஷவின் செல்வாக்கு நிலவுகிறது.

தமிழ் மக்களுக்கு எல்லாத் துறைகளிலும் சம வாய்ப்பபை அளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிரந்தர தீர்வை, ராஜபக்ஷவால் அளிக்க முடியாது என்றால், வேறு எவராலும் அதை அளிக்க இயலாது. வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு எதிரான போரில் 'ராஜா மஹிந்தா' வெற்றி கண்டிருக்கிறார். ஆனால், இராசநாயகத்தின் ஆச்சிரமக் குழந்தைகள் இல்லத்தின் அநாதைச் சிறுமியுடன் 'ராஜா மஹிந்தா' அமைதி உடன்பாட்டை இப்போது ஏற்படுத்திக் கொண்டாக வேண்டும். அப்படி ஏற்படுத்திக் கொள்ளாவிட்டால், அது பெருந்துயரமாக முடியும் - அது அந்தச் சின்னஞ்சிறு பெண்பிள்ளைக்கு மட்டுமல்ல!

முற்றும்

# மீனவர்களின் பிரச்சினைகளை சமாளிக்க
# 80 வீத எரிபொருள் மானியம் ஒதுக்கீடு
## 25 கோடி செலவு என்கிறார் அமைச்சர் ராஜித



(கொழும்பு)

மீனவர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முகமாக அவர்களுக்கு 80 சதவீத எரிபொருள் மானியம் வழங்கப்பட்டுள்ளதாக மீன்பிடி மற்றும் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

எரிபொருள் மானியம் வழங்குவதற்கு அரசாங்கம் மாதமொன்றுக்கு 25 கோடி ரூபாவுக்கு அதிகமாக செலவிடுவதாகவும் அதனை பெரும்பாலானவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளதுடன் ஒரு சிலரே தமது தனிப்பட்ட தேவைகளுக்காக அதனை எதிர்த்து வருவதாகவும் அவர் கூறினார்.

அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

எரிபொருள் மானியம் வழங்குவது தொடர்பாக மீனவ தொழிற்சங்கங்கள் பலவற்றுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. அதன் பின்னரே நாம் இந்த தீர்மானத்திற்கு வந்தோம்.

பெரும்பாலானோர் தமக்கு 50 சதவீத எரிபொருள் மானியம் வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்தனர்.

ஆனால் நாம் 80 சதவீத எரிபொருள் மானியத்தை வழங்குகின்றோம். கடந்த 17 ஆம் திகதியிலிருந்து இந்த திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது.

அதனடிப்படையில் அன்று முதல் எரிபொருள் கொள்வனவு செய்த மீனவர்கள் இதனைப் பெற்றுக் கொள்ள முடியும். இனிவரும் காலங்களில் எரிபொருள் மானியம் பெற்றுக் கொள்வதற்கென நாம் கூப்பன் அட்டையினை வழங்குவோம். அதன் மூலம் தமக்கான மானிய அளவில் எரிபொருளினை பெற்றுக் கொள்ள முடியும். இது தொடர்பாக பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கும் தெளிவுபடுத்தியுள்ளோம்.

இந்த எரிபொருள் மானியத்தின் மூலம் மாதமொன்றுக்கு மண்ணெண்ணெய்க்காக மாத்திரம் எட்டுக்கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இந்த நிவாரணமானது நியாயமானதொன்றென்பதை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர். ஆனால் ஒரு சிலர் இதனைக் குழப்பி அதிலே அரசியல் இலாபம் தேட முயற்சிக்கின்றனர். அதனை நாம் நன்கு அறிவோம்.

உலக சந்தையில் எரிபொருட்களின் விலையேற்றத்திற்கேற்ப நாம் எரிபொருட்களின் விலையினை அதிகரிக்கின்றோம். அதனால் பாதிக்கப்படும் சாதாரன மக்களுக்கு வழங்கக்கூடிய நிவாரணங்களை நாம் முடியுமான அளவு பெற்றுக் கொடுப்போம். விலையேற்றம் என்பது நிரந்தரமல்ல. சில வேளைகளில் மீண்டும் குறைவடையலாம்.

இந்த எரிபொருள் விலையேற்றத்தில் 20 சதவீதமானவற்றையே நிவாரணம் பெற்றவர்கள் செலுத்த வேண்டியுள்ளது.

அதாவது ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலையேற்றம் 35 ரூபா. அந்த விலையேற்றத்தில் 25 ரூபாவினை நாம் மானியமாக வழங்குகின்றோம். எனவே 10 ரூபாவினையே அவர்கள் விலையேற்றமாக தாங்க வேண்டியுள்ளது என்றார். (அ-2)

## இறைவன் இல்ல கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மண்கும்பானில் அமைந்துள்ள இறைவன் இல்ல வருடாந்த கொடியேற்ற திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு விசேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகவுள்ளது. அதனைத் தொடர்ந்து மாலை 4 மணிக்கு கொடியேற்றல் வைபவம் இடம்பெறவுள்ளது.

இக்கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பமாகும் பூசை வழிபாடுகள் தொடர்ச்சியாக 10 தினங்கள் நடைபெற்று 10 ஆம் நாள் மாலை கொடியிறக்க நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இதில் கலந்து கொள்வதற்காக உலகின் பல்வேறு பாகங்களிலிருந்தும் பக்தர்கள் இன, மத, மொழி வேறுபாடின்றி கலந்துகொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-7)

## ஒட்டுசுட்டான் கோட்ட மெய்வல்லுநர் போட்டிகள்

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான கோட்டமட்ட மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளதாக ஒட்டுசுட்டான் கோட்டக்கல்விப் பணிப்பாளர் த.பங்கயச்செல்வன் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் ஒவ்வொரு போட்டியிலும் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் இக் கோட்டப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்போட்டிகள் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கும் நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கும் போட் டிகள் ஆரம்பமாகவுள்ளதால் ஒட்டுசுட்டான் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்கள் இதனைக் கருத்திற் கொண்டு போட்டியில் பங்குபற்றும் மாணவர்களை பொறுப்பாசிரியருடன் போட்டிக்குரிய ஆயத்தங்களுடன் வருமாறு அவர் கேட்டுள்ளார். (அ-3-15)

## மிகுதிப்பணத்திற்கு இனிப்பு வழங்கிய நடத்துநர்

(கொழும்பு)

கோட்டையிலிருந்து புறப்படும் 103 ஆம் இலக்க வழித்தட தனியார் பேருந்து நடத்துநர் பயணிகளுக்கு வழங்க வேண்டிய மிகுதிப் பணத்துக்கு பதிலான இனிப்புகளை வழங்கிய சம்பவமொன்று நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளது.

9 ரூபா பெறுமதியான டிக்கெட் ஒன்றை கொள்வனவு செய்வதற்காக 10 ரூபாவினை நடத்துநரிடம் கையளிக்கும் பயணிகளுக்கு மிகுதி ஒரு ரூபாவுக்கு பதிலாக அவர் இனிப்பினை வழங்கியுள்ளார்.

சில்லறைக்காசு இல்லை எனக்கூறியே அவர் இதனை வழங்கியதாக மேற்படி பேருந்தில் பயணித்த பயணிகள் தெரிவித்தனர். (அ-2)




அம்புலுவாவ காட்டுப் பகுதியில் தீ பரவியுள்ளதால் அக்காட்டுப் பகுதியில் சுமார் 200 ஏக்கர் நிலப்பரப்பு நாசமாகியுள்ளது. தீயணைக்கும் நடவடிக்கையில் இலங்கை விமான படையினரின் ஹெலிகொப்டர்கள் ஈடுபட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.


எம் விழுதின்
1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கதிரவேலு வல்லிபுரம் கணேஷ்குமார்
(Chartered engineer) பிரதம பொறியியலாளர்
(LGIIP & IDB)NEIAP ,NECORD
திதி:- பூர்வபக்க துதியை

தாயின் மடியில் 03.05.1955



இறைவனின் அடியில் 06.03.2011

வடமராட்சி திக்கத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப் பிடமாகவும் கொண்ட கதிரவேலு வல்லிபுரம் கணேஷ்குமார் அவர்களின்
1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணிலிருந்து ஐயாவிற்கு ஒரு மடல்... உமது ஆசைமுகம் காண ஐயா நாம் ஏங்குகின்றோம். தினம் தினம் உம் நினைவை மீட்டு நெருப்பினில் அகப்பட்ட புழுவாக துடிக்கின்றோம். ஆலவிருட்சமாய் அருகிலிருந்து அகிலமதில் வாழ விதை விதைத்தவரே எங்குதான் எம்மை விட்டு சென்றீரோ அன்பாய் எங்களை ஆதரித்து அன்பே உருவாக அவதரித்தவரே எம்மை விட்டு ஓர் ஆண்டு பிரிந்தாலும் உமது ஆலோசனை, அறிவுரை, பாசம் எம்முடன் நினைவாக அலைமோதி கொண்டே இருக்கின்றன. எங்களின் குடும்பத்தின் தலைவனே உமது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல மடத்துவாசல் பிள்ளையாரை வேண்டி நிற்கின்றோம்.

இவ்வண்ணம்:- அன்பு மனைவி (ஆசிரியர், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி)
மகள்(China Medical Faculty), சகோதரன்(Colombo),
திரு திருமதி விஜயசிங்கம் (U.K) ,திருதிருமதி நவரஞ்சன்(Canada)
T.P:-0779581022 (7443)

# தஞ்சம்கோரிய வடகொரியர்களை திருப்பி அனுப்பக்கூடாது

## தென்கொரியா தெரிவிப்பு


சீனாவில் நுழைந்த வடகொரியர்களை திருப்பி அனுப்பக்கூடாது என தென்கொரியா தெரிவித்துள்ளது.

கடந்த 50 ஆம் ஆண்டு முதல் 53 ஆம் ஆண்டுவரை நடந்த கொரிய போரின் போது ஏராளமானவர்கள் வடகொரியாவிலிருந்து சீனாவுக்கு அகதிகளாக நுழைந்தனர். அதை தொடர்ந்து பலர் சீனாவுக்கு ஊடுருவி வருகின்றனர். இவர்கள் இங்கிருந்து தென் கொரியா செல்ல முயற்சிக்கின்றனர். இந்நிலையில் தென்கொரியா செல்ல முயன்ற 30 வட கொரியர்களை மீண்டும் திருப்பி அனுப்ப சீனாவும் முடிவு செய்துள்ளது. இதற்கு தென் கொரியா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

வடகொரியர்களை மீண்டும் அவர்கள் நாட்டுக்கு திருப்பி அனுப்புவதால் அவர்கள் கடும் தண்டனையை எதிர்கொள்ள நேரிடும். எனவே, இந்த விடயத்தில் ஐ.நா. தலையிட வேண்டும் என தென்கொரியா கேட்டுள்ளது. தென்கொரியாவின் சியோல் நகரில் உள்ள ஐ.நா. தூதரகத்தின் முன்பாக வடகொரியர்கள் பலர் சீனாவின் இந்த நடவடிக்கையை எதிர்த்து நேற்று போராட்டம் நடத்தினர்.

வடகொரிய ஜனாதிபதி ஜாங் கடந்த ஆண்டு இறந்த பின் அவரது மகன் கிம் ஜாங் உன் புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்றுள்ளார். இவரது உத்தரவின்படி துணை வெளியுறவு அமைச்சர் கிம் கி வான் பீஜிங் நகருக்கு சென்று அங்குள்ள அமெரிக்க தூதர்களின் டேவிட்டை இன்று சந்திக்க உள்ளார். (அ-2)

# உருக்காலை வெடிவிபத்தில் 10 பேர் பலி; 17 பேர் காயம்




(பீஜிங்)

சீனாவின் லியோனிங் மாகாணத்தில் உருக்காலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 13 பேர் பலியானார்கள். 17 பேர் படுகாயமடைந்தனர்.

சீனாவின் லியோனிங் மாகாணம் ஆன்ஷான் நகரில் கடந்த 19 ஆம் திகதி இரவு ஆங்அங் உருக்காலையில் வெடி விபத்து ஏற்பட்டது. 10 மீற்றர் சுற்றளவு கொண்ட வார்ப்பு இரும்பு திடீரென வெடித்ததால் அங்கிருந்த மணல் மூடைகளும் சுவரும் நகர்ந்தன.

இந்த விபத்தில் 13 பேர் பலியாகினர். 17 பேர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

ஆங்அங் உருக்காலை சீனாவில் மிகப்பெரிய இயந்திரங்களை உருவாக்கும் தொழிற்சாலைகளுள் ஒன்று. இடிபாடுகளில் இருந்து இதுவரை 10 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. வட்ட வடிவ இரும்பை உருவாக்குவதற்காக அச்சுவார்க்கும் போது இந்த விபத்து ஏற்பட்டதாக தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# பஷர் அல் ஆசாத் பதவி விலக மறுப்பு; சிரியாவிற்கு எதிராக பொருளாதாரத்தடை

## ஐரோப்பிய நாடுகள் தீர்மானம்

சிரியா நாட்டில ஜனாதிபதியாக இருக்கும் பசீா அல் ஆசாத் ஆட்சியை அகற்ற கிளர்ச்சி நடைபெற்று வருகிறது. இதில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியானார்கள். 2 ஆயிரம் இராணுவ வீரர்கள் உயிர் இழந்ததாக அரசாங்கம் கூறுகிறது. எனவே, அரபு நாடுகள் ஒரு சமரச திட்டத்தை கொண்டு வந்தது. ஜனாதிபதி ஆசாத் பதவியை விட்டு விலகி விரைவில் தேர்தல் நடத்த ஏற்பாடு செய்வது என தீர்மானித்தது.

இந்த தீர்மானம் ஐ.நா. சபையிலும் நிறைவேற்றப்பட்டது. ஆனால், சிரியாவை சீனா, ரஷ்யா, வடகொரியா, வெனிசுலா ஆகிய நாடுகள் ஆதரிக்கின்றன.

இதனால் ஜனாதிபதி ஆசாத் பதவி விலக மறுத்து விட்டார். போராட்டம் நடத்துவோர் மீது தொடர்ந்து இராணுவத்தை ஏவி தாக்குதல் நடக்கிறது.

தற்போது மெக்சிக்கோ நாட்டில் உள்ள லாஸ், காபோஸ் நகரில் ஐரோப்பிய யூனியனில் இடம்பெற்றுள்ள 20 நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டம் நடைபெற்று வருகின்றது. இதில் ஜேர்மனி வெளியுறவுத்துறை அமைச்சர் கைடோ வெஸ்டெர்வெல் கலந்து கொண்டார்.

சிரியாவுக்கு ஏதிரான நடவடிக்கை குறித்து அவர் கூறுகையில்,

சிரியாவில் வன்முறைகள் தொடர்ந்து நீடிப்பதால் பொருளாதாரத்தை முடக்க கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அநேகமாக அடுத்த வாரம் முடிவு செய்யப்படும்.

இதில் சிரியா மத்திய வங்கிகளின் சொத்துக்களை முடக்குவது உள்ளிட்ட பல தடைகள் இருக்கும் என குறிப்பிட்டார்.

இது தொடர்பான பிரச்சினை குறித்து ரஷ்யா, சீனா நாடுகள் தங்கள் நிலையில் இருந்து விரைவில் பின்வாங்கும் என அரபு நாடுகள் எதிர்பார்க்கின்றன. நபில் எலாராபி இது பற்றி கூறுயையில்,

சீனா, ரஷ்யா, நாடுகள் இந்த பிரச்சினையில் தங்களது நிலையை மாற்றம் செய்வதற்கான அறிகுறிகள் தெரிகின்றன என்று குறிப்பிட்டார். (அ-2)

# அமெ.போர் விமானம் வீழ்ந்தது; பயணித்த நான்கு வீரர்கள் பலி

ஆபிரிக்காவில் உள்ள ஜென்யா நாட்டில் அமெரிக்க- பிரான்ஸ் இராணுவத்தினர் கடலோர பாதுகாப்பு ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்காக அங்குள்ள டிஜிபோவுடி என்ற இடத்தில் அமெரிக்க இராணுவத்தளம் அமைந்துள்ளது. இந்த தளத்தில் இருந்து சென்ற போர் விமானம் திடீரென்று விழுந்து நொறுங்கியது.

இதில் விமானத்தை ஓட்டிச் சென்ற ராயன் ஹால் (வயது30), நிபோலஸ் (29) உட்பட 4 வீரர்கள் பலியானார்கள். இதை அமெரிக்க இராணுவ உயர் அதிகாரிகள் உறுதி செய்தனர்.

விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்துகின்றார்கள். (அ-2)




# இணையத்தளங்களை மக்கள் பார்வையிடுவதற்கு ஈரானில் தடை

பாராளுமன்றத் தேர்தல் விரைவில் இடம்பெறவுள்ள நிலையில் இணையத்தளங்களை மக்கள் பார்க்க ஈரானில் திடீர் தடை விதிக்கப்பட்டுள்ளது. கூகுள், யாஹூ உள்ளிட்ட இணையத் தளங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. ஈரானில் 2009 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. 2 ஆவது முறையாக முகமது அகமதி நிஜாத் வெற்றி பெற்று ஜனாதிபதியானார். முறைகேடாக தேர்தல் நடந்ததாக எதிர்க்கட்சிகள் கூறின. 4 ஆண்டு பதவிக்காலம் முடிவதை அடுத்து அங்கு ஜனாதிபதித் தேர்தல் விரைவில் நடக்கவுள்ளது.

இதற்கிடையில் நாட்டில் புரட்சி வெடித்து குடியரசு நாடாக மாறியதன் 33 ஆவது ஆண்டு விழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி கொண்டாடப்படுகின்றது. இதை விமர்சையாக கொண்டாட மக்கள் தயாராகிவரும் நிலையில் அதிரடி நடவடிக்கையாக இணையத் தளங்களுக்கு திடீர் தடை விதிக்கப்பட்டுள்ளது. எச்டிடிபிஎஸ் என தொடங்கும் எல்லா இணையத் தளங்களும் தடை செய்யப்பட்டுள்ளன. கூகுள், யாஹூ மட்டுமன்றி இன்டர்நெட் பேங்கிங் சேவை கூட பெறமுடியாமல் மக்கள் அவதி அடைந்துள்ளனர். (அ-2)




பிலிப்பைன்ஸ் நாட்டில் எரிபொருட்களின் விலை உயர்வை கண்டித்து மணிலாவில் பொதுமக்கள் கண்டன பதாகைகளை ஏந்திப் போராட்டம் நடத்தியதைப் படத்தில் காணலாம்.

# முஷாரப்பை கைது செய்ய இஸ்ரேலின் உதவி நாடப்படும்

## ரகுமான் மாலிக் தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பை கைது செய்ய சர்வதேச பொலிஸாரின் உதவி கோரப்படும் என உள்துறை அமைச்சர் ரகுமான் மாலிக் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் கடந்த 2007 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் நடந்த பொது தேர்தல் பிரசாரத்தின்போது பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைவர் பெனாசீர் பூட்டோ தற்கொலை படையினரால் கொல்லப்பட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற விசாரணையில் பூட்டோவிற்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பில் ஏற்பட்ட குறைபாடே சம்பவத்திற்கு காரணம் எனவும் இதற்கு முஷாரப் குற்றவாளி என முடிவானது. இந்நிலையில் முஷாரப் லண்டனில் குடியேறினார். இருப்பினும் அவரை கைது செய்வதற்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

மேலும் தற்போது பாகிஸ்தானில் தேர்தல் நடைபெற இருப்பதை முன்னிட்டு அதில் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளார் முஷாரப்.

போட்டியிட வரும் முஷாரப்பை அரசியல் காரணங்களுக்காக பழிவாங்கும் விதத்தில் கைது செய்யப்பட்டு அவர் கொல்லப்படலாம் என உள்ளூர் செய்தி நிறுவனம் ஒன்று தகவல் தெரிவித்தது.

இந்நிலையில் முஷாரப்பை கைது செய்ய சர்வதேச பொலிஸாரின் உதவி கோரப்படும் என அவர் தெரிவித்தார். (அ-2)

உயர்ந்த இலட்சியத்தையடைய பல காதங்கள் பயணம் செல்ல வேண்டும். -கார்லைன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## அரசின் மாயவலை விரிப்பில் கூட்டமைப்பு அகப்பட்டு விடலாகாது

ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனிதவுரிமைகளுக்கான கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை கொண்டுவருவதற்கான முயற்சிகள் தீவிரமடைந்துள்ள நிலையில்,

அதனைத்தடுத்து நிறுத்துவதில் இலங்கை அரசும் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது. இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும் என்பதை வலியுறுத்திவரும் மனித உரிமை அமைப்புகள் ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு எதிராகத் தீர்மானத்தை கொண்டுவர வேண்டும் என சர்வதேச நாடுகளை வலியுறுத்தி நிற்கின்றன.

ஐ.நா. மனிதவுரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவருவதில் அமெரிக்காவின் பங்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

அதேநேரம் இந்திய மத்திய அரசு இலங்கையைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கையை இலங்கை அரசு கொண்டிருப்பதையும் மறுப்பதற்கில்லை.

நிலைமை இவ்வாறாக இருக்கையில், ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில், இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானம் நிறைவேறாது போனாலும்,

அமெரிக்க அரசு ஏதோ ஒரு வகையில் இலங்கை அரசுக்கான தனது அழுத்தத்தை பிரயோகிக்கும் என்பதை எளிதில் நிராகரித்து விடமுடியாது.

தீர்மானத்தை நிறைவேற்றவும் அதனை தடுக்கவும் என இருபக்க முயற்சிகள் நடந்து கொண்டிருக்கும் போது,

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அரசு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

விரைவில் இணக்கப்பாடு ஏற்பட்டுவிடும் என சர்வதேசத்தின் காதில் ஊதுவதில் அரசு முனைப்புடன் செயற்பட்டுவருவதை இவ்விடத்தில் மறுத்து விட முடியாது.

அத்தகையதோர் முயற்சிக்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவசரமாக அழைத்துச் சந்திப்பு நடத்தியுள்ளார்.


சந்திப்பில் தெரிவுக்குழு பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டதாகவும், அதனை சம்பந்தன் அவர்கள் நிராகரித்து விட்டதாகவும் தகவல்.

ஜெனிவாவில் தமக்கு எதிராக வரும் தீர்மானத்தை இந்தியா உள்ளிட்ட தனது விசுவாச நாடுகளுடன் இணைந்து தோற்கடிப்பதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்யும் அரசு, கூடவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளை முன்னிறுத்தி தன்னை நல்ல பிள்ளையாகக் காட்ட முற்படுகின்றது.

இதுவிடயத்தில் கூட்டமைப்பு தெளிவாகவும் சமயோசிதமாகவும் நடந்துகொள்ள தவறுமிடத்து எங்களுக்குகிடைத்த நல்ல சந்தர்ப்பத்தை நாங்களே போட்டுடைத்தாக முடியும். எனவே, தெரிவுக்குழு-பேச்சுவார்த்தை என்ற காட்டாப்புக்களில் தமிழ் தரப்புகள் மயங்கிவிடாமல் பேச்சுவார்த்தை என்றால் அது சர்வதேச நாடொன்றின் மத்தியஸ்தத்துடன் இடம்பெறவேண்டும். காலயெல்லை தீர்மானிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளைமிகவும் இறுக்கமாக வலியுறுத்துவ்து கட்டாயமானதாகும்.

இதனைச் செய்யாமல் கூட்டமைப்பை ஜனாதிபதி பேச்சுவார்த்தைக்கு அழைத்துவிட்டார் என்ற பூரிப்பில் ஓடிச்சென்றால், எல்லாம் படுதோல்வியில் முடியும். கவனம்.

# இலங்கைப் போரில் கண்ணை இழந்த ஊடகவியலாளர் சிரியாப் போரில் பலி



(கொழும்பு)

இலங்கையில் இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான போர் தொடர்பான செய்திகளை சேகரிப்பதில் களமுனை அனுபவத்தை கொண்டிருந்த உலகப் புகழ் பெற்ற பெண் ஊடகவியலாளரும் புகைப்படப்பிடிப்பாளருமான மேரி கொல்வின் சிரியாவில் இடம்பெறும் போர் தொடர்பான செய்திகளை சேகரிக்கச் சென்றிருந்த வேளையில் அந்நாட்டு படைத்தரப்பினரின் எறிகணைத்தாக்குதல்களுக்கு இலக்காகி கொல்லப்பட்டுள்ளார்.

2001ஆம் ஆண்டில் இலங்கையின் வடபகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியிலிருந்து அரச கட்டுப்பாட்டு பகுதிக்கு நுழைந்த போது படையினர் நடத்திய தாக்குதலில் படுகாயமடைந்த மேரி கொல்வின் தன்னுடைய கண்களில் ஒன்றையும் இழந்திருந்தார்.

இதன் பின்னர் 2009ஆம் ஆண்டு மே மாதம் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போர் தொடர்பான செய்திகளை சேகரிப்பதற்காக முல்லைத்தீவு சென்றிருந்த இவரது பெயர் வெள்ளைக்கொடி வழக்கிலும் பிரபல்யமாகப் பேசப்பட்டது.

அமெரிக்காவைச் சேர்ந்த பத்திரிகையாளரான இவர் பிரித்தானிய பத்திரிகை ஒன்றுக்காக செய்தி சேகரிக்க சிரியாவுக்கு சென்றிருந்த போதே கொல்லப்பட்டுள்ளார்.

இவருடன் பிரான்ஸ் நாட்டின் ஊடக புகைப்படக் கலைஞரான ரெமி ஓச்லிக்கும் கொல்லப்பட்டுள்ளதுடன், குறைந்தது மூன்று வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் காயமடைந்துள்ளதாகவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

சிரியாவின் ஹொம்ஸ் நகரில் இவர்கள் தங்கியிருந்த வீடு கடுமையான எறிகணைத்தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

அங்கிருந்து தப்பிச்செல்ல முற்பட்ட போதே ரொக்கெட் தாக்குதலுக்கு இலக்காகி இருவரும் அந்த இடத்திலேயே உயிரிழந்ததாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

லண்டன் பி.பி.சி தொலைக்காட்சிக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைத்திருந்த செய்தியில் ஹொம்ஸ் நகர்மீது தொடர்ச்சியாக நடத்தப்பட்டுவரும் எறிகணைத் தாக்குதல் தொடர்பாக விரிவான அறிக்கையொன்றை மேரி கொலின் வழங்கியிருந்தார். அந்த அறிக்கை வெளியாகி சுமார் 12 மணி நேரத்திற்குள் எறிகணைத் தாக்குதலுக்கு அவர் கொல்லப்பட்டிருப்பது பிரித்தானிய ஊடகத்துறையினரை அதிர வைத்துள்ளது.

2001ஆம் ஆண்டு இலங்கையின் வடபகுதியில் இடம்பெற்றத்தாக்குதலில் தனது கண்களில் ஒன்றையிழந்த அவர் கண்பகுதியை கறுப்புத்துணி யொன்றினால் மறைத்துக் கொண்டே பின்னர் தனது பணிகளை மேற்கொண்டார்.

2009ஆம் ஆண்டு மே மாதம் இறுதிப் போர் தொடர்பான செய்திகளை முள்ளிவாய்க்கால் பகுதியில் சேகரித்துக் கொண்டிருந்த இவர், விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களான் நடேசன் மற்றும் புலித்தேவன் ஆகியோர் சரணடைவது தொடர்பான முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

இது தொடர்பில் விடுதலைப்புலிகளின் தலைவர்கள் சிலரும் அரசாங்கத்தின் தலைவர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை அதிகாரியான விஜய் நம்பியாரும் மேரி கொல்வினுடன் தொடர்புகளை வைத்திருந்தார்கள்.

இதனால் வெள்ளைக்கொடி வழக்கில் இவர் எழுதிய கட்டுரையொன்றும் முக்கிய கவனத்தைப் பெற்றிருந்தது. இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக லண்டன் சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் பரபரப்பான பல விடயங்களை அவர் எழுதியிருந்தார்.

சிரியாவுக்குள் பிரவேசிப்பதற்கு வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு அந்நாட்டு அரசாங்கத்தால் தடைவிதிக்கப்பட்டுள்ள போதிலும், வெளிநாட்டு ஊடக வியலாளர்கள் பலர் செயற்பாட்டாளர்களின் ஆதரவுடன் அந்நாட்டுக்குள் இரகசியமாக பிரவேசித்து வருகின்றனர். பிரான்ஸ் தொலைக்காட்சியின் ஊடகவியலாளர்கள் கில்லிஸ் ஜக்கியுவர் ஹொம்ஸ் நகரில் கடந்த மாதம் கொல்லப்பட்டிருந்தமை தெரிந்ததே. (எ-11)

## ஐ.தே.க. தேர்தலுக்கு எதிரான மனு ஆட்சேபம் தெரிவிக்க அவகாசம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகிகளை தெரிவு செய்வதற்காக கடந்த வருடம் டிசம்பர் மாதம் 19ஆம் திகதி நடந்த தேர்தல் சட்டபூர்வமற்றது எனக் குறிப்பிட்டு அதை செல்லுபடியற்றதாக்க வேண்டும் எனக் கோரி தென்மாகாண சபை உறுப்பினரான மைத்திரி குணரட்ன தாக்கல் செய்த மனுவுக்கு மே 9ஆம் திகதி ஆட்சேபம் தெரிவிப்பதற்கு ரணில் விக்கிரம சிங்கவுக்கு கொழும்பு நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.


இந்த வழக்கில் ரணில் விக்கிரமசிங்க ஐ.தே.கவின் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க ஆகியோர் பிரதிவாதிகளாக ஐ.தே.கவின் தலைவராக தெரிவு செய்யப்பட்டமை சட்டபூர்வமானது அல்லவென்றும் டிசம்பர் 19ஆம் திகதி கட்சியில் உத்தியோகத்தர்கள் இரகசிய வாக்கெடுப்புகள் மூலம் தெரிவு செய்யப்படவில்லை ஆதலால் இது கட்சியின் யாப்புக்கு முரணானது எனவும் நீதிமன்றம் அறிவிக்க வேண்டும் என மனுதாரர் கோரியுள்ளார். (ச-11)

## அமைச்சர் டக்ளஸ் ஜெனிவா பயணம்

(கொழும்பு)

ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவை அமர்வில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு ஜெனிவாவுக்கு பயணமாகியுள்ளார்.

இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்படலாம் என எதிர்பார்க்கப்படும் தீர்மானத்தை எதிர்கொள்வதற்காக பெரும் எண்ணிகையிலான உயர் மட்டக் குழு வொன்றை இலங்கை அனுப்பி வைத்துள்ளது. இக் குழுவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இடம் பெற்றுள்ளார். (எ-11)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### குத்துவிளக்கு ஏன் எள்ளெண்ணை ஊற்றி எரிக்கின்றோம்

குத்து விளக்கில் எள்ணெயெண்ணை விட்டு பற்ற வைக்க வேண்டும் என கூறும் போது எந்த எண்ணெய் ஆனால் என்ன விளக்கு எரிந்தால் சரிதானே என்று பலரும் பதிலளிக்கலாம்.

இது முற்றிலும் தவறு கண்டிப்பாக எள்ளெண்ணையே குத்து விளக்கில் ஊற்ற வேண்டும்.சனி தெவனை துத்தித்து ஆசிபெறவே எள்ளெண்ணை உபயோகிப்பது.எள்ளெண்ணை சனி கிரகத்தின் பிரதிநிதியாக கருதப்படுகின்றது.

எள்ளெண்ணை இரும்புச் சத்தடங்கியது என்பது நம்மில் பலருக்கும் தெரியாது.நம் நாட்டில் இரும்புச் சத்து குற்றாக் குறையால் பரும் பாதிப்பு மிக அதிகமாக உள்ளது.


பண்டைக்க காலத்தில் இதை அறிந்திருந்ததினால் விளக்கிற்கும் குளிப்பதற்கும் சமையலுக்கும் எள் ளெண்ணையே பயன்படுத்தி வந்தனர்.இடைப் பயிராக பெரும் பகுதி எள் பயிரடப்பட்டிருந்தது.

நோயுற்று மருத்துவரிடம் செல்லும் போது மருத்துவர் இரும்ப மாத்திரைகளும் டானிக்குகளும் பரிந்துரை செய்யும் பொதெல்லாம்நமக்கு எள்ளின் மேன்மை தெரியமல் போகின்றது.எள்ளெண்ணை உபயோகித்து விளக்கு எரிக்கும் போது சுற்றுச் சுழலில் இரும்பின் பிராண சக்தி பரவியிருப்பதும் நாம் அறிவதில்லை.

இரும்பிளன் பற்றக்குறையை தீர்ப்பதற்கு இதன் சகதியின் உறைவிடமான சனி கிரகத்திலிருந்து சக்தியை இழுத்தெடுக்க சாஸ்தா கோயில்கள் பல இடங்களிலும் அமைக்க பண்டையவர்கள் தயாரானார்கள்.

# பயங்கரவாதத்தை தடுக்க உருவானதே தேசிய பயங்கரவாத தடுப்பு மையம்

## பிரதமர் மன்மோகன் தெரிவிப்பு



(புதுடில்லி)

தேசிய பயங்கரவாத தடுப்பு மையம் அமைப்பதின் நோக்கமே நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைக்கத்தான் என பிரதமர் மன்மோகன்சிங், ஜெயலலிதா உள்ளிட்ட ஏழு மாநில முதல்வர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.


மத்திய உள்துறை அமைச்சகம் சார்பில் கடந்த 7 ஆம் திகதி அரசாணை ஒன்று வெளியிடப்பட்டது. அதில் தேசிய பயங்கரவாத தடுப்பு மையம் அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இந்த அரசாணை வெளியிடப்பட்டவுடன் தமிழக முதல்வர் ஜெயலலிதா உட்பட ஏழு மாநில முதல்வர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

மத்திய அரசின் இந்த உத்தரவு வாபஸ் பெறப்பட வேண்டும். இது தொடர்பாக மாநில அரசுகளின் ஆலோசனைகளை மத்திய அரசு பெற வேண்டும் என முதல்வர் ஜெயலலிதா அண்மையில் இரண்டாவது முறையாக பிரதமருக்கு கடிதம் எழுதியிருந்தார். இந்த பிரச்சினை பூதாகரமாவதை தடுக்க ஜெயலலிதா, பீகார் முதல்வர் நிதிஷ்குமார், ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் உள்ளிட்ட ஏழு மாநில முதல்வர்களுக்கு பிரதமர் மன்மோகன்சிங் கடிதம் எழுதியுள்ளார்.

கடிதத்தில் பிரதமர் மன்மோகன் சிங் குறிப்பிடுகையில், தேசிய பயங்கரவாத மையம் அமைக்கப்பட்டதன் நோக்கமே நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு கொடுக்கத்தான். உங்களுடைய வருத்தம் எனக்கு புரிகிறது. இது தொடர்பாக மாநில முதல்வர்களுடன் கலந்து பேசும்படி உள்துறை அமைச்சரை கேட்டுள்ளேன். இந்த உத்தரவால் மாநிலங்களின் அதிகாரம் ஒருபோதும் பறிபோகாது. தேசிய பயங்கரவாத தடுப்பு மையம் புலனாய்வுத் துறையின் கட்டுப்பாட்டில்தான் செயற்படும். அது தனித்து இயங்கும் அமைப்பு அல்ல. புலனாய்வுத்துறை இதுநாள் வரை செய்து வந்த வேலையைத்தான் இதுவும் செய்யும் என்றார்.

இதேவேளை, மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக்கவுள்ளார். (அ-2)

# இந்தியாவில் 20 ஆண்டுகளாக உளவு பார்த்த பிரஜை கைது



(புதுடில்லி)

கடந்த 20 ஆண்டுகளாக இந்தியாவில் தங்கியிருந்து பாகிஸ்தானுக்காக உளவு பார்த்த 39 வயது நபரை டில்லி பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

இராணுவம் தொடர்பான தக வல்களை அவர் சேகரித்து பாகிஸ்தானுக்கு அனுப்பி வந்தது தெரிய வந்துள்ளது.

இவர் டில்லியில் இந்திய இரா ணுவம் தொடர்பான சில இரகசிய ஆவணங்களை பெறுவதற்காக வந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது. அவர் டில்லியில் ஆவணங்களை பெற்றுக் கொண்டு கொல்கத்தா செல்ல புகையிரதத்தில் ஏற முயன்றபோது தான் பொலிஸாரிடம் சிக்கினார். அவர் தான் பெற்ற ஆவணங் களை பாகிஸ்தான் இராணுவ நுண்ணறிவுப் பிரிவில்பணியாற்றும் சிலருக்கு அனுப்ப இருந்ததும் தெரிய வந்தது. அவரிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாக தெரிய வருகிறது. (அ-2)

## பாரதச் செய்தி

# 23 கைதிகளின் தூக்குத்தண்டனை ஆயுள் தண்டனையாக குறைப்பு

## பிரதீபா பட்டேல் காருண்யம்




(புதுடில்லி)

டில்லியைச் சேர்ந்த சமூக சேவகர் சுபாஷ் அகர்வால் என்பவர் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் மனுத்தாக்கல் செய்தார். அதில் ஜனாதிபதிக்கு கருணை மனு அனுப்பிய தூக்கு தண்டனை கைதிகளில் எத்தனை பேரின் தண்டனை குறைக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டிருந்தார்.

இதையடுத்து தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் அவருக்கு உடனடியாக பதில் கிடைத்தது. அதில் ஜனாதிபதி பிரதீபா பாட்டீலுக்கு ராஜீவ்காந்தி கொலையாளிகள் சாந்தன், பேரறிவாளன், முருகன் உட்பட 31பேர் கருணை மனு அனுப்பி இருந்தனர். அதில் 23 பேரின் தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாக ஜனாதிபதி குறைத்தார்.

ராஜீவ் கொலையாளிகள் சாந்தன், பேரறிவாளன், முருகன் ஆகியோரின் கருணை மனுவை மட்டும் தள்ளுபடி செய்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஜனாதிபதி பிரதீபா பாட்டீல்,ஜார்க்கண்ட மாநிலத்தைச் சேர்ந்த சிறுவனை நரபலி கொடுத்த சுசில்மூர் என்பவரின் தூக்கு தண்டனையை கூட ஆயுள் தண்டனையாக குறைத்தார். மரண தண்டனைக்கு தகுதி உள்ள இந்த கைதிக்கு கூட ஜனாதிபதி கருணை காட்டியது குறிப்பிடத்தக்கது. (அ-2)



கூடங்குளம் அணு மின்நிலையத்தை திறக்கக்கோரி நாமக்கல் மாவட்ட காங்கிரஸ் கட்சியினர் அண்ணாதுரை சிலை முன் கண்களில் கறுப்புத்துணி கட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதைப் படத்தில் காணலாம்.

# பாகிஸ்தான் சபாநாயகர் அழைத்தார்; மக்களவை சபாநாயகர் விரைந்தார்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பாராளுமன்ற சபாநாயகர் ஃபெ மிடா மிர்ஸாவின் அழைப்பை ஏற்று மக்களவை சபாநாயகர் மீராகுமார் நேற்றுமுன்தினம் பாகிஸ்தான் சென் றுள்ளார். அவருடன் முன்னாள் அமைச்சர்கள் பி.பி பைஷியா மற்றும் ஷனாவூஸ் ஹுசேன் உட்பட 6 பாராளுமன்ற உறுப்பினர்கள் சென்றுள்ளனர்.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி, பிரதமர் யூசுப் ரஸா கிலானி, பாராளுமன்ற சபாநாயகர் மிர்ஸா, நாடாளுமன்ற தலைவர் பரூக் நேக் ஆகி யோரை மீராகுமார் இன்று சந்திக்கிறார். தொடர்ந்து இந்த பாராளுமன்ற குழு லாகூருக்கு சென்று பஞ்சாப் ஆளுநர் லத்தீப் கோசா முதல்வர் ஷாபாஸ் ஷரீப் உள்ளிட்டோரை சந்திக்கவுள் ளனர்.

மேலும் இந்த குழு பெண்கள் அரசியல் கட்சியின் கூட்டத்தில் பங்கேற்பதுடன் இந்தியா-பாகிஸ்தான் பாராளுமன்ற நட்புறவு குழுவையும் சந்திக்கின்றனர். மேலும் டேக்ஸிலா பகுதியில் உள்ள புத்தமத பாரம்பரிய தளத்தை பார்வையிட உள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# இந்தியா- பாகிஸ்தான் அணு ஆயுத ஒப்பந்தம் 5 ஆண்டுகள் நீடிப்பு

(இஸ்லாமாபாத்)

அணு ஆயுதங்கள் தொடர்பான விபத்துக்களால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதற்கான இந்தியா-பாகிஸ்தான் ஒப்பந்தத்தை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீடித்துக் கொள்வதாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அணு ஆயுதங்களால் ஏற்படும் விபத்துக்களின் பாதிப்புக்களைக் குறைப்பதுதான் இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும். கடந்த 2007 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் செய்து கொள்ளப்பட்ட முதற்கட்ட ஐந்தாண்டு ஒப்பந்தம் இம்மாதத்துடன் முடிவடைவதால் தற்போது இந்த ஒப்பந்தத்தை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீடிக்க இருதரப்பும் ஒப்புக் கொண்டுள்ளன. (அ-2)

# நடுக்கடலில் நாகை மீனவர்கள் மீது சிங்கள மீனவர்கள் துணிகர தாக்குதல்

## 4 பேருக்கு அரிவாள் வெட்டு! பெற்றோல் குண்டு வீச்சு!

நாகை நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நாகை மீனவர்கள் மீது சிங்களவர்கள் சரமாரியாக பெற்றோல் குண்டு வீசினர். தமிழக மீனவர்கள் 4 பேரை அரிவாளால் வெட்டினர். மேலும் 4 பேரை இரும்புக்கம்பி,உருட்டுக் கட்டையால் தாக்கியுள்ளனர். இந்தக் கொடூர தாக்குதல் தமிழக மீனவர்களிடையே பதற்றத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 18 ஆம் திகதி 8 மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். இவர்களது படகு நேற்று முன்தினமிரவு 9 மணிக்கு கோடியக் கரைக்கு தென்கிழக்கே மீன்பிடித்துக் கொண்டிருந்தது. அப்போது 20 பைபர் படகுகளில் இலங்கை மீனவர்கள் வேடத்தில் அங்கு வந்தனர். அவர்கள் படகை நோக்கி 3 பெற்றோல் குண்டுகளை வீசினர்.

நாகை மீனவர்களின் படகை சுற்றிவளைத்தனர். சில படகுகளில் இருந்த சிங்களவர்கள் படகில் புகுந்து மீனவர்களை இரும்புக்கம்பி, கட்டையால் சரமாரியாக தாக்கினர். கெட்ட வார்த்தைகளால் திட்டி அரிவாளால் வெட்டினர். இதில் இவர்கள் தப்பிவிட்டனர்.

தாக்குதலில் காயமடைந்தவர்கள் நேற்று காலை நாகை வந்தனர்.

இதுவரை இலங்கை இராணுவம் மட்டுமே தாக்குதல் நடத்தி வந்தது. இப்போது சிங்களவர்களும் திடீர் திடீரென தாக்குதல் நடத்துவது தமிழக மீனவர்களிடையே அச்சத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்தி உள்ளது. (அ-2)

# போலியோ ஒழிப்பில் முதல்வர் மம்தாவுக்கு பில்கேட்ஸ் தம்பதியர் பாராட்டு



போலியோ ஒழிப்பில் மேற்கு வங்க மாநிலம் சிறந்து விளங்குவதாக அம்மாநில முதல்வர் மம்தா பானர்ஜிக்கு பில்கேட்சும் மனைவி மெலிண்டாவும் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

உலகம் முழுவதும் போலியோவை ஒழிப்பதற்காக மைக்ரோசொப்ட் நிறுவனர் பில்கேட்சும் அவரது மனைவி மெலிண்டாவும் தங்களுடைய கேட்ஸ் பவுண்டேசன் சார்பாக பணியாற்றி வருகின்றனர்.

போலியோ நோய் ஒழிப்பில் மேற்கு வங்க மாநிலத்தின் பங்கு அளப்பரியது. இந்தியாவில் தற்போது போலியோ நோய் இல்லாத நிலை நிலவி வருகிறது. விரைவில் உலகத்திலிருந்தும் இந்நோய் ஒழிக்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள சர்வதேச நாடுகளுக்கு அறிவுறுத்தி வருவதாகவும் பில்கேட்ஸ் தன்னுடைய கடிதத்தின் மூலம் தெரிவித்துள்ளார். (அ-2)

# நியூசிலாந்துடனான இருபது-20 தொடர் தென்னாபிரிக்கா வசம்



நியூசிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் போட்டியில் 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா வென்று தொடரையும் கைப்பற்றியது.

தென்னாபிரிக்க அணி நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 இருபது-20 கிரிக்கெட் போட்டி, 3 ஒருநாள்போட்டி மற்றும் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

மூன்றாவதும் கடைசியுமான இருபது-20 ஓவர் கிரிக்கெட் போட்டி நேற்று நியூசிலாந்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூ சிலாந்து அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதனையடுத்து தென்னாபிரிக்க அணியில் களமிறங்கிய தொடக்க ஆட்டக்காரர்களான ரிச்சர்ட்டு லெவி 11 ஓட்டங்களுடனும் அம்லா 33 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

பின்னர் களமிறங்கிய டுமினி 38 ஓட்டங்களும் மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்கவே 20 ஓவர் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 165 ஓட்டங்களை தென்னாபிரிக்கா எடுத்தது.

166 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து அணி களமிறங்கியது. கடைசிவரை கடுமையாகப் போராடிய அணி வீரர்கள் இருபது ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 162 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. நியூசிலாந்து அணியின் ஜெஸ்ஸி ரைடர் சிறப்பாக விளையாடி அரைச்சதம் அடித்தார் எனினும் 19ஆவது ஓவரில் ரைடர் ஆட்டமிழந்ததால் நியூசிலாந்து அணியின் வெற்றிவாய்ப்பு பறிபோனது.

தென்னாபிரிக்க அணியில் டி லாங்கே, மார்கல், பர்னல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரை தென்னாபிரிக்க அணி 2:1 என்ற கணக்கில் வென்றது.

# 4ஆவது ஒருநாள் போட்டியிலும் பாகிஸ்தானை வென்றது இங்கிலாந்து


பாகிஸ்தான்-இங்கிலாந்து அணிகளுக்கு இடையே நடைபெறும் 4ஆவது ஒருநாள் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில்வெற்றிபெற்றபாகிஸ்தான் அணி முதலில் துடுப்பாட்டத்தை செய்ய தீர்மானித்தது. அதன்படி 50 ஓவர் முடிவில் பாகிஸ்தான் அணி 237 ஓட்டங்களை எடுத்து அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

238 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணியின் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய அணித்தலைவர் குக், ஜுனைத் கான் வீசிய இன்னிங்ஸின் முதல் பந்தை பவுண்டரிக்கு விரட்டி, இரண்டாவது பந்தில் எல்பிடபிள்யூ ஆனார்.

அவரைத் தொடர்ந்து பீட்டர்சனுடன் ட்ராட் ஜோடி சேர்ந்தார். ட்ராட் 15 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வெளியேறினார். அதன்பின் மோர்கன் 15 ஓட்டங்களுக்கும் பட்லர் ஓட்டம் எதுவும் எடுக்காமல் வெளியேறினர்.

அதன்பின் பீட்டர்சனும்-கீஸ்வெட்டரும் ஜோடி சேர்ந்து பாகிஸ்தான் பந்துவீச்சை நிதானத்துடனும், அதே நேரத்தில் ஓட்டக் குவிப்பிலும் ஈடுபட்டு சிறப்பாக ஆடினர்.



கீஸ்வெட்டர் 43 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் துரதிர்ஷ்டவசமாக ரன் அவுட்டானார். மறுமுனையில் சிறப்பாக விளையாடிய பீற்றர்சன் 100 ஓட்டங்களைக் கடந்தார். 130 ஓட்டங்கள் எடுத்த நிலையில் சயீத் அஜ்மல் பந்தில் அப்துர் ரஹ்மானிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

கடைசி ஓவருக்கு 2 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றியென்ற நிலையில் 2ஆவது பந்தை பவுண்டரிக்கு விரட்டி பிரெஸ்னன் ஆட்டத்தை முடித்து வைத்தார்.

இதனால் இங்கிலாந்து 4 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தி தனது வெற்றி வரிசையை தக்கவைத்துக் கொண்டுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட இந்த தொடரில் 4 போட்டிகளில் வென்று கோப்பையை வென்றது இங்கிலாந்து அணி. ஆட்டநாயகனாக கெவின் பீட்டர்சன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்த தொடரின் சிறந்த ஆட்டக்காரராக இங்கிலாந்து அணியின் தலைவர் குக் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் முழுமையாக கைப்பற்றியிருந்தது. அடுத்து ஒருநாள் தொடரை இங்கிலாந்து முழுமையாக கைப்பற்றியுள்ளது. இந் நிலையில் 3 இருபது-20 போட்டித் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

# தோனிக்கு மனைவி ஆறுதல்

தொடர்ந்து சர்வதேச கிரிக்கெட் சபையின் கண்டனங்களுக்கு ஆளாகியுள்ள மகேந்திர சிங் தோனிக்கு அவரது மனைவி சாக்ஷி ஆறுதல் கூறியுள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணி கடந்த சில போட்டிகளில் தடுமாறி விளையாடிவருகிறது. இதற்கு அணித்தலைவர் மஹேந்திரசிங் தோனி மீது எதிர்ப்புக்கள் எழுந்துள்ளன.

சுழற்சிமுறையில் வீரர்களை தெரிவு செய்வது, களத்தடுப்பை நியாயப்படுத்துவது போன்ற காரணங்களால் தோனி மீது அனைவரும் எதிர்ப்புக்காட்டி வரும் நிலையில் அவருடைய மனைவி சாக்ஷி ஆறுதலான வார்த்தைகளை ருவிட்டரின் மூலம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சாக்ஷி ருவிட்டரில் உங்களை (தோனி) பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது குறித்து கவலைப் படாதீர்கள். உங்களின் வெற்றிக்கு எப்போதும் நான் ஆதரவாகவுள்ளேன்.



தற்போது நிலைவிரும் சூழ்நிலை ஒரு நாள் கண்டிப்பாக மாறும். தற்போதைய நிலையில் உங்களை இகழ்பவர்கள் மீண்டும் புகழும் நிலைவரும் என்று அவர் கூறியுள்ளார்.

# பொன்டிங்கை பின்பற்றி ஓய்வு பெறுவாரா சச்சின்?

அவுஸ்திரேலிய வீரரும், முன்னாள் அணித்தலைவருமான ரிக்கி பொன்டிங் ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ள நிலையில், அதைப் பின்பற்றி தனது ஓய்வையும் சச்சின் அறிவிக்க வேண்டும் என்று முன்னாள் விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்டு நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஓராண்டாகவே சரியாக விளையாடாத சச்சின் டெண்டுல்கர் தொடர்ந்து அணியில் இடம்பெற்று வருவது அவரது நூறாவது சதத்துக்காகத்தான் என்று பலரும் கூறும் நிலை வந்துவிட்டது.

இந்த ஆட்டத்தில் எடுத்துவிடுவார். அடுத்த ஆட்டத்தில் எடுத்துவிடுவார் என்று ஒருவரும் கடந்துவிட்டது.

நூறாவது சதத்தை எடுத்துவிட்டால் எங்கே தன்னை அணியிலிருந்தே எடுத்துவிடுவார்களோ என்ற பயத்தில்தான் சச்சின் சரியாக ஆடுவதில்லை என்று சில நிபுணர்கள் கிண்டல் அடிக்கின்றனர்.

சச்சின் டெண்டுல்கர் தன்னை ஒருமுறை சுய பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் அவரால் 2015 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் விளையாட முடியுமா என்று யோசிக்க வேண்டும். இளைஞர்களுக்கு வழிவிட்டு தானாக விலகிக்கொள்வது மிகவும் நல்லது என்று சௌரப் கங்குலி கூறியுள்ளார். இதே கருத்தைத்தான் கபில்தேவும் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் முத்தரப்புக் கிரிக்கெட்டில் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள சச்சின் மொத்தமாகவே 90 ஓட்டங்களைத்தான் எடுத்துள்ளார். இந்த நிலையில் அவர் அணியில் தொடர வேண்டுமா என்பனை அவரே முடிபெடுக்க வேண்டிய தருணம் இது.

# வாயை மூடிக்கொண்டு... கிரிக்கெட் மட்டும் விளையாடுங்கள்...



அவுஸ்திரேலியாவில் தொடரும் தோல்விகள்... தேவையில்லாமல் ஒருவருக்கொருவர் மாறிமாறிச் சொல்லும் குற்றச்சாட்டுக்கள்.... என்னதான் நடக்கிறது இந்திய அணிக்குள்... கடந்த ஏப்ரல் மாதம் (உலகக் கோப்பை இடம்பெற்ற இந்திய அணி) இருந்த இந்திய அணிக்கும், தற்போதுள்ள இந்திய அணிக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன.

கிட்டத்தட்ட அதே வீரர்கள் அவுஸ்திரேலியத் தொடரிலும் இடம்பெற்றுள்ளனர். ஆனால், அன்று இந்திய அணியிடம் இருந்த தன்னம்பிக்கை எங்கே போனது? அந்நிய மண்ணில் தொடர் தோல்விகளைச் சந்தித்துவரும் இந்திய அணி எப்போது தான் மீளும் என இந்திய அணி ரசிகர்கள் கேட்கிறார்கள்.

மூத்த வீரர்கள் சரியாக களத்தடுப்பு செய்வதில்லை என்பது அணித்தலைவர் தோனியின் குற்றச்சாட்டு. தோனியின் இந்தக் கருத்துக்கு சேவாக் மறுப்புத் தெரிவித்துள்ளார். இதுபற்றி செய்தியாளர்கள் சேவாக்கிடம் கேட்டதற்கு கடந்த போட்டியில் நான் பிடித்த பிடி என்னுடைய களத்தடுப்பு திறமைக்கு சிறந்த சான்று. கடந்த பத்து வருடமாக என்னுடைய களத்தடுப்பில் எந்த மாற்றமும் இல்லை என்று பதிலளித்தார்.

தோனி சுழற்சி முறையில் களமிறக்க மூத்த வீரர்களின் களத்தடுப்பு ஒரு காரணம் என்று கூறியிருந்தார். அதுபற்றி உங்கள் கருத்து என்ன என சேவாக்கிடம் கேட்டதற்கு தோனி அவ்வாறு எங்களிடம் கூறவில்லை. இளம் வீரர்களுக்கு வாய்ப்பு கொடுக்க சுழற்சி முறையில் விளையாடுவோம் என்று தான் கூறினார் என பதிலளித்தார்.

இப்படி தேவையில்லாமல் ஒருவருக்கொருவர் மாறிமாறிச் சொல்லும் குற்றச்சாட்டுக்கள் அணியின் நம்பகத் தன்மையை குறைக்கிறது. கோடிக்கணக்கான ரசிகர்களால் அந்நிய மண்ணில் தொடரும் தோல்வியை சகித்துக் கொள்ள முடியவில்லை. இந்த ரசிகர்களுக்காக இந்திய அணி இனிவரும் போட்டிகளில் எப்படி வெற்றி பெறுவது என்பது குறித்து ஆலோசனை செய்வதே நல்லது.

குறைசொல்லும் பழக்கத்தை விட்டு விட்டு, ஆக்கபூர்வமாக செயற்பட்டு இந்தியாவிற்கு பெருமை தேடித்தரும் வழியில் விளையாட வேண்டுமே தவிர அடுத்தவர்கள் குறைசொல்லும் அளவிற்கு விளையாடக்கூடாது. அணியில் விருப்பம் இல்லாமல் விளையாடுவதற்குப் பதிலாக விருப்பம் உள்ளவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்து அணியை திறம்பட நடத்தலாம்.

எப்போதும் தன்னைச் சாந்தப்படுத்திக் கொள்ளும் அணித்தலைவர் தோனி இக்கட்டான நிலையில் அணியை வழிநடத்துவது குறித்து யோசிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. ஓய்வின்றி விளையாடி வருகின்றோம் என்று கூறினால் அணி நிர்வாகத்திடம் ஓய்வு கேட்டு சிறிது நாட்கள் கழித்து முழு மனதுடன் இறங்கி விளையாடலாமே.

இந்தியாவில் உள்ள அத்தனை கோடி ரசிகர்களும் இந்திய அணியின் தன்னம்பிக்கையைத்தான் விரும்புகிறார்கள் தவிர அணி தொடர்ந்து வெற்றிகளை மட்டும் பெற வேண்டும் என்பது பொருள் அல்ல. விளையாட்டில் வெற்றி தோல்வி சகஜம் தான். ஆனால் தோல்வியே எப்போதும் சகஜமாகி விடக்கூடாது என்பதுதான் பொருள்.

எப்படியோ தொடரும் கருத்து வேறுபாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு விளையாட்டில் மட்டும் கவனம் செலுத்தினால் சரி.

# 95 ஆயிரம் வாக்காளர்களிடம் தேசிய அடையாள அட்டை இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். தேர்தல் மாவட்டத்தில் 95 ஆயிரத்து 860 பேர் இதுவரை தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொள்ளவில்லை என யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் பொ. குகநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர்களின் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்கள்ள உள்ளடக்கிய யாழ். தேர்தல் மாவட்டத்தில் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம் 95 ஆயிரத்து 860 பேர் இதுவரையில் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளாது இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்ளாமைக்கான காரணங்களைக் கண்டறிவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நேற்றுமுன்தினம் 21 ஆம் திகதி பிரதேச செயலர்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர்களுக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில் தங்களால் சிபார்சு செய்து அனுப்பப்பட்ட பீ சீ படிவத்தில் வாக்காளருடைய பெயர்களு டன் தேசிய அடையாள அட்டை இலக்கங்களைத் திருத்துவதற்காக அல்லது உட் சேர்ப்பதற்காக வாக்காளரது தேசிய அடையாள அட்டை இலக்கங்களை வாக்காளர்களிடம் இருந்து பெற்றோ அல்லது தங்கள் பதிவில் இருந்து பெற்றோ 7 நாட்களுக்குள் அனுப்பி வைக்கவும் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

# இலங்கை - மதுரைக்கு இடையில் நேரடி விமான சேவை ஆரம்பமாகும்

இலங்கையிலிருந்து மதுரைக்கு நேரடி விமான சேவையை ஆரம்பிப்பது தொடர்பாக ஆய்வு செய்ய இலங்கை விமான சேவை அதிகாரிகள் விரைவில் மதுரை செல்லவுள்ளனர். மதுரை விமான நிலையம் சர்வதேச தரத்துடன் இந்திய ரூபாயில் 150 கோடியில் புதுப்பிக்கப்பட்டு புதிய வடிவில் இயங்கி வருகிறது.

இங்கு சர்வதேச விமானப் போக்குவரத்துக்குத் தேவையான உட்கட்டமைப்பு சுங்க வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

இருப்பினும் மதுரைக்கு விமானப் போக்குவரத்தைத் தொடங்குவதில் சர்வதேச விமான நிறுவனங்கள் தயக்கம் காட்டி வருகின்றன.

இந்நிலையில் இந்தியாவுக்கான இலங்க்கைத் தூதர் பிரசாத் காரியவசத்தை டில்லியில் விருதுநகர் எம்.பி. மாணிக்கம் தாகூர் மற்றும் தொழில் வர்த்தக சங்க நிர்வாகிகள் சந்தித்தனர்.

அப்போது இலங்கையில் இருந்து மதுரைக்கு நேரடி விமான சேவை தொடங்க வலியுறுத்தினார்.

இந்நிலையில் இலங்கைத் தூதர், மாணிக்கம் தாகூர் எம்.பியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு மதுரைக்கு சர்வதேச விமானம் இயங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வுசெய்ய இலங்கை விமான சேவை நிறுவன அதிகாரிகள் இந்த வாரம் மதுரை வருவதாக தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் இருந்து மதுரைக்கு இயக்கப்படும் முதல் விமானத்தில் தானும் மதுரை வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை-மதுரை விமான போக்குவரத்து தொடர்பாக இரு நாடுகளிடையே ஏற்கெனவே ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

அதேபோல் அரபு நாடுகளில் இருந்தும் மதுரைக்கு விமானம் இயக்குவது தொடர்பாக அந்நாடுகளின் விமான நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு இந்திய மத்திய விமான போக்குவரத்து அமைச்சர் அஜித் சிங்கை, மாணிக்கம் தாகூர் எம்.பி. கேட்டுக் கொண்டுள்ளார். (எ-11)

# ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் 177-வது ஜெயந்தி விழா இன்றும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையும் 17, மருதனார்மடம் வீதி, உரும்பிராய் சந்தி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இராமகிருஷ்ணமிஷன் நலன்புரி நிலையத்தில் நடை பெறவுள்ளது.

இவ் விழாவில் அனைவரும் கலந்து கொண்டு பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருளைப் பெறுமாறு வேண்டப்பட்டுள்ளது. (எ-11)


## ஆஸ்திரேலியா குடும்ப 5 வருட விசா

**இன்னும் 3 தினங்களில் அரிய சந்தர்ப்பம் ஒன்று கைநழுவப் போகின்றது. ஆம் ஆலோசனையின்**

**இறுதிநாள் 25.02.2012 ஆகும்.**

**இதனை முன்னிட்டு**

**இன்றிலிருந்து எதிர்வரும் சனிக்கிழமை வரை 3 தினங்களும் காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை எமது விசேட கருமபீடம் சேவைக்காக காத்திருக்கும்**

A. பிரவீணா
முகாமையாளர்

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட**

37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



தொ.பே.: 0212219016, 0756438553

(7556)


# மனித உரிமை ஆணைக்குழு...

வலியுறுத்தவுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கு தேவையான நிதியில் 80 சதவீதமான நிதியை அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளே வழங்கி வருகின்றன. அத்துடன் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக் குழுவில் முக்கிய பதவிகளில் உள்ளவர்களில் பெரும்பாலானோர் அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளின் வெளிவிவகார சேவைகளில் பணியாற்றியவர்கள் எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் நிலைப்பாடு மிகவும் கவலையளிப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபை மனித வுரிமைகள் ஆணைக்குழுவின் 18ஆவது கூட்டத்தொடர் கடந்த செப்ரம்பர் மாதம் இடம் பெற்ற போதும், இத்தகைய தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டிருந்த போதிலும் பல நாடுகளின் கோரிக்கையை அடுத்து அம் முயற்சி இறுதியில் கைவிடப்பட்ட து.

ஆயினும், இக்கூட்டத்தொடரில் ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி தாமரா குணநாயகம் ஐ.நா. சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் வெளிப்படைத்தன்மை தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தமை தெரிந்ததே.

ஐ.நா. சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டு வரப்படவுள்ள நிலையிலேயே அரசாங்கம் இம்முயற்சியை மேற்கொண்டுள்ளது. (எ-11)

# 100 ஆர்.பி.ஜி...

வெடிப்புச் சம்பவம் அருகிலுள்ள வீடொன்றிலிருந்து ஏவப்பட்ட வெடிகுண்டு வந்து விழுந்ததாலேயே ஏற்பட்டுள்ளது என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆர்.பி.ஜி. ரக வெடி பொருளின் பாகமொன்றினை சூடாக்கும் போதே அவ் வெடிபொருள் அங்கிருந்து சுமார் 100 மீற்றர் தூரம் வரையுள்ள வீட்டில் சென்று வீழ்ந்து வெடித்ததாக வும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-11)

# கூட்டமைப்பின்...

கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைப் பரிந்துரைகளை உரிய முறையில் அமுல்படுத்தினால் குற்றச்சாட்டுக்களை முறியடிக்க முடியும்.

சர்வதேசரீதியாக எழுப்பப்படும் குற்றச்சாட்டுக்களை முறியடிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பங்களிப்பு இன்றி இறுதித் தீர்வினை எட்ட முடியாது எனவும் கூட்டமைப்பின் பங்களிப்பு இல்லாத அரசியல் தீர்வுத் திட்டம் பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தும் எனவும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

முதலில் 13 ஆம் திருத்தச்சட்டத்தைத் தாண்டிய தீர்வுத் திட்டத்தை வழங்குவதாக அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்தது.

பின்னர் செனட் சபை அமைப்பதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. வடக்கு கிழக்கு மக்களுக்கு செனட் சபை அவசியமில்லை.

தற்போது நாடாளுமன்ற தெரிவுக் குழுவை அமைப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

வடக்கு கிழக்கு மக்களின் பிரதான பிரதிநிதிகளாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் செயற்படுகின்றனர்.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை புறந்தள்ளி எட்டப்படும் தீர்வுகள் நிரந்தரமானதாக அமையாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# ஈரானிலிருந்து...

சுசில் பிரேமஜெயந்த நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

மேற்படி நெருக்கடி காரணமாக ஈரானிலிருந்து எரிபொருள் இறக்குமதி செய்ய முடியாதுள்ளதாக அவர் தெரிவித்தார்.

உலக சந்தையில் எரிபொருள் விலை குறையும்போது இலங்கையிலும் எரிபொருள் விலை குறைக்கப்படும் என அமைச்சர் உறுதியளித்தார். (எ-11)

# இலங்கைக்கு எதிரா...

பிந்திய நிலைப்பாட்டை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது எனவும் தெரிவித்த அமைச்சர் பீரிஸ், இந்த நடவடிக்கையானது இலங்கையின் பிரச்சினையை சர்வதேச மயப்படுத்துவதாக அமைந்துவிடும். இந்தத் தீர்மானம் பாதிப்பற்றது எனக் கூறி அமெரிக்கா முன்னெடுக்கும் இந்த நடவடிக்கையை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் குறிப்பிட்டார்.

இரண்டு விடயங்களை அடிப்படையாகக் கொண்டதாகவே இந்தத் தீர்மானத்தை அமெரிக்கா தயாரித்திருப்பதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒன்று கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதில் காணப்படும் கால தாமதம்.

இரண்டு – பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை அரசின் நிலைப்பாடு.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட அமைச்சர் பீரிஸ் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு கால அவகாசம் அவசியமாக இருப்பதாகக் குறிப்பிட்டார். (எ-11)

# இலங்கையில் கண்...

கொண்டிருந்த உலகப் புகழ்பெற்ற பெண் ஊடகவியலாளர் மேரி கொல்வின் சிரியாவில் நடைபெற்ற போர் தொடர்பான செய்தி சேகரிக்கச் சென்றவேளை எறிகணைத் தாக்குதலில் உயிரிழந்தார். (இது தொடர்பான விரிவான செய்தி உள்ளே)


## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- கணனி தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பாளர்கள், பயிலுநர்கள் (இருபாலாரும்)
- ஓப் செட் இயந்திர இயக்குநர்கள் மற்றும் பயிலுநர்கள் (ஆண்கள்)
- பத்திரிகை மடிப்பவர்கள் (ஆண்கள்)

பொருத்தமானவர்கள் தமது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை (தொலைபேசி இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்)

**மனிதவள முகாமையாளர்**
**வலம்புரி,**
**இல. 3, 2-ம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு நேரிலோ அன்றி தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

குறிப்பு: யாழ் நகருக்கு அண்மித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## ஆஸ்திரேலியா குடும்ப விசா

ஆலோசனையின்

**இறுதிநாள் 25.02.2012**

வவுனியா, மன்னார் மாவட்ட மக்களின் நன்மை கருதி திசைகாட்டியின் இடம் பெயர் சேவை நடைபெறுகின்றது.

S. சஜீந்திரன்
வடக்கு மாகாண முகாமையாளர்

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட**

0773454304 எந்நேரமும்
115A, இரத்தினபுரம் வீதி,
கிளிநொச்சி.



தொ.பே.: 021 2285544

(7556)


... வலம்புரி அன்...ரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.